# தமிழரசு

1-10-1990 ரூ.1







கன்னியாகுமரியில் முக்கடல் கூடும் இடத்தில், விவேகானந்தர் பாறைக்கு அருகில் உள்ள பாறையில், அமைய இருக்கும் திருவள்ளுவர் சிலையின் அமைப்புப் பணியை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 6.9.90 அன்று தொடங்கி வைத்தார்.



# மக்கள் சக்தியைத் திரட்டிய அண்ணல்



—பேரறிஞர் அண்ணா

நாம் அரசுரிமை இழந்திருந்தபோது காந்தியடிகள் பிறந்தார். அவர் மறையும்போது நாம் அரசுரிமை பெற்று வாழ்கிறோம்.

அவர் பிறந்தபோது நமது நாடு, உலகிலே இழிவும் பழியும் தாங்கிய நாடாக இருந்தது. அவர் மறைந்திடுவதற்கு முன்னம், மாஸ்கோவிலிருந்து நியூயார்க் வரையிலே உள்ள சகல நாடுகளிலும் நமது விடுதலையை விளக்கும் விருது பெற்று, தூதுவர்களும், பிரதிநிதிகளும் வீற்றிருக்கும் நிலை உண்டாகி விட்டது.

அவர் பிறந்தபோது உலக மன்றத்திலே, நமக்கு இடம் கிடையாது. இன்று நாம் இருந்தால் உலக மன்றத்திலே புதியதோர் பலம் என்று பல நாடுகள் எண்ணும் நிலை ஏற்பட்டுவிட்டது.

அவர் பிறந்தபோது, கோயில்கள் மூடிக்கிடந்தன. தீண்டாதார் என்று தீயோரால் அழைக்கப் பட்டுவந்த தியாகப் பரம்பரையினருக்கு அவர் கண் மூடுமுன், மூடிக்கிடந்த கோயில்கள் எல்லாம் திறந்துவிட்டன.

அவர் பிறந்த காலத்திலே, சூரியனே அஸ்தமிக்க அஞ்சும்படியான அளவுள்ளதாக இருந்தது, பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்; அந்தச் சாம்ராஜ்யத்தின் ஆதிக்கப் போக்கு அழிந்ததைக் கண்டான பிறகே அவர் கண்ணை மூடினார்.

அவர் பிறந்த நாட்களிலே, பிரிட்டனிலிருந்து, கவர்னர்களும் மற்ற அதிகாரிகளும் இங்கு வந்த வண்ணம் இருந்தனர் ஆள்வதற்கு- அடிமை இந்தியாவை விட்டு வெளியே அவர்கள் போகும் காட்சியைப் பார்த்துவிட்ட பிறகே, உத்தமர் உயிர் நீத்தார்.

இவ்வளவையும், அவர் மந்திரக் கோல் கொண்டோ, யாக குண்டத்தருகே நின்றோ சாதிக்க வில்லை - மக்களிடையே வாழ்ந்து மக்களின் மகத்தான சக்தியைத் திரட்டிக் காட்டிச் சாதித்தார். புதிய வாழ்வு தந்தார். புதிய அந்தஸ்து தந்தார்.

அவர் சாதித்தவைகள் மகத்தானவை, ஆனால் அவர் சாதிக்க எண்ணியிருந்தவை, வேறு பல, அவை மேலும் மகத்தானவை.

(1948-இல் அண்ணல் மறைந்தபோது வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து)

தமிழரசு

## இந்த இதழில்...


தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக்கூட்டம் ... 2

ஊரக வளர்ச்சித் துறையின் அரிய பணிகள்
—மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி ... 9

குவலயம் போற்றக் குறள் தந்த கோமானுக்குக் குமரி முனையில் நினைவுச்சின்னம்
—திரு. மாமூலன் ... 13

மாபெரும் மனிதாபிமான பிரச்சினை
திரு. செ. ராம்தாஸ் இ.ஆ.ப. ... 17

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக்குழு ... 21

நுகர்வோர் குறை நீங்க மக்களும் அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் ... 23

சிறுநீரக நோய் இயல் பிரிவின் சிறப்பான சேவை ... 24

மின்சக்தி - தேவை - நிருவாகம் - சில கருத்துரைகள்
—திரு. கு.சிவஞானம் இ.ஆ.ப.(ஓய்வு) ... 33

அண்ணா அருங்காட்சியகம் ... 41


அண்ணல் காந்தியடிகளின் 122-வது பிறந்த நாளை யொட்டி (அக்டோபர் 2) அவரது திருவுருவப்படம் முகப்பை அணி செய்கிறது.


திருவள்ளுவர் ஆண்டு 2021
புரட்டாசித் திங்கள் - 15

மலர்:21 இதழ்:7
1-10-1990




# இந்தியாவின் ஒற்றுமையைக் கட்டிக் காப்போம்!

## மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு வி.பி.சிங்

"காஷ்மீரத்தில் இடர்ப்பாடான நிலையிலும் அம்மாநில அரசு நிர்வாகம் உண்மையான பிரச்சினைகளைக்கவனித்து வருகிறது.

இருப்பினும் அங்குள்ள பயங்கரவாதிகளுக்கும், பிரிவினைவாதிகளுக்கும் எல்லைக்கப்பால் இருந்து உதவி வந்து கொண்டிருப்பதால் பிரச்சினைகள் உருவாகின்றன.

காஷ்மீர் தனியாகப்பிரிந்து விடும் என்ற ஒரு உணர்வு சில மாதத்திற்கு முன்பு இருந்தது. அந்த உணர்வு இப்போது இல்லை. காஷ்மீர் பிரச்சினையை ஒரு சர்வ தேசப் பிரச்சினையாக ஆக்கி விடலாமென்று சொல்லப்பட்டது. அதுவும் இப்போது நடைபெறவில்லை. பஞ்சாப்பில் பயங்கரவாதிகள் தொடர்ந்து விறுவிறுப்பாகச்செயல்பட்டு வருகிறார்கள். எனினும் காவல் துறையினர் சில குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றுள்ளார்கள்.

பஞ்சாப் மக்களின் குறைகளை அகற்ற மாநில அரசு பல்வேறு சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அம்மாநில முழுவதும் கலவரப்பகுதியாக அறிவிக்க வகை செய்யும் 59-வது அரசியல் சட்டத் திருத்தம் திரும்பப் பெறப்பட்டது. இராணுவத்தை தொடர்ந்து வெளியேறிய சீக்கியர்களுக்கு மறு வாழ்வு கிடைக்க வழி செய்யப்பட்டது. இப்போது பஞ்சாப் மாநிலத்தில் தேர்தல் நடத்துவதற்கான தகுந்த சூழ்நிலை இல்லை என்ற கருத்து நிலவுகிறது. தேர்தலை நடத்துவதற்கு முன்பாக சில அரசியல் நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டியுள்ளது. அதன் பின்னர் தேர்தல்களை நடத்தலாம்.

ஆயினும் ஜனநாயக வழிமுறை ஒன்றே வழி. அதற்கு மாற்றுவழி எதுவும் இல்லை.

இராமஜென்மபூமி, பாபர் மசூதி விவகாரம் பற்றி சுமூகமான தீர்வு ஒன்று காண்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அரசு எல்லாத் தரப்புத் தலைவர்களோடும், எல்லா சமயத் தலைவர்களோடும் தொடர்பு கொண்டுள்ளது. இதில் கருத்து வேறுபாடு இருக்குமானால் நீதிமன்றத்தீர்ப்பையே நாம் நாட வேண்டும். அரசைப் பொறுத்த மட்டில் நீதிமன்றத் தீர்ப்பையொட்டி நடந்து கொள்ளும். இளைஞர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

நாட்டில் ஒற்றுமையை உறுதிப்படுத்தும் வகையில் கூட்டாட்சித்தன்மையை உருவாக்குவது என்பதில் தேசிய முன்னணி அரசிற்கு உறுதிப்பாடு உள்ளது.

படித்த இளைஞர்களின் வேலையில்லாத்திண்டாட்டத்தைப்போக்கிட முன்னுரிமை தரப்படும்."

**(தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து)**




# தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்போம்!

## மாண்புமிகு முதல்வர் கலைஞர்

தமிழக மக்கள் மற்றும் அரசின் சார்பில் உங்கள் ஒவ்வொருவரையும் மனமார வரவேற்கிறேன். பல ஆண்டுகளுக்குப்பிறகு, தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் கூட்டம் டில்லிக்கு வெளியே நடப்பது இதுதான் முதல் தடவையாகும். இந்தக் கூட்டம் சென்னையில் நடப்பது குறித்து நாங்கள் பெரிதும் பெருமையடைகிறோம். இந்தக் கூட்டத்தைச் சென்னையில் நடத்துமாறு நாங்கள் விடுத்த அழைப்பைப் பிரதமர் சிறிதும் தயக்கமின்றி ஏற்றுக்கொண்டதற்காக, அவருக்கு நன்றி செலுத்துகிறோம். இந்தக் கூட்டம் ஒரு தென்மாநிலத்தின் தலைநகரில் கூடுகிறது என்பதே, தேசிய ஒருமைப்பாட்டுக்குஒரு பயனுள்ள எடுத்துக் காட்டாகும்.

தேசிய ஒருமைப்பாட்டுக் குழு பல ஆண்டுகளாகச் செயலொடுங்கிக் கிடந்தது. அதைப் புதுப்பித்து அமைத்து, அதன் துவக்கக் கூட்டத்தை நடத்திய ஆறு மாத காலத்துக்குள் இரண்டாவது கூட்டத்தையும் நடத்த முன்வந்ததற்காக மத்திய அரசுக்கும், பிரதமருக்கும் எமது பாராட்டுக்கள். இந்தக் குழுவானது இந்தியாவின் ஒட்டுமொத்தமான கூட்டுத் தலைமையை மட்டுமின்றி, அதன் ஒட்டுமொத்தமான விவேகத்தையும் பிரதிபலிப்பதாகும். இத்தகைய ஒரு அமைப்பினிடமிருந்து மக்கள் எதிர்பார்க்கும் எதிர்பார்ப்புகள் அனைத்தையும் நாம் பூர்த்தி செய்ய முடியும் என நம்புகிறேன்.

நமது நாட்டின் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் கட்சி அரசியல்களுக்கு அப்பாற்பட்டது என்று நாங்கள் எப்போதுமே கருதி வந்துள்ளோம். இந்தக் குழுவில் நாம் நடத்தும் விவாதங்கள் இந்தப் பிரச்சினைகளுக்கு எந்த வகையிலாவது தீர்வு கண்டாக வேண்டும் என்ற நமது ஒருமித்த உறுதியை வெளிப்படுத்தும் என்பதில் எனக்கு யாதொரு ஐயமுமில்லை. பஞ்சாபிலும், காஷ்மீரிலும் காணப்படும் வன்முறைகள், வெளிச்சக்திகளால் தூண்டிவிடப்பட்டு, நீட்டிக்கப்பட்டு வருபவையாகும். நாட்டின் பாதுகாப்புக்கு இந்த அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலைமையில், நிலைமையைச் சமாளிப்பதற்காக அரசு மேற்கொள்ளும் நிர்வாக ரீதியிலான முயற்சிகளிலும், அரசியல் ரீதியான முயற்சிகளிலும் அதன் கரங்களைப் பலப்படுத்த வேண்டியது எல்லா அரசியல் கட்சிகளின் கடமையுமாகும்.

நமது அரசு மதச்சார்பின்மைக் கொள்கையில் உறுதியான பற்றுக் கொண்டுள்ளதாகும். பல சமயத்தினரும், பல இனத்தவரும், பல மொழியினரும் கொண்டது நம்முடைய நாடு. இத்தகைய ஜனநாயக நாட்டில், சிறுபான்மையினரின் உணர்வுகளையும், நலன்களையும் பெரும்பான்மையினர் மதித்து, அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து வருவர் என்ற உறுதியை - நம்பிக்கையை சிறுபான்மையினருக்கு ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். சிறுபான்மையினருக்கு அச்ச உணர்வு ஏற்படாதபடி பார்த்துக்கொள்வதில், பெரும்பான்மையினர் தீவிர கவனம் செலுத்தி வரவேண்டும். அவர்களது உணர்வுகளைப் புண்படுத்தக் கூடிய நடவடிக்கைகளைத் தவிர்த்துவர வேண்டும். தமிழகத்தில், இங்குள்ள எல்லா சமயத்தினரின் பிரதிநிதிகளையும், மொழியினரின் பிரதிநிதிகளையும் கொண்ட சிறுபான்மையினர் கமிஷன் ஒன்றை அமைத்திருக்கிறோம். இது தேசிய ஒருமைப்பாட்டுக் கமிஷனுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய செய்தியாகும்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கு இப்போது ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களைப்பற்றிக் கவனம்

செலுத்தும் அதே சமயத்தில், வருங்காலத்தில் நமது நாட்டைப் பிளவுபடுத்தி, நாடு சீர்குலையும்படி செய்துவிடக் கூடிய அம்சங்கள் குறித்தும் எச்சரிக்கையாக இருந்து அவற்றைத் தவிர்த்தாக வேண்டும். ஒற்றுமை என்பது ஒரே மாதிரியாக இருப்பது அல்ல என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். வேறுபாடுகளுக்கிடையில் நல்லிணக்கம் காண்பதன் மூலமே ஒருமைப்பாடு சாத்தியமாகும்.

அடுத்தபடியாக, மொழிப் பிரச்சினை பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். கல்வி முறையிலும், மாநில நிர்வாகத்திலும் பிரதேச மொழிகளுக்கு உரிய பங்கு அளிக்க வேண்டும் என்று விரும்புபவர்களுடன் எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. இருப்பினும், இணைப்பு மொழி என்ற வகையிலும், நமது மக்களுக்கு - குறிப்பாக விஞ்ஞானிகள், தொழில்நுட்ப நிபுணர்கள், தொழிலதிபர்கள் ஆகியோருக்கு - வெளி உலகம் பற்றித் தெரிந்து கொள்வதற்கான சாளரம் போல் பயன்படும் சாதனம் என்ற வகையிலும் ஆங்கிலத்தின் இடத்தை நாம் புறக்கணித்துவிட முடியாது. இந்தப் பின்னணியில்தான், தமிழகத்தில் நாங்கள் இருமொழித் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளோம். இந்தத் திட்டத்தின்கீழ் தாய்மொழியும், ஆங்கிலமும் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள எல்லா தேசிய மொழிகளையும் மத்திய அரசின் ஆட்சி மொழிகளாக்க வேண்டும், அதுவரை ஆங்கிலம் நீடித்து வரவேண்டும் என்பதே மத்திய அரசுக்கு நாங்கள் கூறும் யோசனையாகும்.

மாநிலங்களுக்கிடையிலான கவுன்சிலை ஏற்படுத்தும் விஷயத்தில், தேசிய முன்னணி அளித்துள்ள தேர்தல் வாக்குறுதியைப் பிரதமர் தீவிரமாகச் செயல்படுத்தி வருவது குறித்துப் பாராட்டுகிறோம். இந்தக் கவுன்சிலின் முதல் கூட்டம் விரைவிலேயே நடத்தப்படும் என்று நம்புகிறோம். மாநிலங்கள் சம்பந்தப்பட்ட, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த எல்லா விவகாரங்களையும் பரிசீலிப்பதற்கும், விவாதிப்பதற்கும் வேண்டிய - போதிய அதிகாரம் இந்தக் கவுன்சிலுக்கு வழங்கப்படும் என்றும் நம்புகிறோம். மத்திய-மாநில உறவுமுறை குறித்துத் திட்டமிட்ட ரீதியில் ஒழுங்காகப் பரிசீலனை நடத்திவந்து, இந்தியாவில் உண்மையான கூட்டாட்சி முறையும், மாநிலங்களுக்கு இன்னும் அதிக சுயாதிகாரமும் உருவாவதற்கு ஏற்ற யோசனைகளைக் கூறுமாறும் இந்தக் கவுன்சில் பணிக்கப்படும் என்றும் நம்புகிறோம். தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்கு மிகவும் முக்கியமான விஷயமாகும் இது.

பிரதமர், சென்ற வாரம் சென்னை வந்திருந்த போது, மண்டல் கமிஷன் அறிக்கையை அமல் செய்வது என்ற முடிவுக்காக, நமது மக்கள் அவருக்கு அளித்த மகத்தான வரவேற்பு, இந்த நாடு முழுவதுமே நன்கறிந்த ஒன்றாகும். நமது சமூகத்தில் நீண்ட நெடுங்காலமாகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்டு வந்த பாகுபாடுகளைத் திருத்திக் கொள்ள நாம் தயாராயில்லை என்றால், வருங்காலத்தில் கடுமையான உட்பூசல்களை நாம் நிச்சயம் சந்திக்கவே நேரிடும். பல தரப்பட்ட நலன்களுக்கிடையில் விட்டுக் கொடுத்து நல்லிணக்கம் காண்பதன் மூலமே தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்த முடியும்; இத்தகைய பலதரப்பட்ட நலன்கள் இருந்து வருகின்றன என்ற யதார்த்தத்தைக் காண மறுப்பதன் மூலம் அல்ல!

தமிழ்நாட்டின் மாபெரும் கவிஞரும், தேச பக்தருமான பாரதிதாசனின் நூற்றாண்டு விழாவை இந்த ஆண்டு கொண்டாடி வருகிறோம். அவருடைய எழுச்சிமிகு கவிதைகளிலிருந்து சில வரிகளைக் கூறி, எனது வரவேற்புரையை முடித்துக் கொள்கிறேன்.

'மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சி கொள்!
அறிவை விரிவுசெய்! அகண்டமாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!
மானிட சமுத்திரம் நானென்று கூவு!
பிரிவிலை எங்கும் பேதமில்லை!
உலகம் உண்ண உண்! உடுத்த உடுப்பாய்!
புகல்வேன்; உடைமை மக்களுக்குப் பொது,
புவியை நடத்து! பொதுவில் நடத்து!'

—நாம் இங்கு நடத்தும் விவாதங்கள் வெற்றிகரமாய் அமையவேண்டுமென்று விழைகிறேன்.

**(தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய வரவேற்புரையிலிருந்து)**

**தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் பங்கு பெற்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினர்**



# தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டம்

**தே**சிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டம் 22.9.90 அன்று, சென்னையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டம், புதுடில்லிக்கு வெளியே நடைபெற்றது இதுவே முதல் தடவையாகும்.

'தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தைச் சென்னையில் நடத்தலாம்' என, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தெரிவித்த யோசனையின் பேரிலேயே இந்தக் கூட்டம், 'சென்னையில், அரசு தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள 'நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடத்தப்பெற்றது.

மொழிபெயர்க்கும் கருவிகள் அமைக்கப்பட்டிருந்தன; உடனுக்குடன் செய்திகளை அனுப்புவதற்காக ஹாட் லைன், ஃபேக்ஸ், டெலக்ஸ் போன்ற வசதிகள் செய்யப்பட்டிருந்தன. பத்தாவது மாடியிலிருந்தே வங்கக் கடலின் வனப்பை ரசிக்கத்தக்க வகையில், சிறப்புக் கண்ணாடிகள் பொருத்தப்பட்டிருந்தன.

இந்தியப் பிரதமர் அவர்கள், உறுப்பினர் யாருடனாவது தனித்துச் சந்தித்துப் பேசச் சிறப்பு அறை ஒன்றும் உருவாக்கப்பட்டிருந்தது.



மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு விமான நிலையத்தில் வரவேற்பளிக்கப்பட்டபோது...

ஆண்டுக்கு மூன்றுமுறை தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தைக் கூட்ட மத்திய அரசு முடிவெடுத்தது. இதற்கு முந்திய கூட்டம் இந்த ஆண்டு ஏப்ரல் 11-ஆம் நாளன்று டில்லியில் நடைபெற்றது.

இது - முதன்முதல் டில்லிக்கு வெளியே நடைபெறும் கூட்டம் என்பதால், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஆலோசனைப்படி, தேசிய ஒருமைப்பாடு மாநாடு நடைபெற ஒதுக்கப்பட்ட கட்டடத்தின் பத்தாவது மாடி சர்வ தேசத் தரத்திற்கு நிகரான பல்வேறு நவீன வசதிகள் உடையதாக்கப்பட்டது. குளிர்சாதன வசதி செய்யப்பட்டது. மிகப் பெரிய உணவருந்தும் அரங்கம் அமைக்கப்பட்டது. விலை உயர்ந்த தரைவிரிப்புகளோடு காட்சியளித்த இந்த அரங்கில் மாநாட்டுப் பிரதிநிதிகள் அமர்வதற்காக 160 நவீன சொகுசு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன.

இத்தகைய பணிகள் குறிப்பாக - பொதுப் பணித்துறை, டான்சி, எல்காட் போன்ற அரசு அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

இந்தியாவில் உள்ள அத்தனை மாநிலங்களிலிருந்தும் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்திற்குப் பிரதிநிதிகள் வருவார்களல்லவா? அவர்கள் தங்க வைக்கப்படச் சென்னை மாநகரில் உள்ள மிகப் பெரிய மூன்று ஓட்டல்களிலும், மாநில அரசு மற்றும் துறைமுகம் விருந்தினர் மாளிகையிலும் வசதி செய்து தரப்பட்டிருந்தது.

மாநாட்டு அரங்கிலும், ஏனைய இடங்களிலும் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மாநாட்டுப் பிரதிநிதிகளின் பயன்பாட்டிற்கென 250 கார்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.



தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் பங்கு பெற்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினர்.

சென்னையில் நடைபெற்ற தேசிய ஒருமைப் பாட்டுக் குழுக் கூட்டத்திற்கு மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்கள் தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க வருகை தருமாறு, தமிழ்நாடு அரசு மூலம் 129 பேருக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டிருந்தன. அவர்களில்- குழு உறுப்பினர்களான மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் அறுவர்.

தேசிய ஒருமைப்பாட்டுக் குழு உறுப்பினர் களில் ஒருவரான மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. பி.உபேந்திரா அவர்கள், வேறொரு மாநாடு காரணமாக வெளி நாடு சென்றிருந்ததால் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாத நிலை ஏற்பட்டது.

இவர்களைத் தவிர- தேசிய அளவில் அங்கீ கரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், மாநில அரசியல் கட்சிகள் ஆகியவற்றின் தலைவர்கள், மாண்புமிகு மாநில முதலமைச்சர்கள், ஒரு மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலில் இருந்தால்- அம்மாநிலத் தின் மேதகு ஆளுநர், யூனியன் பிரதேச ஆளுநர்கள் அல்லது முதலமைச்சர்கள், பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் வல்லுநர்கள், முக்கியப் பிர முகர்கள் ஆகிய குழு உறுப்பினர்கள் அனை வருக்கும் அன்பான அழைப்புகள் முறைப்படி அனுப்பப்பட்டிருந்தன.

தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுவதற்காக, 22.9.90 அன்று காலை 9.40 மணியளவில் தனி விமானத்தின் மூலம் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்கள் சென்னைக்கு வந்து சேர்ந்தார்; மேதகு தமிழக ஆளுநர் திரு. எஸ். பர்னாலா அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சி மேம் பாட்டுத்துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன்

## தமிழக முதல்வருக்கு

## இந்தியப் பிரதமர் நன்றி!

**22.9.90 அன்று காலை 10.40க்குத் தொடங்கிய தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டம் முடிய, இரவு 8 மணிக்கு மேல் ஆகிவிட்டது. அதன்பின், ஆளுநர் மாளிகையில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள், செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது:**

**''நான் தமிழக முதலமைச்சர் கருணாநிதி அவர்களுக்கும், அவருடைய அரசாங்கத்திற்கும் - தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தை மிகச்சிறந்த முறையிலே நடத்தியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா வகையிலும் மிகச் சிறப்பான முறையிலே வரலாற்றுச் சிறப்புடன் தென்னகத்தில் இந்தக் கூட்டம் நடப்பதற்கான ஏற்பாடுகளை அவர் செய்திருந்தார்!''**

அவர்களும் மாண்புமிகு தமிழக அமைச்சர்களும் மாலை கள் அணிவித்து மகிழ்வுடன் வரவேற்றார்கள்.

அரசு தலைமைச் செயலக வளாகத்தில் மட்டு மன்றி- போர் நினைவுச் சின்னத்திலிருந்தே வழி நெடுகிலும் பலவண்ணக் கொடிகள், வரவேற்புப் பதாகைகள் அழகு செய்தன. 'நாமக்கல் கவிஞர் மாளிகை'யின் பத்தாவது மாடியில், காலை 10.40 மணியளவில் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டம் தொடங்கியது.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் வரவேற்புரையோடு தொடங்கிய இக்கூட்டத்திற்கு, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் தலைமை தாங்கினார்.

# தேசிய ஒருமைப்பாட்டுக்

# குழுக் கூட்டத்தின் தீர்மானம்

தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் ஒருமனதாகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பட்டது.

அதன் விவரம் வருமாறு:-

வகுப்பு ஒற்றுமை குறித்து அமைக்கப்பட்ட துணைக்குழு கடந்த 18-ந் தேதி டெல்லியில் கூடி, செய்த பரிந்துரைகளை இந்தக் கூட்டம் பாராட்டி வரவேற்கிறது.

அதன்படி அயோத்தியில் ராமர் கோவில் அமைக்கும் இடம் பற்றியும் அதையொட்டி ஏற் பட்டு உள்ள பிரச்சினைகள் குறித்தும் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி எல்லோரும் திருப்தி அடையும் வகையில் சுமூகமான தீர்வு காணப்பட வேண்டும்.

இது சம்பந்தமான வழக்கை கோர்ட்டு விரைவு படுத்த வேண்டும். கோர்ட்டு முடிவை அனைவரும் மதிக்க வேண்டும்.

ராமர்கோவில் - பாபர்மசூதி விவகாரத்தைச் சுமூகமாகத் தீர்க்க இரு மதங்களைச் சேர்ந்த தலைவர்களும் முயற்சிக்க வேண்டும்.

இந்த விஷயத்தில் காஞ்சி மடாதிபதி, லக்னோ முஸ்லீம் மதத்தலைவர் அலிமியான் நட்வா ஆகியோர் எடுத்துள்ள முயற்சியை இக்கூட்டம் வர வேற்கிறது.

மத்திய உள்துறை அமைச்சர் இந்தத்தலைவர் களுடனும் மற்றும் இரு மதங்களைச் சேர்ந்த மதிப்பு மிக்க தலைவர்களுடனும் பேச்சு நடத்துவார்.

அதற்கிடையில் பதற்றத்தை உருவாக்க எந்த முயற்சியும் மேற்கொள்ளக்கூடாது. அமைதியும், வகுப்பு ஒற்றுமையும் ஏற்பட மதத்தலைவர்களும் அரசியல் கட்சிகளும் நல்லெண்ணம் கொண் டோரும் ஒத்துழைக்குமாறு தேசிய ஒருமைப் பாட்டுக் குழுக்கூட்டம் வேண்டுகோள் விடுக்கிறது.

தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் பங்கு பெற்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினர்.



**TNPSC**

***விளம்பர எண்:33/90***

**தமிழ்நாடு தொழிற்சாலை பணியில் மூன்று உதவி தொழிற்சாலை ஆய்வாளர் பதவிகளுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 15.10.1990 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.**

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,640-60-2,600-75-2,900.

| | | |
|---|---|---|
| (ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர் | : | 1 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | : | 1 |
| பகிரங்கப் போட்டி | : | 1) |

**வயது:** 1.7.1990 அன்று 30 வயதிற்குக் குறைவாக (சலுகைகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.)

**தகுதி:** A degree in Mechanical, Electrical or Chemical Engineering or Textile Technology.

**NOTE:** Preference will be given to destitute widows who possess the prescribed qualification and who secure atleast the minimum marks for selection.

**EXPLANATION:** 'Destitute Widow' means a widow who has neither any means by herself to live nor any dependent to protect her from starvation.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற் படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர்; உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணை யத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' தரப்பட்டுள்ளன.

(பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்துமூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.9.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.9.1990 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) ''கேட்புக் காசோலை'' (Demand Draft)யுடன் சுயவிலாசம் எழுதிய உறையு டனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கிலமொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக் கைகள் கவனிக்கப்படமாட்டா.

*டிஐபிஆர்/2273/எம்எஸ்/90/அக்கார்ட்*

# ஊரக வளர்ச்சித் துறையின் அரிய பணிகள்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை அமைச்சர்

திரு. கோ.சி.மணி



**ஊ**ரக வளர்ச்சித் துறையில் மத்திய-மாநில அரசுகளின் கூட்டு வேலை வாய்ப்புத் திட்டமாகிய ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டச் செயலாக்கத்தில் தமிழ்நாடு அகில இந்திய அளவில் 1989-90-இல் முதல் இடத்தை வகித்து, மத்திய அரசின் பாராட்டுதலைப் பெற்றுள்ளது. அதே போன்று நடப்பு ஆண்டிற்கான திட்ட வேலைகளையும் உரிய காலத்தில் முடித்திட செயலாக்கத்திற்கான வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

1990-91-ஆம் ஆண்டில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்காக மத்திய-மாநில அரசுகளின் பங்குகளாக ரூ.172.24 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக கான்கிரீட் கூரையுடன் கூடிய தொகுப்பு வீடுகள் ஒவ்வொன்றும் ரூ.14,200/- மதிப்பீட்டில் 47,000 வீடுகள் கட்டப்படவிருக்கின்றன. இத்தொகையில் ஒரு வீட்டிற்கு ரூ.4,000 வீதம் 47,000 வீடுகளுக்கு ரூ.18.80 கோடி,மாநில அரசால் சிறப்பு ஒதுக்கீடாக வழங்கப்படுகிறது.

தமிழகத்தில் 6,135 கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும், 560 பேரூராட்சிகளுக்கும் மட்டுமே அலுவலகக் கட்டிடம் இருக்கிறது. கட்டிடம் இல்லாத எஞ்சிய 6,481, பஞ்சாயத்துக்களுக்கும், 88 பேரூராட்சிகளுக்கும், 31.3.93-க்குள் முழுமையாகக் கட்டிடங்கள் கட்டி முடித்திடத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதில் இவ்வாண்டு சொந்த அலுவலகக் கட்டிடம் இல்லாத 88 பேரூராட்சிகளுக்கு தலா ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் அலுவலகக் கட்டிடங்கள், 1,912 பஞ்சாயத்துகளுக்கு தலா ரூ.65,000 மதிப்பீட்டில் அலுவலகக் கட்டிடங்கள் கட்டித் தரத் திட்டமிடப்பட்டுச் செயலாக்கத்தில் உள்ளது.

**பள்ளிகளுக்குச் சொந்தக் கட்டிடங்கள்**

ஒரு சொந்தக் கட்டிடம்கூட இல்லாத ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு தலா ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில் 779 பள்ளிகளுக்குப் புதிதாக பள்ளிக் கட்டிடம் கட்ட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில், கடந்த மாதம் இறுதி வரை 582 பள்ளிக் கட்டிடங்கள் கட்டும் பணி துவக்கப்பட்டுள்ளது. இந்த பள்ளிகள் கட்ட மொத்தம் ரூ.8,67,77,000 ஒதுக்கப்பட்டு உள்ளது. சொந்தக் கட்டிடம் இல்லாத அனைத்து ஆரம்பப் பள்ளிகளுக்கும் இந்த ஆண்டு இறுதிக்குள்ளாகக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும்.

**கிராமங்களை இணைக்கும் சாலைகள்:**

500 முதல் 1,000 மக்கள் தொகையுள்ள கிராமக் குடியிருப்பு பகுதிகளை இணைக்கும் சாலைகளில் 1,569 கிலோ மீட்டர் தூரத்திற்குக் கற்சாலைகளைத்தார்ச் சாலைகளாக மேம்படுத்தவும், 2,100 கிலோ மீட்டர் நீளத்திற்கு மண் சாலைகளைக் கற்சாலைகளாகத் தரம் உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு தமிழகம் முழுவதுமாக 1,228 தார்ச்சாலைப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இதில் 1,033 பணிகள் துவக்கப்பட்டுள்ளன. அனைத்துப் பணிகளும் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிந்து விடும். இதற்காக ரூ.23,25,00,000/- ஒதுக்கப்பட்டுள்ளது. இதே போன்று கற்சாலை போடும் திட்டத்திற்கு 2,090 கற்சாலை போடும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக 21 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஊரக வளர்ச்சித் துறையில் மத்திய-மாநில அரசுகளின் கூட்டு வேலை வாய்ப்புத் திட்டமாகிய ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டச் செயலாக்கத்தில் தமிழ்நாடு அகில இந்திய அளவில் 1989-90-இல் முதல் இடத்தை வகித்து மத்திய அரசின் பாராட்டுதலைப் பெற்றுள்ளது.**



**மாண்புமிகு ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள், சென்னைக் கொத்தவால்சாவடிப் பகுதியில் துப்புரவுப் பணியைப் பார்வையிடுகிறார்.**

மேற்குறிப்பிடப்பட்ட திட்டங்களோடு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1990-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17-ஆம் நாள் ஆற்றிய நிதி நிலை அறிக்கை உரையில் கிராமப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் வகையில் சிறப்புத் திட்டங்களை அறிவித்து, அதற்கான ஒதுக்கீடுகளையும் செய்துள்ளார்கள். அதன் அடிப்படையில் இவ்வரசு கீழ்க் கண்ட திட்டங்களுக்காக ரூ.27 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தத் திட்டத்திற்கு 'முதலமைச்சர் அவர்கள் சிறப்புத் திட்டம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் புதிய பள்ளிக்கூடங்கள் கட்ட, 3 கோடி ரூபாயும், சாலைகள் மேம்பாட்டிற்கு 10 கோடி ரூபாயும், குடிநீர் வசதி செய்து கொடுக்க தனியாக 6 கோடி ரூபாயும், 50 முதல் 100 ஏக்கர் ஆயக்கட்டு உள்ள சிறு பாசனக் குளங்களை மேம்படுத்த 1 கோடி ரூபாயும், ஊராட்சி/பேரூராட்சிகளுக்கு டெலிவிஷன் பெட்டிகள் வழங்க 1 கோடி ரூபாயும், சுகாதார-துணை நிலைய கட்டிடங்கள் கட்ட 1 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன.

**குடிநீர் வழங்கல்:**

குடிநீர் வழங்கலைப் பொறுத்தவரை 8-வது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் பகுதியாக நிறைவு பெற்றுள்ள அனைத்துக் குடியிருப்புகளிலும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவர்க்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுதல், குழாய் நீட்டிப்பு செய்தல், புதிய கிணறுகள் அமைத்தல், தற்போதுள்ள மேல்நிலை/தரை மட்டத் தொட்டிகளுக்குப் போதிய நீர் ஆதாரங்கள் உருவாக்குதல் போன்ற பணிகளைச் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரத் துணை நிலையங்களைப் பொறுத்தவரை, மொத்தமுள்ள 8,681 சுகாதாரத் துணை நிலையங்களில் 5,223 துணை நிலையங்களுக்கு மட்டுமே கட்டிடங்கள் உள்ளன. எஞ்சிய 3,458 துணை நிலையங்களுக்கும் 8-ஆவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் கட்டிடங்கள் கட்டத் திட்டமிடப்பட்டு உள்ளது.

**பஞ்சாயத்துக்களின் தற்போதைய நிதி நிலைமை எப்படி இருக்கிறது, என்னென்ன வசதிகள் செய்ய வேண்டும்,இந்நிதி நிலைமையைப் பெருக்குவதற்கான வழிமுறைகள் என்னென்ன என்பதற்குரிய ஆலோசனைகளை அரசுக்கு அளித்திட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரை இவ்வாண்டு அக்டோபர் இறுதிக்குள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.**

சிறு பாசனக் குளங்களைப் பொறுத்தவரை, 6,016 சிறு பாசனக் குளங்கள் 50 முதல் 100 ஏக்கர் வரை ஆயக்கட்டுப் பகுதி கொண்டவை; இவைகள் அனைத்தையும் 3 ஆண்டுக் காலத்திற்குள் மேம்படுத்திச் சீர் செய்யத் திட்டமிடப்பட்டுச் செயலாக்கப்படுகிறது.

தமிழகத்தில் தொலைக் காட்சி தெளிவாகப் பார்க்கக் கூடிய எல்லைக்குள் 4,417 தொலைக் காட்சிப் பெட்டிகள் ஏற்கனவே வழங்கப் பட்டு உள்ளன. இன்னும் எஞ்சியுள்ள 5,195 ஊராட்சிகளுக்கும் 3 ஆண்டுக் காலத்திற்குள் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் 1,57,041 பயனாளிகள் பயன் அடையும் வகையில் செயல் திறன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக இவ்வாண்டு ரூ.5,284.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 67,410 கடன் மனுக்கள்வங்கிகளுக்குப்பரிந்துரைக்கப்பட்டு, இவற்றில் 33,108 கடன் மனுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதுவரையில், ரூ.969.31 இலட்சம் செலவிடப்பட்டு 21,437 சொத்துக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பஞ்சாயத்துக்களின் தற்போதைய நிதி நிலைமை எப்படி இருக்கிறது, என்னென்ன வசதிகள் செய்ய வேண்டும், இந்நிதி நிலைமையைப்

பெருக்குவதற்கான வழிமுறைகள் என்னென்ன என்பது தொடர்பான ஆலோசனைகளை அரசுக்கு அளித்திட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரை அக்டோபர் இறுதிக்குள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பரிந்துரைகளின் அடிப்படையில் நிதி நிலையை அதிகப்படுத்திடத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

**கிராமப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்த 'முதலமைச்சர் சிறப்புத் திட்டம்' என்ற திட்டம் வகுக்கப்பட்டு அதற்காக ரூ.27 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் புதிய பள்ளிகள் கட்ட ரூ.3 கோடியும், சாலைகள் மேம்பாட்டிற்கு ரூ.10 கோடியும் குடிநீர் வசதிக்கு ரூ.6 கோடியும், 50 முதல் 100 ஏக்கர் ஆயக்கட்டு உள்ள சிறுபாசனக் குளங்களை மேம்படுத்த ரூ.1 கோடியும், ஊராட்சி, பேரூராட்சிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க ரூ.1 கோடியும், சுகாதாரத் துணை நிலையக்கட்டிடங்கள் கட்ட ரூ.1 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன.**

### நகர்ப்புறங்கள் மேம்பாடு அடைய

நகராட்சி நிர்வாகத் துறையைப் பொறுத்தவரை, விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த பிற்படுத்தப்பட்ட பகுதி அபிவிருத்தித் திட்டங்களில் 1990-91-ஆம் ஆண்டில் நகராட்சிகளிலுள்ள புதிய கழிப்பிடங்களை நீர் ஊற்றும் கழிப்பிடங்களாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 75 இலட்சம் ரூபாய் மானியத் தொகையாக 38 நகராட்சிகளில் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் குடிசைப் பகுதிகளில் 148 கழிப்பிடங்களும், பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் 102 கழிப்பிடங்களும் அபிவிருத்தி செய்யப்படும்.

### சாலைப் பராமரிப்பு

சாலைப் பராமரிப்பிற்காக பாதி கடன், பாதி மானியம் திட்டத்தில் நகராட்சியில் தூசி இல்லா தார்ச் சாலை அமைக்க 1990-91-ஆம் ஆண்டில் அரசு ரூ.55 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தத்தொகை 20 நகராட்சிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. முழுமையாகக் கடன் தொகையில் சாலைப் பராமரிப்பு செய்யும் திட்டத்தில் இவ்வாண்டு 8 நகராட்சிகளுக்கு 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. நகராட்சியிலுள்ள அனைத்துச் சாலைகளையும் குறைந்தபட்சம் 10 ஆண்டுக் காலத்திற்குள் தார்ச் சாலையாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

குப்பைகளை அள்ளிச் செல்ல ஒரு லாரி கூட இல்லாத நிலையில் தமிழ்நாட்டில் 15 நகராட்சிகள் உள்ளன. இந்த 15 நகராட்சிகளுக்கும் ஒரு நகராட்சிக்கு ரூ.3.60 இலட்சம் வீதம் ரூ.55.14 இலட்சம் செலவில் லாரிகள் வாங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இது தவிர 25 நகராட்சிகளில் குப்பை அள்ள டிராக்டர் அல்லது மினி லாரி வாங்க பாதி மானியம், பாதி கடன் என்ற அடிப்படையில் ஒரு நகராட்சிக்கு ரூ.1.66 இலட்சம் என்ற அளவில் சுமார் 40 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது.

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் நகர்ப்புறங்களிலுள்ள நலிவுற்ற ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

நகராட்சிகளிலுள்ள பேருந்து நிலையங்களை மேம்படுத்துவதற்கும் புதிதாகப் பேருந்து நிலையங்களை அமைப்பதற்கும் மத்திய அரசு நிதி உதவியுடன் கூடிய ஒருங்கிணைந்த சிறிய, நடுத்தர நகரங்கள் மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ், கடன் உதவி அளிக்கப்படுகிறது. இவைகள் அல்லாமல் மாநில ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும் மேற்படி பணிகளுக்கு, கடன் உதவி அளிக்கப்படுகிறது.

நகராட்சிகள்/நகரியங்களிலுள்ள தெரு விளக்கு பராமரித்தல் பணிகளை நகராட்சி/நகரியங்களே பராமரிக்க அரசு ஆணையிட்டுள்ளது. தற்போது இம்முறை நன்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 106 நகராட்சிகள்/மற்றும் நகரியங்களில் ஏற்கனவே 11 நகராட்சிகளில் மட்டுமே தெரு விளக்குகளை நகராட்சிகள் பராமரித்து வந்தன. நகராட்சிகளில் நடைபெறும் திட்டப் பணிகளைக் கண்காணித்து முறைகேடுகள் ஏற்படாத வகையில் தவிர்க்கவும், பணிகளின் தரத்தினை மேம்படுத்த ஆலோசனைகள் கூறவும், இவ்வியக்ககத்தின் உயர் அதிகாரிகள், கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் இத்துறையைச் சார்ந்த தொழில் நுட்ப அலுவலர்கள் கொண்ட குழு ஒன்றினை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### மாநகரை அழகு நகராக்க

சென்னை மாநகராட்சியின் வரலாற்றிலேயே முதன் முறையாக மாநகராட்சிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குச் செயல் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டம் செயலாக்கப்படும்போது மக்களின் பெரும்பாலான அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படும். சாலைகள் மேம்பாடு, கழிப்பிட வசதிகள் மேம்பாடு, தெருவிளக்குகள் பராமரிப்பு போன்ற அடிப்படைப் பணிகளுக்கு உயர் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மாநகராட்சியினைப் பெரும் செலவில் அழகுபடுத்துவதைவிட அசுத்தத்தைத் தூய்மைப்படுத்தி அதன் மூலம் அழகுறச் செய்தல் என்ற அடிப்படையில் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. மாநகராட்சிப் பகுதியிலுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு அந்த இடங்கள் அழகிய பூங்காக்களாக மாற்றப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில், ரூ.11·8064 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

சென்னை நகரில் மட்டும் 717 பொதுக் கழிப்பிடங்கள் உள்ளன. இவற்றில் உபயோகிக்கும் நிலையில் உள்ளவை 529. எல்லா கழிப்பிடங்களுக்கும் தண்ணீர் வசதி மற்றும் விளக்குகள் வசதி செய்யப்பட உள்ளது. இப்பணிக்கு இதுவரையில் 45 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு உள்ளது. இதுதவிர, சிறப்புத் திட்டமாக 160 புதிய பொதுக் கழிப்பிடங்கள் கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு

முதன்முறையாக மாநக ராட்சிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குச் செயல் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தார்ச்சாலை அமைக்க 1990-91-ஆம் ஆண்டில் அரசு ரூ.55 இலட்சம் ஒதுக்கீடு செய் துள்ளது.

மொத்தம் ரூ.3.75 கோடி செல வாகும்.

**துப்புரவுப் பணிக்குப் புதிய லாரிகள்:**

சென்னை மாநகராட்சியில் துப் புரவுப் பணிக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள லாரிகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதால் ரூ.4 கோடி செலவில் 100 புதிய லாரிகள்/சிறு லாரிகள் வாங்கப்படுகின்றன.

சென்னை நகரில் பேருந்து செல்லாத தெருக்கள் சுமார் 9,060 உள்ளன. இதில் 5 மீட்டர் அகலத் திற்குட்பட்ட சிறிய தெருக்கள், சந் துகள் முதலியன 3,690 ஆகும். இந்த 9,060 தெருக்களில் சுமார் 900 தெருக்களில் செப்பனிடப் படும் பணி, மாநகராட்சியின் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கிய தொகை யின் கீழ் நடைபெற்று வருகிறது.

அரசின் சிறப்புத் திட்டத்தின்கீழ் சிறிய தெருக்கள், சந்துகள் ஆகி யவை அரசின் 3 கோடி ரூபாய் நிதி உதவியின்கீழ், சீரமைக்கப்பட உள்ளன. சென்னை நகரிலுள்ள சிறிய தெருக்கள், சந்துகள் எண் ணிக்கை 3,690 ஆகும். இதன் நீளம் 570 கி.மீ. ஆகும். இவற்றில் சுமார் 1,340 சிறிய தெருக்கள், சந்துகள் ஆகியவற்றில் சீரமைக்கும் பணி நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. இதன் நீளம் 200 கி.மீ. ஆகும்.

ரூ.2 கோடி செலவில் 3,160 தெரு விளக்குகள் போடப்பட இருக் கின்றன. 150 கி.மீ. தூரத்திற்கு பழைய புதை மின்கம்பிகளுக்குப் பதிலாக, புதிய புதை மின்கம்பிகள் போடப்படவிருக்கின்றன.

**மதுரை மாநகரில்**

மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் சாலை களை மேம்படுத்த ரூ.15 இலட் சமும், திறந்தவெளிச் சாக்கடைகள் அமைப்பதற்கு ரூபாய் 10 இலட் சமும், கடனாக தமிழக அரசு மதுரை மாநகராட்சிக்கு வழங்கி உள்ளது.

மதுரை மாநகர மக்களின் பொது வசதிகளை மேம்பாடு செய் வதற்கு மாநகராட்சி நிதி வசதி பற் றாக்குறையாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, அரசு, நடப்பு நிதி ஆண்டில் மதுரை மாநகராட்சிக்குச் சிறப்பு வளர்ச்சித்திட்டங்களுக்காக 4 கோடி ரூபாய் நிதி உதவி செய் துள்ளது.

**கோவை மாநகரில்**

கோவை மாநகராட்சி 1981-இல் முறைப்படி துவக்கப்பட்டாலும் மாந கராட்சியின் ஒட்டுமொத்த வளர்ச் சிக்குச் செயல் திட்டங்கள் எதுவும் வகுக்கப்படவில்லை. முதல் கட்டப் பணியாக 'பொது சுகாதாரம் காக்க போர்க்கால நடவடிக்கை' என்ற சிறப்புத் திட்டம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர் களின் பிறந்த தினமான 3.6.89 முதல் அமல்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின்படி மாநகராட்சியின் தனி அலுவலர் மற்றும் மாநகராட்சி யின் அலுவலர்கள் மாநகராட்சியின் பல்வேறு பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று, பொது மக்களின் தேவை களைக் கேட்டறிந்து, உரிய நடவடிக் கைகளை எடுத்துள்ளனர். இந்தச் சிறப்புப் பணிக்கு 500 துப்புரவுப் பணியாளர்களையும், கூடுதல் வாக னங்களையும் பயன்படுத்திப் பல ஆண்டுகளாகத் தேங்கிக் கிடந்த 2 இலட்சம் டன் குப்பை, கூளங்கள் மற்றும் சாக்கடைக் கழிவுகள் அகற்றப் பட்டன. இத்திட்டத்திற்கு, தமிழக அரசு ரூ.10 இலட்சம் அனுமதித்துள்ளது. இது தவிர நீண்ட காலப் பயன் அளிக்கும் 1,188 பணிகள் ரூ.11.42 கோடி மதிப்பீட்டில் 1988-89-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் பொது வசதிகள் மேம்பாட்டிற்கும், சுகாதார வசதிக் கும் என ரூ.1 கோடியை, தமிழக அரசு மாநகராட்சியின் பற்றாக் குறையைக் கருத்தில்கொண்டு கட னாக அளித்துள்ளது.

மேற்கூறப்பட்ட திட்டங்கள் யாவும் செயலாக்கப்படும்போது தமிழக மக்களின் அடிப்படைத் தேவைகள் யாவும் 3 ஆண்டுக்குள் முடிக்கப்படும் என்பது உறுதி. சிறப்புத் திட்டங்களை நிறைவேற்று வதற்காக 3 மாநகராட்சிகளுக்கும் மொத்தம் ரூ.15.75 கோடி நிதி உதவியை உவந்து அளித்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர் களுக்கு என் இதயங்கனிந்த நன் றியைக் காணிக்கையாக்குகிறேன். இதன்மூலம் ஊரக வளர்ச்சி மற்றும் நகராட்சித் துறையின் பணி, தமிழக மக்களின் நெஞ்சங்களில் எல்லாம் நீங்காத இடம் பெறும் என்பது திண்மை. ●



# துவலயம் போற்றக் குறள் தந்த கோமானுக்குக் குமரி முனையில் நினைவுச் சின்னம்

**-மாமூலன்**

கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறைக்கு அருகில், கடலில் இருக்கும் மற்றொரு பாறையில் (Minor rock) திருவள்ளுவர் சிலையை அமைக்கிறது தமிழக அரசு. இதற்கான சிலையமைப்புப் பணி தொடக்க விழா கடந்த 6.9.90 அன்று குமரி முனையில் நடைபெற்றது.

இந்தத் திருவள்ளுவர் சிலை 38 அடி உயரம் கொண்ட கற்பீடத்தின் மீது 95 அடி உயரம் கொண்ட சிலையாக அமையும். மொத்தம் 133 அடி உயரமுடையதாக இஃது அமையும்.

திருக்குறள் 133 அதிகாரங் களைக் கொண்டு விளங்குவதாலும் சிலையெழுந்து நிற்கும் உயரம் 133 அடி எனக் கொள்வதாலும், சிற்பக் கலை மரபின் கொள்கைப்படி வள்ளுவமே வடிவம் கொள்வதாக இவ் எடுப்புக்குச் சிறப்புச் சொல்லலாம்.

திருக்குறள் 133 அதிகாரங் களைக் கொண்டதோடல்லாமல் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டும் விளங்குகிறது இதில் 38 அதிகாரங்கள் அறம் பற்றியும், 95 அதிகாரங்கள் பொருள், இன்பம் பற்றியதுமாகும். எனவே அறத்தை ஆதாரமாக - பீடமாகக் கொண்டு அதன்மீது பொருளும் இன்பமும் அமைவதாகக் கருத்துக் கொண்டு இச்சிலையின் பகுதிகளின் உயரம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. 38 + 95 என்ற கணக்கு இச்சிலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட லயக் கணக்கும் (rhythm) அளவுகோலுமாகும்.



'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதியார் பாடிய பாட்டில் சிற்பக்கலையால் சித்திரித்திடத் தக்கதொரு காட்சி கிடைக்கிறது. வள்ளுவருடைய குறள்கள் எட்டுத் திசைகளிலும் வாழும் மக்களால் ஏற்கத் தக்கன என்றதொரு கருத்து அதில் தொனிக்கிறது.

கலை மரபிலே திசைகளை யானை களைக் கொண்டு உருவதித்தல்

**திருவள்ளுவர் சிலையைக் கல்லால் செய்வதே சிறந்தது**

★ கல்லால் செய்வதற்குத் திறமையுள்ள சிற்பிகள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். ஏற்கனவே இவர்கள் வள்ளுவர் கோட்டத்தில் பணி செய்துள்ளார்கள்.

★ கல்லால் செய்வதையே ஏற்கனவே அரசு அதிகாரம் பெற்ற வல்லுநர் குழு (Expert Committee) பரிந்துரை செய்தது.

★ கல்லால் செய்வதே தமிழ்நாட்டுக்கும் தமிழகச் சிற்பிகளுக்கும் பெருமையாகும்.

★ கல்லால் செய்தால் கடல் அரிப்பினால் ஏற்படும் சேதாரம் மிகக் குறைவு. 1,000 ஆண்டுகளுக்கு மேல் நல்ல வண்ணம் இச்சிலை இருந்திடும்.

★ பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பது இதற்குத் தேவையில்லை. மழைத் தண்ணீரே இதனைச் சுத்தம் செய்து புதிய மெருகுடன் எப்போதும் வைத்திருக்கும்.

வழக்கு, அஷ்டதிக்கஜங்கள் என்ற சொற்றொடர் இதனை உணர்த்தும். திசைகளைப் பத்தாகவும் சொல்வதுண்டு. அதாவது மேலுலகையும் கீழுலகையும் இரண்டு திசைகளாகப் பாவித்து, தெச திக்குகள் என்று சொல்வதுண்டு. எனவே வள்ளுவன் குறள் 10 திசைகளிலும் ஏற்றுக் கொள்ளப்படத் தக்கதொரு ஏற்றமுடையது என்ற கருத்தை உணர்த்திட 10 யானைச் சிற்பங்கள் பீடத்தைச் சுற்றி அமைக்கப்படும்.




**சிலையின் நோக்கு:**

திருவள்ளுவர் சிலையானது நிலப் பகுதியை நோக்கி-மக்களை நோக்கி-அமைவதாக நிறுவப்படும். மக்கள் தம் உயர் நலம் நோக்கி இக்குறளை யாத்தார் என்பது இஃது உணர்த்தும் பொருளாகும்.

**கட்டுமான விவரங்கள்:**

95 அடி உயரமுள்ள இந்தச் சிலையானது ஒரே கல்லால் செய்யத் தகுந்த சிலை அல்ல. பல துண்டுக் கற்களைக் கொண்டு கட்டுமானச் சிலையாக அமைப்பதே பொருந்தும். கடலில் நிறுவப்படுவதாலும் இது மேலும் பொருந்தும். எனவே இச் சிலையின் உட்பகுதி கனமின்றி உள்ளீடற்றதாகவும் (Hollow) இரட்டைச் சுவர் கொண்டதாகவும் அமையும். இந்த நிலையில், பீட மட்டத்தில், சிலையின் அடிவாரம் 31 அடி அகலமும், தொடர்ந்து அவ்வளவின தாகத் தோள் மட்டம் வரை சென்று படிப்படியாகக் கழுத்தளவில் தோள் பட்டை நெருக்கமுற்று, கழுத்தும் தலையும் நிற்பதற்கேற்ற பீடம் கொண்டதாகவும் உள்ளீடற்றதாகவும் (Hollow) அமையும். தோள் அகலமும், 31 அடி அகலமுடையதாகவே அமையும். இதனால் சிலையானது சாய்ந்திடாமல் உறுதியுடன் நிற்பதற்கேதுவாகும். சிலையின் உட்கூடு சராசரி 8 அடி அகலமும் 12 அடி நீளமும் கொண்டதாய் அமையும்.

| | |
|---|---|
| முக மண்டலத்தின் உயரம் | 10 அடி |
| கொண்டையுடன் தலையின் உயரம் | 20 அடி |
| காதின் நீளம் | 6 அடி |
| மூக்கின் நீளம் | 3 அடி 3 அங்குலம் |
| கைத் தலத்தின் நீள, அகலம் | 10 அடி, 5 அடி |
| கண் நீள அகலம் | 3 அடி, 1 அடி 6 அங்குலம் |
| கை நடுவிரல் நீளம் | 5 அடி |
| திருக்குறள் ஏடு நீளம் | 10 அடி |

(ஒவ்வொரு அதிகாரமும் 10 பாக்களைக் கொண்டது என்பதை இஃது உருவகிக்கும்)

தலையின் உடற் பகுதியானது இரண்டு சுவர்களைக் கொண்டதாகக் கட்டப்படும் என்று சொல்லும்பொழுது, அவ்வுடற் சுவரின் உள்வாய், புறவாய்க் கல்வரிகள் உறுதியாகவும், நிலையாகவும் நிற்பதற்கேற்றவாறு கட்டாயங்கள் என்று சொல்லப்படும் (Bond Stones) வைத்துக் கட்டப்படும். மேலும், உள்வாய் வரிக்கும், புறவாய் வரிக்கும் இடையில் அமையும் இடைவெளியை நயமான செங்கல்லால் சிமெண்டுச் சாந்து கொண்டு கட்டி, சுவர்ப் பகுதி மேலும் உறுதி செய்யப்படும். இங்ஙனம் செய்வதால் சிலையின் உடற் சுவரானது பாறை மீது தாக்கிடும் பளுவைக் குறைத்திட முடிகிறது. 500, 600 ஆண்டுகளுக்குப் பிறகு உள்ளிருக்கும் செங்கல் கெட்டுப் போனாலும் சிலைக்கு யாதொரு நெகிழ்வோ, அசைவோ ஏற்படாது. Araldite என்ற கற்பசையானது கற்களை இணைப்பதற்கு வெளிப்புறத்தில் உபயோகிக்கப்படும். உட்புறத்தில் சிமெண்டுச் சாந்தே உபயோகிக்கப்படும். இதனால் சிலைக்குள் நீர் செல்ல வாய்ப்பில்லை. நீர்க் கசிவுகள் ஏற்படின், அதற்குரிய துளைகள் (Vent) வைத்துக் கட்டப் பெறும்.

**பீடத்திற்கான கற்கள்:**

38 அடி உயரம் கொண்ட பீடத்தைத் திருநெல்வேலி சமீபம் அம்பாசமுத்திரம் என்ற ஊரில் கிடைத்திடும் கருங்கல்லால் செய்தமைக்கலாம். மேலும் கன்னியாகுமரியிலிருந்து 8 மைல் தொலைவில் உள்ள வண்ணாரப்பொத்தை என்ற இடத்திலுள்ள கருங்கல்லையும் உபயோகிக்கலாம். இதற்குக் கையாளப்படும் கற்கள் மேலிருக்கும் சிலையைத் தாங்குவதற்கு ஏற்ற கனபரிமாணமுள்ளதாக அளவிட்டுச் செலுத்திக் கட்டப்படும்.

**அறப் பீடம்:**

இப்பீடம் ஒரு கட்டிட வடிவத்தைக் கொண்டு அமையுமாதலால் நுழைவு வாயிலைக் கொண்டதாகவும் கல்லாலேயே கதவுகள் கொண்டதாகவும் அமையும். மேலும், சிலையின் தாள் மட்டத்திற்கு ஏறிச் சென்றடைய பீடத்துக்குள் படிகள் அமைக்கப்படும். சிலையை வலம் வருவதற்கேற்பப் பீடத்தின் மேல் மட்டத்தில் இட வசதியும் இருக்கும். பீடக் கட்டிடத்தில் அமைக்கப்படும் வாயிலானது, முகப்போடு கூடியதாக அமைக்கப்படும். சிலையின் முன்புறம் மக்கள் கூடுவதற்கும் இது வசதியாக இருக்கும். பீடத்தின் சுவர் மீது பாதுகாப்புக் கருதி, கல்லால் கைப்பிடிச் சுவரும் அமையும்.

**சிலைக்கேற்ற கல்:**

இந்தச் சிலையைப் பொறுத்த வரையில், இதனை மிக நயமான கருங்கல் கொண்டே அமைத்தல் வேண்டும். இதற்கேற்ற நயமான கருங்கல், செங்கை அண்ணா மாவட்டத்தில் 'பழைய சீவரம்' என்ற ஊரைச் சுற்றி சங்கராபுரம், பட்டு மலைக்குப்பம், திருமுக்கூடல் ஆகிய கிராமங்களில் கிடைக்கின்றது. தமிழ்நாடு அரசு கல்லியல் மற்றும் கனிமத் துறையானது (Tamilnadu State Geology) இந்தப் பாறைகளை வள்ளுவர் சிலைக்கு ஏற்றதெனச் சோதனை செய்து பரிந்துரையும் செய்துள்ளது.

இதே பாறைகளைச் சிற்பக்கலை மரபினர் பல நூற்றாண்டுகளாக, சிறந்த சிற்பங்களைச் செய்வதற்கு

ஏற்றதெனக் கண்டு தேர்ந்து, பயன் படுத்தியும் வந்திருக்கின்றனர். வள்ளுவர் கோட்டத் திருப்பணிக்கும் ஒரு சில பகுதிகளுக்கும் வள்ளுவர் சிலைக்கும் இக்கற்களே எடுத்தாளப் பட்டன. இக்கற்களுக்கு உறுதியும், சீரான அணுச் சேர்க்கையும், சீரான நிறமும் உண்டு. எல்லாவற்றுக்கும் மேலாக அவை உளி கொண்டு செதுக்குவதற்கேற்ற பதமுடைய கற்களுமாகும். இத்தகைய கற்களைக் கொண்டு இச்சிலை செய்யப்படு மானால் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் நிலைத்து நிற்கும் வாய்ப்பைப் பெற்றுவிடும். உப்பங் காற்றைத் தாங்கிக் கொள்ளும் உறுதியும் இக்கல்லுக்கு உண்டென்பது மிகை யன்று. கோவிற் கட்டிடங்கள் சாதா ரணப் பாறைகளைக் கொண்டு கட்டப்பட்டிருப்பினும் வழிபடு படி மங்களை இந்தக் கல்லாலேயே பண்டைச் சிற்பிகள் தஞ்சை மாவட் டத்தில் செய்திருப்பதை இன்றும் காணலாம். அத்தகைய உறுதியும், பார்வைக்குக் குளிர்ச்சியும் தரும் கல் இஃதாகும். எனவே செங்கை அண்ணா மாவட்டத்துக் கற்களை, சென்னைக்கு அருகிலுள்ள இடத் திற்குக் கொண்டு வந்து, அங்கு சிலைப் பகுதியைச் செதுக்கி, தக்க வண்ணம் கனத்தையும் குறைத்து, அதன் பிறகு கன்னியாகுமரி எடுத்துச் சென்று, சேர்மானம் செய்தல் தொழில் வகைக்கும், செலவைக் குறைக்கும் வகைக்கும் ஏற்றதெனக் கருதப்படுகிறது.

**சிலைக்கு மெருகேற்றல்:**

இந்தச் சிலையின், புறப்பகுதி வழவழப்பாக இருந்திட, தக்க ஆயுதம் கொண்டு சிலையைத் தேய்த்து மெருகேற்றப்படும். உடற் பகுதி அதிக மெருகு கொண்டதாயும் ஆடைப் பகுதிகள் குறைந்த மெருகு கொண்டதாயும் அமைத்து, தூரப் பார்வைக்கு உருவமும் ஆடைகளும் தெளிவாகவும், சுவையாகவும் தெரி யுமாறு செய்யப்படும். சிலைக்கு மெரு கேற்றல் ஆனது, சிலை மீது படியும் உப்பை எளிதில் கழுவிடவும் உத விடும். மழை நீரால் உப்பு அவ்வப் போது தானாகவும் கழுவிட இது வசதியாக இருக்கும்.

**சிலைக்குள் ஏறிச் செல்ல:**

பீடத்தின் மேல் மட்டத்தை அடைந்த பின், சிலையின் உட்பகுதி யைத் தூய்மைப்படுத்திடும் பணி யாளர் சிலைக்குள்ளே ஏறிச் செல் வதற்குச் சிலையின் உட்பகுதியில் படிகளும் அமையும்.

**வெளிச்சமும் காற்றும்:**

சிலையின் உட்பகுதியில் ஏறிச் செல்லுவோர் தங்கித் தங்கிச் செல்வ தற்கு ஏற்றவாறு, சிலைக்குள்ளே பல தளங்களும் அமையும். சிலைக்கு உட்பகுதியில் காற்றும் வெளிச்சமும் உட்புகுவதற்கு ஏற்ப, கல்லால் ஜன்னல்களும் அமைக்கப் படும். சிலையினுடைய கால் பகுதி யில் (பீட மட்டத்தில்) பின்புறத்தில் பெரிய வாயில் ஒன்றும் அமையும். இதன் கதவுகள் முற்றிலும் கல்லா லேயே அமையும்.

**வள்ளுவனுக்குள்ளே வள்ளுவன்:**

பாறை மட்டத்தில் இருந்து படி யேறிச் செல்லுவோர் தலையுச்சிக்கு வந்து சேர்ந்த நேரத்தில், வெற்றிடத் தைப் பார்த்துத் திரும்பாது உள்ளே யும் வள்ளுவனைத் தரிசித்துத் திரும் பும் வண்ணம் 6 அடி உயரமுள்ள வள்ளுவர் சிலை ஒன்று, உட்பக்கச் சுவரில் புடைப்புச் சிற்பமாக அமைப்ப தாகவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. பாதுகாப்புக் கருதி, மக்கள் சிலைக் குள் ஏறிச் சென்று வருவதைத் தவிர்க்கலாம். ஆனால் வள்ளுவனுக் குள் வெற்றிடத்தை வைக்காமல், வள்ளுவனுக்குள்ளும் வள்ளுவனே என்ற ஒரு கருத்தையுணர்த்திட இதனைச் செய்யலாம்.

**பணிமனைகள்:**

பீடப் பணிகளுக்குக் கன்னியா குமரியில் ஒரு தொழிற் கூடமும், சிலைப் பணிக்குச்சென்னைக்கு அரு கிலே ஒரு தொழிற் கூடமும் அமைத்து இப்பணிகளைச் செய்தல் வேண்டும். ஒரே இடத்தில் கைவினை ஞர்களின் கூட்டத்தைத் தவிர்த்தல் நிர்வாகத்துக்கு ஏற்புடையதாகும். தலைமைச் சிற்பியின் கவனம் எல் லாம் சிலையமைப்பிலும், சிலை கட்டுமானத்திலுமே இருத்தல் வேண்டும். அரசின் நேரடிப் பார் வையும் இப்பணிக்கு உணர்ச்சியூட்டும். கலைப்பணிக்கு உணர்ச்சி பூர்வ மான ஆதரவும் அணைப்பும் இன்றி யமையாதனவாகும். எனவே சென் னைக்கு அருகாமையில் சிலைப் பணிக்கூடம் நிறுவிடப் பணிந்துரை செய்யப்படுகிறது.

**சிற்பிகள்:**

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சிற்பிகளும் கைவினைஞர் களும் 1,000 பேர் வள்ளுவர் கோட்டத் திருப்பணியில், திரு வண்ணாமலையிலும், பட்டு மலைக் குப்பத்திலும், மாமல்லபுரத்திலும், சென்னையிலும் பணியாற்றினார்கள். அதுபோல இப்பணிக்கும் அவர் களையே அழைத்து வந்து, இப் பணியினைச் செய்வதே பொருந் தும். கன்னியாகுமரியில் 5 ஏக்கர் இடமும், சென்னைக்கு அருகே 10 ஏக்கர் இடமும் இப்பணிக்குத் தேவைப் படும். ஆங்காங்கே தகுந்த உளிப் பட்டறைகளையும், தொழிற் கூடங் களையும், சிற்பியர் தங்கும் இடங் களையும் அமைத்துக் கொண்டு, இப் பணியினை ஆற்றுதல் வேண்டும். கிட்டத்தட்ட 500 கைவினைஞர் இப்பணிக்குத் தேவைப்படுவார்கள். நிமிந்தம், பட்டறை - பிற உதவி யாளர்கள் மொத்தத்தில் 100 பேர் தேவைப்படுவர். தகுந்த எண்ணிக் கையில் மேற்பார்வைச் சிற்பியர் களும் அலுவலக உதவியாளர்களும் இருப்பர். கிட்டத்தட்ட 750 பேர் களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு வேலை வாய்ப்பும் இப்பணி நல்கும் எனலாம்.

**அம்பேத்கர் நூற்றாண்டு**

• சமூகத்தில் அங்கம் பெற்றிருக்கும் உறுப்பினர், பரஸ்பரம் நீக்கமறக் கலந்து கொள்ளுவதற்குச் சமூக அமைப்பில் இயல்பாகவே இடம் இருக்க வேண்டும்; அதுதான் உண்மையான சகோதரத்துவம் ஆகும்.

— டாக்டர் அம்பேத்கர்

# மீனவர் விபத்து காப்புறுதித் திட்டம்




இறப்பு மற்றும் விபத்து ஆகிய பாதிப்புக்கு நிவாரணமளிக்கும் பொருட்டு கூட்டுறவுச் சங்க மீனவ உறுப்பினர்களுக்குக் காப்புறுதி வழங்க இத்திட்டம் செயல்படுகிறது. இத்திட்டத்திற்கான தவணைத்தொகை ஆண்டிற்கு ஒரு மீனவருக்கு ரூ.9 ஆகும். மீனவ சங்க உறுப்பினர்கள் இதற்காகப் பணம் கட்டத் தேவையில்லை. இத்தொகையை மத்திய–மாநில அரசுகள் சமமாக ஏற்றுக் கொள்கின்றன.

மீனவர் விபத்தினால் இறந்தால் அல்லது நிரந்தரமாக ஊனமுற்றால் ரூ.15,000 காப்புறுதித் தொகையாக வழங்கப்படுகிறது. மீனவர்கள் ஒரு கை அல்லது கால் ஊனமுற்றாலோ அல்லது கண் பார்வை இழந்தாலோ ரூ.7,500 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் 1,49,539 மீனவர்கள் சேர்ந்துள்ளனர். 735 மீனவர் குடும்பங்கள் இத்திட்டத்தினால் பயனடைந்து இதுவரை ஒரு கோடி ரூபாய்க்கு மேல் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

1989-90-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் 157 குடும்பங்களுக்கு ரூ.21.92 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செவ்வனே செயல்படுத்தியதற்காக தேசிய மீனவர் கூட்டுறவு இணையம் தமிழ்நாட்டினைத் தேர்ந்தெடுத்து ஜே.சி. பார்வே விருது அளித்துள்ளது. இவ்விருதினை மீன்துறை இயக்குநர்/ மீனவக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. எஸ்.மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., 31.8.90 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற மூன்றாவது மீனவக் கூட்டுறவுக் காங்கிரஸ் விழாவில் பெற்றுக் கொண்டார்.

**கற்சிலைக்குச் செங்கல்லால் மாடல்: (மாதிரி வடிவம்)**

**இச்சிலையைப் புரிந்து செய்திடவும், துரிதமாகச் செய்திடவும், இத்தகைய மாதிரி வடிவம் (மாடல்) ஒன்று பணிமனையில் செய்து கொண்டு, அதனை மூலமாக வைத்தே கல்லால் சிலை செதுக்கிடும் பணி நிகழும்.**

**சாரக்கட்டைச் சுவர்:**

சிலைக்குரிய அடிப்பீடத்தை சாதாரண மரச் சாரங்கள் கொண்டு ஓரளவு கட்டிவிடலாம். ஆனால் சிலையை அங்ஙனம் கட்டுவது கடினமாகும்; இயலாது. எனவே தக்க சாரக் கட்டைச் சுவர்களை (Retaining Wall) செங்கல்லாலோ கட்டுக் கற்களாலோ (Coursed Rubble) அமைத்துக் கொண்டு, செதுக்கி முடித்த சிலைப் பகுதிகளைச் சேர்மானம் செய்தல் வேண்டும். இத்தகைய சாரக்கட்டைச் சுவரைக் கொண்டு தஞ்சை பெருவுடையார் திருக்கோயில் விமானத்தைக் கட்டியதாக வரலாற்று ஆசிரியர்களும் அறிவர். இந்தச் சாரக் கட்டைச் சுவரில்லாமல் இப்பணியினை வெற்றிகரமாக முடிக்க இயலாது.

**பாறைக்குப் படகு மூலம் கற்களைக் கொண்டு சேர்த்தல்:**

செதுக்கி முடிந்த கற்களைக் கடற்கரையிலிருந்து பாறைக்குப் படகுகள் மூலம் எடுத்துச் செல்ல வேண்டியிருப்பதால், படகு சுமந்து செல்லத் தக்க பளுவுடையதாக, சிலைக்குரிய கற்கள் அளவிட்டுச் செய்யப்படும். கற்களைப் படகில் ஏற்றுதலையும், படகிலிருந்து இறக்குதலையும் கைவினைஞர்களே கவனிப்பர்.

**1975-ஆம் ஆண்டில் உருவான திட்டம்**

குமரிமுனையில் திருவள்ளுவருக்குச் சிலை எடுப்பது 1975-இல் உருவான திட்டம் என்றும் இதனை வள்ளுவர் கோட்டம் திறப்பு விழாவின் போது அறிவிக்க முடிவு செய்யப்பட்டிருந்தது என்றும் விழாவுக்குத் தலைமையேற்றிருந்த மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

முப்பால் தந்த வள்ளுவருக்கு முக்கடல் சங்கமத்தில் சிலையமைப்புப் பணியைத் தொடங்கிவைத்த முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்கள், ''உலகம் முழுவதுமுள்ள தமிழ்ப்பெருங்குடி மக்கள் சிலை திறப்பு விழாவில் பங்கேற்க வேண்டும். அந்த அளவுக்கு விழா சிறப்புடன் நடைபெற வேண்டும்'' என்று குறிப்பிட்டார்கள்.

# மாபெரும் மனிதாபிமான பிரச்சினை



## இலங்கை அகதிகளுக்கு உதவி


**செ. ராம்தாஸ், இ.ஆ.ப.,**

**சிறப்பு ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர்**

**இலங்கைத் தமிழர் மறுவாழ்வு மாநில ஒருங்கிணைப்பாளர்**


**த**னி மனித வாழ்க்கையிலும் சரி, ஒரு சமுதாயம் அல்லது ஒரு நாட்டினுடைய வாழ்க்கையிலும் சரி, சில சமயங்களில் சோதனை வரும். அந்தச் சோதனையே சாதனை நிகழ்த்த வாய்ப்பாகவும் அமையும். எதிர்பாராத இக்கட்டு வரும் போது நமது வலுவனைத்தையும் ஒன்று சேர்த்துச் சமாளிக்கும் ஆற்றலைப் பெறுகின்றோம்.

இலங்கைத் தமிழ் அகதிகள் பிரச்சினை, பல ஆண்டுகளாக இருந்து வந்த போதிலும், 1990 ஜூலை முதல் தேதிக்குப் பிறகு அது பெரிய அளவில் அச்சுறுத்தலாயிற்று. நாள்தோறும் அகதிகள் ஆயிரக்கணக்கில் அலை அலையாகத் தமிழகம் வந்து கொண்டு இருக்கின்றனர்.

இந்தப் பிரச்சினையின் பரிமாணத்தை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், 6.7.90 அன்று தலைமைச் செயலர், உள்துறைச் செயலர், காவல்துறைத் தலைவர், மறுவாழ்வு ஆணையர் ஆகியோருடன் ஆய்வு செய்து, மாவட்டங்களிலும் அகதிகளைக் குடியமர்த்த உத்தரவிட்டார். அதனைத் தொடர்ந்து இந்தத் திட்டம் புது உத்வேகம் பெற்றது.

மேலும், மாவட்டங்களில் அகதிகள் தங்கும் இடவசதி, பணக்கொடை மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்குதல் போன்ற ஏற்பாடுகள் ஒரு மூத்த அலுவலரால் மேற்பார்வையிட்டு, ஒருமுகப்படுத்தப்பட வேண்டுமெனவும், 11.7.90 அன்று அரசு ஆணையிட்டது. சிறப்பு ஆணையர் மற்றும் நிலச்சீர்த்திருத்த ஆணையர் அவர்கள், மிகுந்த முக்கியத்துவத்துடன் இப்பணியினைக் கவனித்திடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்.

மனமிடிந்தும், உள்ளம் உடைந்தும் உயிரைக் காத்துக் கொள்ள இந்தியாவுக்கு ஓடிவரும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு, ஒரு தாயின் பரிவோடும், பாசத்தோடும் தமிழக அரசு எல்லா உதவிகளும் தங்கு தடையின்றிச் செய்து வருகிறது. ஒரு மாவட்டத்திற்கு 5,000 பேர் என்ற அளவில் சென்னை, நீலகிரி ஆகிய இரு மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் பல்வேறு இடங்களில் இதுவரை சுமார் 250 தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டு அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

9.9.90 - முடிய, தமிழகம் வந்த அகதிக் குடும்பங்கள் 31,328; நபர்கள் 1,07,861

''நிலத்தில் இடமில்லை; என்றாலும் எங்கள் நெஞ்சத்தில் இடமுண்டு! வாழ வைக்கும் பெரும் பொறுப்பை ஏற்றுத் துயர் துடைப்போம். இலங்கைத் தமிழ் அகதிகளை என்றைக்கும் கைவிட மாட்டோம்'' என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் குறிஞ்சிப்பாடியில் கூறியதுபோன்று, ஏற்கனவே உள்ள கட்டடங்கள், இராணுவத்திடமிருந்து பெறப்பட்ட கூடாரங்கள் போன்ற முகாம்களில் அகதிகள் உடனடியாகத் தங்க வைக்கப்பட்டு, தேவையான உதவிகள் அனைத்தும் அளிக்கப்படுகிறார்கள்.

அரசின் உதவிகள் அனைத்தும் வழங்கப்படுவதோடு, ஆங்காங்கே உள்ள தொண்டு நிறுவனங்களின் உதவியும் பெறப்பட்டு, மளிகைச் சாமான்கள், சமையல் பாத்திரங்கள், பாய், விரிப்புகள், துணிமணிகள், வாளிகள், ஸ்டவ், மருந்து வகைகள், நாளேடுகள், வார-மாத இதழ்கள், விளையாட்டுப்



**மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள், மண்டபம் முகாமில், இலங்கை அகதிகளிடம் குறைகளைக் கேட்டறிந்தார் (22.7.90).**

பொருட்கள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் போன்ற வசதிகளும் செய்து தரப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, திருவண்ணாமலை அகதிகள் முகாமில் ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியும், சேலம் மாவட்டத்திலுள்ள முகாம்களில் 5 தொலைக்காட்சிப் பெட்டிகளும் இயங்குகின்றன. கோவை மாவட்டத்திலுள்ள 28 முகாம்களிலும் செய்திப் பத்திரிகைகளும் தொலைக்காட்சிப் பெட்டிகளும் வைக்கப்பட்டுள்ளன.

அகதி முகாம்கள் அமைந்துள்ள அந்தந்த மாவட்டத்திலேயே அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உதாரணமாக, வடஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள முகாமில் உள்ளவர்களுக்கு, அருகிலுள்ள அரிசி ஆலைகளில் வேலை கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முகாமில் தண்ணீர், சுகாதார வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பெரும்பாலான முகாம்களில் மின் வசதியும் உள்ளது. மருத்துவச் சிகிச்சை கிடைக்கவும், காசம், நீரிழிவு போன்றவை கண்டறியப்பட்டால் அருகிலுள்ள மருத்துவமனைகளில் தொடர் சிகிச்சைக்கும் வழி செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு வரும் இலங்கைத் தமிழ் அகதிகள் சோதனை செய்யப்பட்டு, காவல் துறை விசாரணைக்குப் பிறகு, ஒவ்வொரு குடும்பமும் கணக்கெடுக்கப்பட்டு, அதன் அங்கத்தினர்களுடன் புகைப்படம் எடுக்கப்பட்டு, அடையாள அட்டை வழங்கப்படுகிறது.

தமிழகம் வந்து இறங்கியவுடன் அகதிகள், தேநீர், சிற்றுண்டி கொடுத்து உபசரிக்கப்படுகின்றனர். முகாமில் அனுமதிக்கப்படும்வரை உணவு இலவசம்; குழந்தைகளுக்குப் பாலும் வழங்கப்படுகிறது.

முகாமில் அனுமதிக்கப்பட்டதும், அத்தியாவசியப் பொருட்களை வாங்கிக் கொள்ளக் குடும்ப அட்டை வழங்கப்படுகிறது. இந்த அட்டையைக் காட்டி, கிலோ 57 காசு மலிவு விலையில் அவர்கள் அரிசி வாங்கிக் கொள்கின்றார்கள். நாளொன்றுக்குப் பெரியவர்களுக்கு 400 கிராமும், சிறியவர்களுக்கு 200 கிராமும் வழங்கப்படுகிறது.

அகதிக் குடும்பங்கள் முகாமில் சேர்க்கப்பட்டவுடன், அவர்களுக்குத் துணிமணிகள், சமையல் பாத்திரங்கள், கைச்செலவுக்குப் பணம் ஆகியவை வழங்கப்படுகின்றன. முகாம் இடங்களுக்கு இரயில் அல்லது பேருந்தில் செல்ல இலவச ஏற்பாடு செய்யப்படுகிறது.

இலங்கைத் தமிழ் அகதி மாணவர்களுக்குத் தொழில் கல்லூரிகளில் கீழ்க்கண்டவாறு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| மருத்துவம் | ... | 20 இடங்கள் |
| பொறியியல் | ... | 40 இடங்கள் |
| பாலிடெக்னிக் | ... | 40 இடங்கள் |
| விவசாயம் | ... | 20 இடங்கள் |

இவ்வாறு தொழிற் கல்லூரிகளில் 120 இடங்கள் ஒதுக்கியுள்ளதை இலங்கைத் தமிழர் மிகவும் பாராட்டியுள்ளனர். தென்னார்க்காடு மாவட்டம், தாழங்குடா கிராமத்தில் சிறப்பு ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர் அகதிகளைப் பார்த்து, ''உங்களுக்கு இங்கே வச

திகள் எப்படி?'' என்று விசாரித்தபோது, ''ஒரு கிலோ அரிசி எங்களுக்கு 57 பைசாவுக்கு கிடைக்கிறது. இலங்கையில் அரிசி கிலோ 15 ரூபாய், மண்ணெண்ணெய் லிட்டர் 50 ரூபாய்க்குக் கூட கிடைக்காது'' என்று மன நெகிழ்ச்சியுடன் கூறினார்கள்.

அகதிகளின் குழந்தைகளை பிளஸ் 2 வகுப்பு வரை மாற்றுச் சான்றிதழ் இல்லாமல் சேர்த்துக் கொள்ளவும், இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கவும், ஆரம்பப் பள்ளிகளில் முட்டையுடன் கூடிய சத்துணவு வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

அகதி முகாம்களுக்குக் குடிநீர் வழங்கும் பொறுப்பையும், கழிப்பறை அமைக்கும் பொறுப்பையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொண்டுள்ளன.

மண்டபம் முகாமில் தென்னிந்தியத் திருச்சபையின் தொழில் நுட்பப் பயிற்சிக் கழகம் என்ற தொண்டு நிறுவனம் வீட்டு ஒயரிங், மோட்டார் ரீவைண்டிங், தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் வானொலி பழுது பார்த்தல், தையல், தச்சு வேலை ஆகியவற்றில் அகதிகளுக்குப் பயிற்சி அளிக்கிறது.

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம், 250 மாணவர்களுக்குக் கோடைக்கால வகுப்பு நடத்துகிறது.

ஒய்.எம்.சி.ஏ நிறுவனம் 93 குழந்தைகளுக்குக் காப்பகம் நடத்துகிறது.

மேலும் இந்த முகாமில் நூலகம், கேரம், செஸ், வாலிபால், பாட்மிட்டன், கால்பந்து போன்ற வசதிகளும் உள்ளன.



**செங்கை-அண்ணா மாவட்டம், புழல் இலங்கை அகதிகள் முகாமில், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள், வேட்டி, சேலைகள், சீருடைகள் வழங்கினார். மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. க. சுந்தரம், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ்.தங்கவேலு ஆகியோர் உடன் உள்ளனர்.**

நகைக்கடன்கள் பெறவும், இலங்கைச் செலாவணியை மாற்றிக் கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இராமேஸ்வரம், மண்டபம் ஆகிய இரு இடங்களிலும் 20.8.90 வரை 99 பேர் ரூ.90,000 அளவுக்கு நகைக்கடன் பெற்றுள்ளனர்

கருவுற்ற மகளிர், தமிழகக் கருவுற்ற மகளிரைப் போலவே ரூ.200 மகப்பேறு உதவித் தொகையாகப் பெற, உத்தரவிடப்பட்டுள்ளது.

**இந்திய விடுதலை நாள் விழாவில் (15.8.90) இலங்கைத் தமிழ் அகதிகள் 70,000 (எழுபதாயிரம்)** பேருக்கு இலவச வேட்டி, சேலைகளும், சிறுவர் சிறுமியருக்குச் சீருடைகளும் வழங்கப்பட்டன. இதற்கான செலவு ரூ.34 இலட்சம்.

கொட்டப்பட்டு முகாமில் காஜாமலை மகளிர் சங்கம் 30 அகதிப் பெண்களுக்குத் தையல் பயிற்சி நடத்துகிறது.

இத்தொண்டு நிறுவனங்கள் இப்பணிகளை மேற்கொள்ளத் தமிழ்நாடு சமூகநல வாரியத்தின் மூலம் இலங்கை அகதிகள் நிவாரண நிதியிலிருந்து ரூ.5/- இலட்சம் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

ரூ.8 கோடி செலவில் தீப்பிடிக்காத கூரை வேய்ந்த 20 ஆயிரம் வீடுகள் கட்டித்தரத் திட்டமிடப்பட்டுள்ளது.



கோவை மாவட்டம் புலியகுளம் தாமு நகரில் அமைந்துள்ள இலங்கை அகதிகள் முகாமில், ஒரு அகதிப் பெண்ணுக்கு மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள் பிளாஸ்டிக் வாளி, தட்டு, சேலை, அரிசி ஆகியவற்றை வழங்கினார். மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்களும், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா.இராமன் இ.ஆ.ப. அவர்களும், திரு. மு.ராமநாதன் எம்.எல்.ஏ., அவர்களும் உடன் உள்ளனர் (24.7.90)

இலங்கைத் தீவிலிருந்து கண்ணீரும் கம்பலையுமாகத் தினந்தோறும் தமிழகம் வந்து கொண்டிருக்கும் அகதிகளைக் குடியமர்த்தத் தமிழ்நாடு அரசு, போர்க்கால அடிப்படையில் உதவி நடவடிக்கைகளை முழு அளவில் நிறைவேற்றி வருகிறது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே முகாம்களுக்குச் சென்று, தமிழ் அகதிகளின் குறைகளைக் கேட்டறிந்து ஆவன செய்வதோடு, அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள், மற்றும் மூத்த அலுவலர்கள் அவ்வாறு செய்யவும் ஆணையிட்டுள்ளார்.

தீவிரமான பிரச்சினை, மிகுந்த தீரத்துடன் சமாளிக்கப்பட்டு வருகின்றது. முகாம்களைப் பார்வையிட்ட மக்கள் பிரதிநிதிகள் பலரும், ஏற்பாடுகளைப் பாராட்டியுள்ளனர். குறைகண்ட இடத்தில் அதனை நிறை செய்ய உடனடி நடிவடிக்கை எடுக்கப்படுகிறது.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்குப் புகலிடம் அளிக்கும் பணியைத் தமிழ்நாடு அரசும் மக்களும் பாராட்டத்தக்க அளவில் நிறைவேற்றி வருவதாக, மாண்புமிகு பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்கள் 27.8.90 அன்று நாடாளுமன்றத்தில் கூறியது குறிப்பிடத்தக்கது.

1990 செப்டம்பர் 9 வாக்கில் அகதிகள் எண்ணிக்கை ஒரு லட்சத்து ஏழு ஆயிரத்தைத் தாண்டிவிட்டது.

அகதிகள் உதவி ஏற்பாடுகளுக்காகத் தமிழக அரசு மத்திய அரசிடம் ரூ.10 கோடி நிதி கோரியுள்ளது. இதுவரை 6.64 கோடி செலவாகியுள்ளது. இதில் மத்திய அரசு ரூ.4 கோடி ஈடு செய்துள்ளது.

மத்திய, மாநில அரசுகள் தோளோடு தோள் நின்று இந்த மகத்தான பிரச்சினையை மனிதாபிமானத்துடன் சமாளிக்க உறுதி பூண்டுள்ளன.

புழல் அகதிகள் முகாம்.



புதுக்கோட்டை மாவட்டத்தில்...

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக்குழு, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகை தந்தது. அந்தக் குழுவில் இடம்பெற்றுள்ள திரு. பெ.சு. திருவேங்கடம், திரு. சித்திக், திரு.சிவலோகம், திரு. பாலையா, திரு.வல்லரசு ஆகியோர் குழுவினருடன், குரும்பூர் எனும் கிராமத்தில் 1,825 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள தீவிர முந்திரிச் சாகுபடிப் பண்ணையைப் பார்வையிட்டனர். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் போக்குவரத்துத்துறை, மருத்துவத்துறை, வனத்துறை, உள்ளாட்சித்துறை ஆகிய துறை அலுவலர்களிடம் திட்டப் பணிகள் குறித்தும் ஆலோசனை நடத்தினர். இக்குழுவினருடன் புதுக்கோட்டைச் சட்டமன்ற உறுப்பினர் திரு. பெரியண்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

அப்போது, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம.குற்றாலிங்கம், இ.ஆ.ப. அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது: 'இந்த மாதிரியான இரட்டை வீடுகள் இந்த மாவட்டத்தில்தான் கட்டப்பட்டுள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்தில் நடப்பாண்டில் (1990-91-இல்) ஆதி-திராவிடர்களுக்கு 58 கிராமங்களில் 1,150 குடியிருப்புகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. அக்டோபர் 2-ஆம் தேதிக்குள் 600 வீடுகள் கட்டி முடிக்கப்படும். மேலும் இங்கே ரூ.2.84 இலட்சம் செலவில் கட்டப்படும் 20 வீடுகளும் சிறப்பாக அமைக்கப்படவுள்ளன.

''வீட்டின் முன்பகுதியில் காங்கிரீட் தளமும், பின்புறம் இணைப்புப் பகுதியுடன் கட்டப்பட்டு வருகிறது. இரண்டு வீடுகளை ஒன்றாக இணைத்து ஒரே சுவருடன் கட்டப்பட்டுள்ளதால், வீட்டின் உட்பகுதியில் இடவசதி கூடுதலாக இருக்கிறது. ஒவ்வொரு வீட்டின் முன்புறம் சிமெண்ட் தளம் போடப்பட்டிருப்பதுடன், பின்புறம் இணைப்புப் பகுதியும் போடப்படுகிறது. ஒவ்வொரு வீட்டின் மதிப்பும் ரூ.14,200 ஆகும்''.

**—கோ. பன்னீர் செல்வம்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**புதுக்கோட்டை மாவட்டம்**





# ஆதி-திராவிட சமுதாயத்தினருக்கு அனைத்துச் சலுகைகளும் வழங்குகிறார் முதல்வர் கலைஞர்!

## திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், எம்.எல்.ஏ பாராட்டு

புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசின் செயல் பாடுகள் குறித்துக் கண்டறிவதற்காக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழு, திரு. ந. கணபதி அவர்கள் தலைமையில் புதுக் கோட்டைக்கு வருகை தந்தது.

இம்மாவட்டத்தைச் சேர்ந்த சிலட்டூர் கிராமத் தில், ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர் களுக்கு ரூ.2.84 இலட்சம் செலவில் கட்டப் பட்டுள்ள 20 தொகுப்பு வீடுகளை இக்குழு பார்வையிட்டது.

தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக, புதிய வடிவமைப்புடன் கட்டப்பட்ட இரட்டை வீடு களாகும் இவை.

இந்த வீட்டைப் பார்வையிட்டவர்களில், மேற் கண்ட குழுவின் உறுப்பினரும், இ. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினருமான திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களும் ஒருவர்.

நவீன முறையில் கட்டப்பட்டுள்ள இந்தத் தொகுப்பு வீடுகளைப் பார்த்துவிட்டு அவர் கூறியதாவது:

''நான் கலைஞர் அவர்களை மனதாரப் பாராட்டுகிறேன். அடித்தளத்து மக்களாகிய ஆதி திராவிட சமுதாயத்தினருக்கு வேண்டிய அனைத்துச் சலுகைகளையும் வழங்குவதில் மிகவும் தீவிரம் காட்டி வருகிறார்கள்.

''நானே சட்டசபையில் பேசும்போது, 'தற் போது ஆதி திராவிடர்களுக்குக் கட்டப்பட்டுவரும் வீடுகள் மிகச் சிறியதாக உள்ளன' என்று கூறினேன்.

''ஆனால் இன்று, அந்த வீடுகளைப் பார்க்கும் போது நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். மிகச் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டு, அழகாகக் கட்டப்பட்டுள்ளதைப் பார்க்கும்போது, நான் பெருமை அடைகிறேன்.

''நான், சட்டசபையில் தெரிவித்த வேண்டு கோளை ஏற்று, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்தத் திட்டத்தை நான் பாராட்டுகிறேன். இதற் காக நான், முதல்வர் கலைஞர் அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவிப்பதுடன், நன்றியையும் தெரி வித்துக் கொள்கிறேன்''.

-இவ்வாறு அவர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.


# வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட். வேலூர் சர்க்கரை ஆலை அஞ்சல்-632 519இ வ.ஆ.அம்பேத்கர் மாவட்டம்

தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்று, வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை தன் முதல் அரைவையை 3.4.77 முதல் துவங்கி, கடந்த பல ஆண்டுகளாகத் தொழில் நுட்ப ரீதியாகத் தேசிய அளவில் பல அரிய சாதனைகள் புரிந்து, கூட்டுறவுத் துறையில் மாதிரி சர்க்கரை ஆலையாகத் திகழ்ந்து வருகிறது. தற்போது அரைவைத் திறன் நாளொன்றுக்கு 1,250 டன்னிலிருந்து 2,500 டன்களுக்கு விரிவாக்கப் பணி முடியும் தறுவாயில் உள்ளது.

இறுதி கட்ட கருப்பஞ்சாற்றில் (Final Molasses Purity) சர்க்கரை விகிதத்தை 28%லிருந்து 23.5 சதமாகக் குறைத்து உலக அளவில் சாதனை படைத்துள்ளது.

தூய வெண்மையான சர்க்கரையை உற்பத்தி செய்து, பொதுமக்களின் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

அரசின் உத்தரவுப்படி, இவ்வாலை பல கரும்புப் பெருக்கத் திட்டங்களை வேளாண் அங்கத்தினர்கள் மேம்பாட்டிற்காகச் செய்து வருடம்தோறும் ரூ.50 இலட்சம் வரை மானியங்கள் வழங்கி வருகிறது.

1989-90-ஆம் ஆண்டுப் பருவத்தில் தமிழக மாநிலத்திலேயே உயர்ந்த பட்ச சர்க்கரைக் கட்டுமானம் பெற்று கரும்பு டன் 1-க்கு மாநில அளவில் அதிகப் பட்ச விலையாக ரூ.341.20 கொடுத்து வருகிறோம்.

ஆலைத் தொழிலாளர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் இலவச மருத்துவ வசதி, குடியிருப்புகள், இலவசச் சீருடைகள், காலணிகள் குறைந்த விலையில் மதிய உணவு, சிற்றுண்டி, இலவசத் தேநீர் வழங்கப் படுகிறது. ஆலை அங்கத்தினர்கள் மற்றும் ஆலைத் தொழிலாளர்களுடன் ஆலை நிர்வாகம் நல்லுறவை வளர்த்து வருகிறது.

மாநிலம் மற்றும் தேசிய அளவில் இவ்வாலை பல விருதுகளையும், பரிசுகளையும் தொடர்ந்து பெற்று சிறந்த கூட்டுறவு நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது.

இரா.சு.செல்லசாமி,
தனி அலுவலர்.

**சி**ல நுகர்பொருள் அங்காடிகளுக்கு நான் நேரில் சென்று பரிசோதித்தபோது நடந்த சில சம்பவங்களில் ஒன்றைக் குறிப்பிட நினைக்கிறேன்.

ஒரு நாள்- மூன்று கிலோ அரிசி வாங்கிக்கொண்டு திரும்பிய ஓர் அம்மையாரை நிறுத்தி, அந்த அரிசியை மறுபடியும் கொண்டு போய் எடைபோடச் சொல்லிப் பார்த்தால்- அதில் 500 கிராம் குறைந்தது. ''எப்போதும் இந்தக் கடையில் இப்படித்தான் போடுகிறார்களா? என்று கேட்டேன்.

நான் யார் என்பதைப் புரிந்து கொண்ட அந்த அம்மாள், என்னை ஒரு தடவை பார்த்தார்; எடைபோடுபவரை ஒரு முறை பார்த்தார். 'நம்மால் ஏன் அவருக்கு வீண் சங்கடம்?' என்று நினைத்தாரோ- அல்லது 'இந்த ஆள் மாற்றப்பட்டால், அடுத்து வருபவர் எப்படியிருப்பாரோ' என்று அஞ்சினாரோ என்னவோ! 500 கிராம்அரிசி குறைவதையும் பொருட்படுத்தாமல்- ''எடைபோட்டுப் பையில் போடுகிறபோது ஒரு வேளை அரிசி கீழே சிந்தியிருக்கலாம்'' என்று அந்த அம்மையார் துணிந்து ஒரு பொய்யைச் சொன்னார்.




# "நுகர்வோர் குறைநீங்க மக்களும் அரசுடன் ஒத்துழைக்க வேண்டும்"

**பொது மக்களிடையே இப்படிப்பட்ட தேவையில்லாத அச்சம் நீங்கி, விழிப்புணர்ச்சி ஏற்படவேண்டும்; அப்போதுதான்- தவறான எடைபோடுதல், உணவுப்பொருளில் கலப்படம் போன்றவைகளைத் தவிர்க்க முடியும். வெறும் சட்டத்தால் மட்டுமே தவறுகளையெல்லாம் சரி செய்து விடமுடியாது; பொது மக்களும் அரசோடு ஒத்துழைக்க வேண்டும்.**

சட்டத்தின் மூலம், தவறு செய்தால் தண்டனைகள் வழங்கப்படலாம்- அதற்கும் சாட்சியங்கள் சரியாக இருந்தாக வேண்டும்.

கலப்படக்காரர்களையும், சமூக விரோதிகளையும் தண்டித்தே ஆக வேண்டும்; அப்போது தான் அந்த நினைவுள்ள மற்றவர்களும் அச்சப்படுவார்கள். ஆகவே, நாடு தழுவிய விழிப்புணர்ச்சி ஏற்பட வேண்டியது மிகவும் முக்கியம்.

**நுகர்வோர் யாரானாலும் சரி; அவர்களுக்கு இந்த வகையில் ஏற்படும் குறைகளை, 'நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தில்' எழுதிக் கொடுத்தால் போதும்; நிச்சயம் அவர்களுக்கு நீதி கிடைக்கும்; குற்றவாளிகளும் தண்டிக்கப்படுவார்கள். சாதாரண மக்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தோடுதான், நீதிபதி காதர் அவர்கள் தலைமையில், நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றங்கள் தமிழ் நாடெங்கும் அமைக்கப்பட்டிருக்கின்றன.**

**சட்டத்தில் உள்ள ஓட்டைகளைச் சாதகமாக்கிக் கொண்டு, குற்றவாளிகள் தப்பிவிட முடியாது; மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம், நீதிபதி அவர்கள் தெரிவித்த கருத்துகளை எடுத்துச் சொல்லி, மிகச் சாதாரண மக்களுக்கும் இந்தக் குறைதீர்க்கும் மன்றங்களில் தொண்டு அமையச் செய்வது எனது கடமை.**

இம் மன்றங்களில் அங்கம் வகித்துச் செயல்படுவோரும் தங்கள் பொறுப்புணர்ந்து நடந்து கொள்ள வேண்டும்.''

- மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு பொன். முத்துராமலிங்கம்

(23.8.90 அன்று, சென்னையிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு வங்கிக் கட்டடத்தில் நடைபெற்ற ஒருநாள் கருத்தரங்கை நிறைவு செய்து வைத்து ஆற்றிய உரையிலிருந்து)

சென்னை பொது மருத்துவ மனையில்

# சிறுநீரக நோய் இயல் பிரிவின் சிறப்பான சேவை

*யூராலஜி (UROLOGY), நெப்ராலஜி (NEPHROLOGY) இந்த இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?*

யூராலஜி என்பது சிறுநீரக அறுவைச் சிகிச்சை மருத்துவம். நெப்ராலஜி என்பது சிறுநீரக நோயியல் மருத்துவம் ஆகும். சிறுநீரகம் தொடர்பான நோய்களை மருந்துகள் மூலம் குணப்படுத்துவது நெப்ராலஜியின் பணி. அறுவைச் சிகிச்சையின் மூலம் குணப்படுத்துவது யூராலஜியின் பணி. செயற்கைச் சிறுநீரகம் மூலம் சிகிச்சை அளிப்பதும் நெப்ராலஜியின் பணிதான்.

*எந்தவிதமான அறிகுறிகளை வைத்து, தனக்குச் சிறுநீரக நோய் ஏற்பட்டுள்ளது என்பதை சாதாரண மனிதன் உணர்ந்து கொள்ள முடியும்?*

ஒரு சிலருக்கு பாதம், கணுக்கால் ஆகியவற்றில் வீக்கம் ஏற்படலாம். சிலருக்கு முகம் வீங்குவதும் உண்டு. இவற்றை அசட்டை செய்யக் கூடாது- சிறுநீரகங்களில் ஏற்படும் பாதிப்பு இது போன்ற வீக்கத்திற்குக் காரணமாக இருக்க முடியும். சிலருக்கு சிறுநீர் சிவப்பு வண்ணத்தில் வெளியேறும். சிலருக்கு, சிறுநீர் பிரியும்போது எரிச்சல், குத்தல் போன்ற சிரமங்கள் இருக்கும். உடம்பு சூடாகிவிட்டது, எண்ணெய் தேய்த்துக் குளித்தால் போதுமானது என்று எண்ணி, அசட்டையாக இருக்கக்கூடாது.

சிலரது சிறுநீரில் சிறுசிறு கற்கள் போல் ஒருபொருள் வெளியேறும். இப்படி ஏற்பட்டால் உடனே சிறுநீரக நோய்க்குரிய மருத்துவரை அணுக வேண்டும். இரத்தக் கொதிப்பு நோய் உள்ளவர்களுக்கும் சிறுநீரக பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. அவர்கள் அடிக்கடி மருத்துவரிடம் சென்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கும் சிறுநீரக பாதிப்பு ஏற்படும்நிலை இருக்கிறது. அவர்களும் அடிக்கடி மருத்துவரிடம் சென்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

சிலருக்கு செருப்புக் கடியின் காரணமாக காலிலே புண் ஏற்பட்டு, சில நாட்களில் சீழ் வரும். இந்தப் புண்ணும் ஒருவருக்கு சிறுநீரக நோய் வருவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தலாம். அதனால் அசட்டை செய்யாமல் உடனடியாக மருத்துவரிடம் காண்பிக்க வேண்டும்.

சிலருக்கு, கைகால்களில் சொறிசிரங்கு வரும். சிரங்குதானே என்று மெத்தனமாக இருக்கக் கூடாது. சில தினங்களில் சாதாரண சொறி சிரங்கே சிலருக்குச் சிறுநீரக நோயை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. எனவே மருத்துவரை உடனடியாக அணுக வேண்டும்.

சிலருக்குத் தொண்டையில் நோய்த் தொற்று ஏற்படும். சில நேரங்களில் தொண்டைப் புண்ணும் சிறுநீரக நோயை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது. சிலருக்குக் கல்லீரலில் நோய் வரும். அதுவும் சிலருக்கு, சிறுநீரக நோயை ஏற்படுத்தக்கூடும். அதனால் இதுபோன்ற நோய்கள் வரும்போது முன்னெச்சரிக்கையாக மருத்துவர்களிடம் சென்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

கிராமங்களில் சிறுவர்களுக்கு உடல்முழுவதும் வீக்கம் ஏற்படும். இதைச் சுரைப் பனை என்று சொல்வார்கள். இது சிறுநீரக நோயின் அறிகுறியாகும்.

சிறுகுழந்தைகள் சரியான எலும்பு வளர்ச்சி இல்லாமல் இருந்தாலோ, கை கால்கள் வளைந்து போயிருந்தாலோ அதற்கும் சிறுநீரக பாதிப்பு காரணமாக இருக்கலாம்.

*சிலவகைக் கிருமிகளாலும் சிறுநீரக நோய் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறதே!*

---

**சிறுநீரக நோய் குறித்தும், சென்னை பொது மருத்துவமனையில் சிறுநீரக நோய் இயல் பிரிவு (NEPHROLOGY) ஆற்றிவரும் மருத்துவ சேவை குறித்தும், சிறுநீரக நோய் இயல் சிகிச்சைப் பிரிவின் தலைவர் டாக்டர் எம்.ஏ. முத்துசேதுபதி அவர்கள் அளித்த பேட்டிக் கட்டுரை.**

---

சென்னை போன்ற சில பெரிய நகரங்களில் அக்டோபர், நவம்பர் மாதங்களில் கடுமையான மழை பெய்வதுண்டு. மழைநீர், பற்பல இடங்களில் தேங்கிக் கிடக்கும். அந்நீரில் எலி, பெருச்சாளி போன்றவற்றின் சிறுநீர் கலந்துவிடுவதுண்டு. அவற்றின் சிறுநீரில் லெப்டோஸ்பிரோசிஸ் (LEPTOSPIROSIS) என்னும் ஒருவகைப் பூச்சி இருக்கும். தேங்கிக் கிடக்கும் நீரில் அந்தப் பூச்சி கலந்து, நடந்து செல்வோரின் கால்களின் வழியாக உடலுக்குள் நுழைந்து, கல்லீரல், சிறுநீரகம் ஆகியவற்றை ஆக்ரமித்துக் கொள்வதால் அந்த உறுப்புகள் பாதிப்படைகின்றன. இந்த வகையில் ஆண்டுக்கு 40 பேர் அரசுப் பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்படுகிறார்கள்.

*சிறுநீரக நோய்கள் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் பொதுமக்களிடம் அதிகம் காணப்பட்டதில்லை. தற்காலத்தில் அதிகம் காணப்படுகிறதே காரணம் என்ன?*

திடீரென்று சிறுநீரக நோய் மக்கள் மத்தியில் ஏற்பட்டுவிடவில்லை. இது காலரா போன்ற தொத்துநோய் அல்ல, பரவுவதற்கு! ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நோய் பற்றிச்

சரியாக அறிந்திருக்கவில்லை. ஒருவருக்குச் சிறு நீரகம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை,தற்போது மருத்துவர்கள் எளிதில் கண்டுபிடித்து விடுகிறார்கள் அதற்குரிய கருவிகள் எல்லாம் மிகுந்த அளவில் உருவாக்கப்பட்டுள்ளன.

*சிறுநீரக வியாதிகள் குழந்தைப் பருவத்தினருக்கு அதிக அளவில் ஏற்படுகிறதா, வயது வந்தவர் களுக்கு அதிகம் ஏற்படுகிறதா?*

குழந்தைகளுக்கு அதிகம் ஏற்படுகிறது, பெரிய வர்களுக்கு அதிகம் ஏற்படுகிறது என்றெல்லாம் கிடையாது. புதிதாகப் பிறந்த குழந்தைக்குக்கூட சிறு நீரக நோய் வருகிறது. பிறக்காத ஒரு குழந்தைக்குக் கூட அதாவது கருவில் உள்ள குழந்தைக்குக்கூட சிறுநீரக பாதிப்பு இருந்ததைக் கண்டுபிடித்தோம். கருவுற்ற தாயின் வயிற்றை ஸ்கேன் செய்து பார்த்த போது, உள்ளே குழந்தையின் சிறுநீர்ப் பாதையில் அடைப்பு ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது உடனே உரிய சிகிச்சை அளித்தோம். அந்தக் குழந்தை நல்ல முறையிலே பிறந்து இன்று உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

*சோற்றில் கிடக்கின்ற சிறுசிறு கற்களை விழுங்க நேர்வதால் அவை சிறுநீரகத்திற்குள் சென்று சிக்கலை உருவாக்குகின்றன என்ற கருத்து மக்களி டையே நிலவி வருகிறதே, அது சரியானதுதானா?*

அது தவறான கொள்கையாகும். இன்னும் சொல்லப்போனால் அது பொய்யான தகவல் என்றே சொல்ல வேண்டும்.

*ஒருவரின் சிறுநீரகத்தில் கல் இருக்கிறது என்று டாக்டர்கள் கண்டுபிடித்துக் கூறுகிறார்களே, அதன் பொருள் என்ன?*

சிறுநீரில் கால்சியம் ஆக்சிலேட், யூரிக் ஆசிட் என்ற இரு அமிலங்கள் உள்ளன. ஆக்சிலேட் தண்ணீரில் கரைவதில்லை. அந்த ஆக்சிலேட்டின் அளவு அதிகமாகிவிடும்போது அது அப்படியே வீழ்படிவாகத் தங்கி விடுகிறது. இது நாளடைவில் சேர்ந்து, கல்போல் ஆகிவிடுகிறது. சிறுநீரகத்தின் செயலுக்கு இடையூறாக அமைந்து, இறுதியில் உயிருக்கே உலை வைத்துவிடுகிறது. இந்த நிலை ஏற்படாமல் தடுப்பதற்கு, ஒருவர் தண்ணீர் நிறைய அருந்த வேண்டும். நாள் ஒன்றிற்குக் குறைந்தது 2 லிட்டர் தண்ணீராவது உட்கொள்ள வேண்டும்.

*சிறுநீரகத்தில் உருவாகும் கல்லை அகற்றுவதற் குரிய வழிமுறை யாது?*

சிறுநீரகத்தில் கல் இருக்கிறது என்று தெரிந்த வுடன் அதனைக் கரைப்பதற்குரிய மாத்திரை. மருந்து ஆகியவற்றை உட்கொள்ள வேண்டும். மருந்து வகைகளினால் பயன்கிட்டவில்லை என்னும் நிலை ஏற்படுமானால், அறுவைச் சிகிச்சை செய்து கல்லை அகற்றலாம். முன்பெல்லாம் அறுவைச் சிகிச்சை ஒன்றினால்தான் முடியும் என்ற நிலை இருந்தது. நவீன யுகத்தில் இதற்கும் எளிய வழி கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. அந்தச் சிகிச்சை முறை ESWL முறை என்று சொல்லப்படுகிறது.



**சிறுநீரக நோயியல் மருத்துவர் டாக்டர் முத்து சேதுபதி பேட்டி**

ESWL *முறை என்றால் என்ன?*

ஜெர்மனியில் நெட்பிளே என்னும் மருத்துவ அறிஞரால் கண்டுபிடிக்கப்பட்ட சிகிச்சை முறை இது. சிறுநீரகத்தில் கல் இருக்கும் இடத்தைச் சரியானபடி தெரிந்துகொண்டு இரு முனைகளி லும் இருந்து அதிர்வு அலைகளை (Shock Wave) உருவாக்கி, இரண்டையும் ஒரு கோணத்தில் இணையச் செய்து, ஒரு குறிப்பிட்ட ஆற்றலுடன் கல்லின் மீது செலுத்தினால் அந்தக் கல் தூளாகி விடும். பின்னர் அந்தத் தூள் சிறுநீரின் வழியே வெளிவந்து விடும். இந்தச் சிகிச்சை முறையின் மூலம் அறுவைச் சிகிச்சை தவிர்க்கப்படுகிறது. உடலுக்கு வெளியில் இருந்தபடியே இந்த அதிர்வு அலைகள் பாய்ச்சப்படுகின்றன. இதய நோயா ளிகள், முதியவர்கள் போன்றோருக்கு இந்தச் சிகிச்சை முறை மிகவும் அனுகூலமானது. இவர் களைப் பொறுத்தவரையில் இந்தச் சிகிச்சை முறை ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்லலாம்.

Ultra Sound முறை என்ற ஒருவகைச் சிகிச்சை முறையும் உள்ளது. காதுக்குக் கேட்காத ஒருவகை ஒலிக்கதிரைப் பயன்படுத்தும் முறை இது. இதில் செலவு குறைவு. அதைப்போலவே இதனால் விளை யும் பலனும் குறைவு.

*வாழைத்தண்டு சாப்பிட்டு வந்தால் சிறுநீரகத்தில் கல் உருவாகாது என்றும், பார்லி நீர் அருந்தினால் சிறுநீர் எளிதில் பிரியும் என்றும் பொதுமக்களிடம் ஒரு கருத்து உலவி வருகிறதே அது ஏற்றுக்கொள் ளக் கூடியதுதானா?*

இது ஒரு வகையான நம்பிக்கைதானே தவிர, உண்மையல்ல. வாழைத்தண்டில் நீர்ச்சத்து அதிகம் இருக்கிறது. அதுபோலவே பார்லியைக் கஞ்சி யாக்கி அருந்தும்போது அதிலும் நீர்ச் சத்து அதிகம் கிடைக்கிறது. தண்ணீர் அதிகம் அருந்தினால் சிறுநீரகத்தில் கல் உருவாகாது என்பது மருத்துவ உண்மை. வெறும் தண்ணீரையே அதிகம் அருந்து வதற்கு அலுப்புத் தட்டலாம். அலுப்பை மாற்று

வதற்கு பார்லி நீர் சாப்பிடு, வாழைத்தண்டு சாப்பிடு என்று சொல்லியிருக்கலாம். பார்லி கஞ்சிக்கு எனத் தனியான சக்தி இல்லை. அதில் சேர்ந்துள்ள தண்ணீருக்குத்தான் சக்தி உண்டு.

*பொதுவாக, நோய்களுக்குச் சிகிச்சையளிப்பதில் சித்தா, யுனானி, ஆயுர்வேதம் என நமது நாட்டில் பலவகை மருத்துவ முறைகள் உள்ளன. அலோபதி மருத்துவ முறையும் நடைமுறையில் உள்ளது. காமாலை போன்ற நோய்களுக்குச் சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் கீழ்வாநெல்லி மூலிகையை அலோபதியில் மாத்திரையாகவும், பாகாகவும் (SYRUP) பயன்படுத்துகிறார்கள். அதுபோல சித்தமருத்துவத்தில் பயன்படுத்தப்படும் எந்த மூலிகையாவது அலோபதி முறையில் சிறுநீரக நோய்ச் சிகிச்சையில் பயன்படுத்தப்படுகிறதா?*

அப்படி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. பொதுவாக தங்க பஸ்பம் சாப்பிட்டால் உடலுக்கு நல்லது என்று எண்ணிச் சிலர் சாப்பிடுகிறார்கள். இது தவறான ஒரு கொள்கையாகும். தங்க பஸ்பமே சிறுநீரக நோயை ஏற்படுத்தக்கூடும். பொதுவாக தங்கம், பாதரசம் போன்ற கடினமான மூலகங்களைப் பயன்படுத்தி மருந்து தயாரிக்கும் சித்த மருத்துவர்களே சிறுநீரக நோய்க்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே, சித்த, யுனானி, ஆயுர்வேத மருத்துவ முறைகளில் சிறுநீரக நோய்க்கு மருந்து ஏதும் இருப்பதாக இதுவரை அறிவிக்கப்படவில்லை.

*சிறுநீரக நோய் ஒருவருக்கு உள்ளது என்பதைச் சோதனை முறையில் எவ்வாறு அறிந்து கொள்ள இயலும்?*

இரத்தத்திலிருந்து கழிவுப் பொருள்களை அகற்றுவது சிறுநீரகங்களின் வேலை. வெளியேறும் பொருள்களில் புரதப்பொருளும் ஒன்று. இதனை Albumin என்றும் சொல்வார்கள். சாதாரணமாக சிறுநீரகத்திலிருந்து 150 மில்லி கிராம் புரதம்தான் வெளியேறும். இதன் அளவு அதிகரித்தால், அதாவது சிறுநீரகம் அதிக அளவு புரதப் பொருளை வெளியேற்றத் தொடங்கினால், கால் கைகள் வீங்க ஆரம்பிக்கும். இது சிறுநீரக நோயின் அடையாளம் ஆகும்.

மனிதனின் இரத்தத்தில் அதிகபட்சம் 40 மில்லிகிராம் யூரியா இருக்க வேண்டும். அதன் அளவு அதிகமானால், அவர் சிறுநீரக நோய் உள்ளவர் எனத் தெரிந்து கொள்ளலாம்.

*செயற்கைச் சிறுநீரகம் என்று சொல்லப்படுகிறதே அது என்ன? அதன் பணிகள் யாவை?*

ஹேமோ டயலைசெர் (Haemo Dialyser) எனப்படும் சவ்வு வழி இரத்தப் பிரிவுக் கருவியைச் செயற்கைச் சிறுநீரகம் என்று சுருக்கமாகச் சொல்கிறோம். ஒரு மனிதருக்கு 2 சிறுநீரகங்கள் உள்ளன. அவை, நாளொன்றிற்கு 24 மணிநேரமும் கடுமையாக உழைக்கின்றன. இரத்தத்திலிருந்து கழிவுப் பொருள்களை அகற்றுகின்றன. உடலின் உட்புற இரசாயன அமைப்பை நன்கு கவனிக்கின்றன. உடலின் நீர் அளவைச் சரிசெய்து இரத்த அழுத்தத்தைச் சீராக்குகின்றன. சிவப்பு அணுக்களின் உற்பத்திக்கு உதவி புரிகின்றன.

ஒரு மனிதரின் 2 சிறுநீரகங்களும் பழுதுபட்டு, அவை செயலிழந்து விட்டால் உயிர்வாழ முடியாது. அவரை வாழ வைப்பதற்கு மாற்றுச் சிறுநீரகம் பொருத்த வேண்டும். மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்படும்வரை, சிறுநீரகத்தின் பணியை இந்தச் செயற்கைச் சிறுநீரகம் செய்து வருகிறது. இந்தச் செயலை டயாலசிஸ் என்கிறோம்.

*டயாலசிஸ் முறை குறித்து விளக்குங்கள்*

சிறுநீரகம், இரத்தத்திலிருந்து பல்வேறு கழிவுப் பொருள்களைப் பிரித்து அனுப்புகிறது. அவை செயலிழந்துவிடுமானால், கழிவுப்பொருள்களை சரிவரப் பிரிக்க முடியாது போய்விடுகிறது. அவை நஞ்சுப் பொருளாகி, உடலுக்குக் கேடு விளைவித்து உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துகிறது. அதனால் டயலைசர் கருவியின் உதவியால், ஒரு மனிதரின் இரத்தம் ஒரு ரப்பர்க் குழாயின் மூலம் கருவியில் உள்ள ஒரு குழாய் போன்ற கொள்கலனுக்குள் செலுத்தப்படுகிறது. ஒருவிதக் கரைசலின் உதவியால் இரத்தம் சுத்திகரிக்கப்பட்டு, கழிவுப் பொருள்கள் தனியாகப் பிரிக்கப்பட்டு, அவை ஒரு ரப்பர்க் குழாயின் மூலம் வெளியே அனுப்பப்படுகின்றன. சுத்தம் செய்யப்பட்ட இரத்தம் மற்றொரு சிறு ரப்பர்க்குழாயின் மூலம் உடலுக்குள் திருப்பிச் செலுத்தப்படுகிறது.

*இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டவர்கள் இந்த டயலைசர் கருவி மூலமே காலம் தள்ள முடியாதா? மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்படுவது அவசியம்தானா?*

டயாலசிஸ் முறை மூலம் சிலர் பத்தாண்டுக் காலம் கூட, காலம் தள்ளி வருகிறார்கள். உடல் வலுவைப் பொறுத்து, இது பல்லாண்டுக் காலம் நடைபெற முடிகிறது. தொடர்ந்து சிகிச்சை பெற வேண்டியுள்ளது. அதனால் மாற்றுச் சிறுநீரகம் பொருத்திக் கொள்வதுதான் நல்லது. என்றாலும் திடீரென்று மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சை



பெரிடோனியல் டயாலசிஸ்

செய்து கொள்ள முடியாது. அதனை மேற்கொள் வதற்கு முன்னர், நோயாளி உயிர் வாழ்வதற்கு, தாற்காலிகமாக டயாலசிஸ் செய்துதான் ஆக வேண்டும். டயாலசிஸ் முறையின் மூலம் அவர் பக்குவப்படுத்தப்பட வேண்டும். ஒரு வாரத்திற்கு 3 முறை டயாலசிஸ் செய்ய வேண்டும். ஒரு தடவைக்கு 4 மணிநேரம் ஆகும்.

*டயாலசிஸ் முறையில் இரண்டு வகை உள்ளதாகச் சொல்கிறார்களே!*

நமது நாட்டில் ஹேமோ டயால்சிஸ் (Hameo Dialysis), பெரிட்டோனியல் டயாலசிஸ் (Peritoneal Dialysis) என இருவகை உள்ளன.

பெரிடோனியல் டயாலசிஸ் மிகவும் எளிய முறையில் இயக்கப்படுகிறது. அது மட்டுமல்ல, இதில் சிக்கலான தொழில் நுணுக்கம் ஏதும் கிடையாது. மிக அதிக அளவு எண்ணிக்கையில் இதன் மூலம் சிகிச்சை தர இயலும்.

ஹேமோ டயாலசிஸ் முறையில் தொழில் நுணுக்கம் அதிகம். இதனை இயக்குவதற்கும் பராமரிப்பதற்கும் பயிற்சிபெற்ற மருத்துவ ஊழியர்கள் தேவை. இந்த இயந்திரத்தில் பயன்படுத்தத்தண்ணீரும் மின்சக்தியும் இடைவிடாது கிடைக்க வேண்டும். தண்ணீர் பயன்படுத்தும் கருவி தேவை. கண்காணிப்பதற்கு இரத்தக் குழாய் தொடர்பான கல்வி பயின்றுள்ள, அனுபவமுள்ள, அறுவைச் சிகிச்சை மருத்துவரும் தேவை. ஒருமுறை இதன் மூலம் சிகிச்சை பெற ரூ.300 ஆகிறது. ஒரு மாதத்திற்கு, குறைந்தது ரூ.4000 செலவாகும்.

*மாற்றுச் சிறுநீரகம் பொருத்துவது என்றால் என்ன?*

மாற்றுச் சிறுநீரகம் பொருத்துவதென்பது, ஒருவரின் இரு சிறுநீரகங்களும் பழுதுபட்டுப் போனால், அடுத்தவரிடமிருந்து ஒரு சிறுநீரகத்தை அறுவைச் சிகிச்சையின் மூலம் பெற்று, நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு அறுவைச் சிகிச்சையின் மூலம் பொருத்துவதாகும்.

பொதுவாக ஒரு மனிதர் ஒரே ஒரு சிறுநீரகத்துடனேயே உயிர்வாழ முடியும் என்பதை மருத்துவ உலகம் உணர்ந்திருக்கிறது. ஒரு சிலர் பிறவியிலேயே ஒரே ஒரு சிறுநீரகத்துடன் பிறந்துள்ளார்கள். பத்து இலட்சம் பேருக்கு ஒருவர் இந்த விதத்தில் பிறக்கிறார்கள் என்று புள்ளி விவரம் கூறுகிறது.

*மாற்றுச் சிறுநீரகம் பொருத்தும் சிகிச்சை முறை எப்போது அறிமுகம் செய்யப்பட்டது?*

1954-இல் பாரிசில் உயர்ந்த மாடிக் கட்டடத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் தவறிக் கீழே விழுந்து விட்டார். விழுந்த வேகத்தில் அவரது சிறுநீரகம் பலமாக அடிபட்டுப் பழுதடைந்து விட்டது. அந்தச் சிறுநீரகத்தை அகற்ற வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. அந்த முயற்சியில் ஈடுபட்டபோதுதான் அவர் ஒரே ஒரு சிறுநீரகத்துடன்- பிறந்தவர் என்னும் உண்மை தெரிய வந்தது. அதுமட்டுமல்ல ஒருவர் ஒரே ஒரு சிறுநீரகத்துடன் உயிர்வாழ முடியும் என்ற உண்மையும் புலப்பட்டது.



ஹேமோ டயாலசிஸ்

அந்த நபரின் தாயாரே, தனது சிறுநீரகங்களில் ஒன்றைத் தன் மகனுக்குத் தானமாக வழங்கினார். மாற்றுச் சிறுநீரகம் வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டது. 1954-இல் இந்த அதிசயம் நடைபெற்றது. அதே காலகட்டத்தில் அமெரிக்காவிலும் மாற்றுச் சிறுநீரகம் வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டது. இதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னரே ரஷ்ய நாட்டில் மாற்றுச் சிறுநீரகம் பொருத்தும் முயற்சி நடைபெற்றுள்ளது. எனினும் அது வெற்றி பெறவில்லை. பிரான்சிலும், அமெரிக்காவிலும் நடைபெற்ற மாற்றுச் சிறுநீரகப் பொருத்துதல்தான் முதன்முதலாக வெற்றிகரமாக அமைந்தவை என்று குறிப்பிடலாம்.

இந்தியாவைப் பொறுத்த அளவில் 1968, 1970 ஆண்டுகளில் பனாரஸ் இந்துப் பல்கலைக் கழகத்தில் முதன்முறையாக வெற்றிகரமான முறையில் மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் வேலூர் கிறிஸ்துவ மருத்துவமனையில் 1971-இல், முதன்முதலாக வெற்றிகரமான முறையில் மாற்றுச் சிறுநீரகம் பொருத்துதல் நடைபெற்றுள்ளது. நமது அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரையில் 1987 ஜூலையில் இருந்துதான் மாற்றுச் சிறுநீரகம் பொருத்தும் முயற்சி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*மாற்றுச் சிறுநீரகம் பொருத்துவதில் கையாளப் பட்டுவரும் விதிமுறைகள் யாவை?*

உயிரோடிருப்பவரிடமிருந்துதான் சிறுநீரகம் தானம் பெறப்படுகிறது.

சிறுநீரகம், தானம் அளிப்பவரின் இரத்த வகை- சிறுநீரகம் பொருத்தப்படுபவரின் இரத்த வகை இரண்டும் ஒரே பிரிவைச் சார்ந்ததாக இருக்கவேண்டும்.

சிறுநீரகம் வழங்குகின்றவருக்கு அதன் காரணமாக உடல் நலத்திற்கு பாதிப்போ, தொல்லையோ

வராது என்பது மருத்துவ ஆய்வின் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும்.

கூடியவரை உறவு முறையைச் சேர்ந்தவர்களிட மிருந்து அதாவது தந்தை, தாய், அண்ணன், தம்பி ஆகியோரிடமிருந்து சிறுநீரக தானம் பெறுவது தான் நல்லது. இத்தகைய உறவினர்களின்மூலம் சிறுநீரகம் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் பெரியப்பா, பெரியம்மா என்ற வகையில் இரண்டாம் நிலை உறவினர்களிடமிருந்து பெறலாம்.

18-லிருந்து 55-வயதுள்ளவர்களிடமிருந்து சிறுநீரகம் தானம் பெறவேண்டும்.

*மரணம் எய்தியவர்களின் சிறுநீரகத்தை எடுத்து, பயன்படுத்தலாமா?*

வெளிநாடுகளில் பயன்படுத்துகிறார்கள். மரணம் அடைபவர்களின் உடலிலிருந்து - அவர்கள் மரணம் அடைந்து ஒருமணி நேரத்திற்



குள் சிறுநீரகம் எடுக்கப்பட்டு, அடுத்தவருக்குப் பொருத்தப்படுகிறது.

மரணம் எய்தியவர்களிடமிருந்து கண்கள் எடுக்கப்பட்டு, பார்வை இழந்தவர்களுக்குப் பொருத்தப் படுவது போலத்தான் இதுவும்!

ஆனால், நமது நாட்டில் மரணம் எய்தியவரின் சிறுநீரகத்தை எடுத்துப் பயன்படுத்துவது வழக்கத் திற்கு வரவில்லை. எதிர்காலத்தில் இந்த வழக்கம் உலக முழுதும் பரவினால் சமுதாயத்துக்கு அது நல்ல பலனை அளிக்கும்.

உயிரோடு இருப்பவர்கள் தனது சிறுநீரகத்தில் ஒன்றினை மற்றொருவருக்கு வழங்க எளிதில் முன்வருவதில்லை. அத்துடன் உறவினர்களில் ஒரே வகை ரத்தம் அமைவதும் அரிது. மேலும் நாம் குடும்ப நலத்திட்டத்தை மேற்கொள்வதன் காரணமாக - குடும்பங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அளவாகி விடுகிறது.

ஆகவே இதுபோன்ற நிலைமைகளில் எதிர் காலத்தில் - மரணம் எய்தியவர்களின் சிறுநீரகங் களை, அடுத்தவர்களுக்குப் பயன்படுத்தும் சூழ் நிலை உருவாக வேண்டும். சமுதாயம் இந்த ஒப்பற்ற பணிக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். பிறருக்கு உதவுவதே பெருந் தொண்டு என்பதை நம்து மக்கள் உணர வேண்டும்.

*நடுத்தர வயதுள்ள (30) இளைஞருக்கு, அவரை விட வயது அதிகமானவரின் (50) சிறுநீரகத்தைப் பொருத்துவது சரியாக இருக்குமா? அதிக வளர்ச் சியுள்ளதாக இருக்காதா?*

சிறுநீரகத்தைப் பொறுத்தவரையில் நடுத்தர வயதுடையவருக்கு என்ன வளர்ச்சி உள்ளதோ அதே வளர்ச்சிதான் வயதுவந்தவர்களுக்கும் இருக்கும். அப்படி ஒன்றும் வித்தியாசம் இருப்ப தில்லை. அப்படியே ஓரிரு இரத்தக்குழாய்கள் பெரியதாக இருக்கலாம். அவற்றை அறுவைச் சிகிச்சையின் மூலம் நீக்கிச் சரிசெய்து விடுவோம்.

*மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்ட பின்னர் கவனிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் யாவை?*

மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்ட பின்னர் சரியான பராமரிப்பு தேவைப்படுகிறது. அந்த நபர் 2 அல்லது 3 வாரங்கள் வரை குளிர்சாதன வசதி கொண்ட அறையிலே வைக்கப்படுகிறார்.

பொதுவாக எந்த ஒரு புதிய கொள்கையையும் சமூகமோ, சமுதாயமோ உடனடியாக ஏற்றுக் கொள்வதில்லை அல்லவா? முதலில் எதிர்ப்பதும், பின்னர் இணங்குவதும் வழக்கமாக இருந்து வரு கிறது. அது போலவே மாற்றுச் சிறுநீரகத்தை உடல் ஏற்றுக்கொள்ள மறுக்கலாம். அதனைக் கண்டறிந்து அதற்குரிய மருந்துகளை நோயாளிக் குத் தரவேண்டும். வேறு ஏதேனும் சிக்கல் உள் ளதா, கிருமிகளின் தொத்து ஏற்பட்டுள்ளதா என்பனவற்றையும் சோதித்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.

மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்டவர் எந்த விதமான சிக்கலுக்கும் ஆளாகவில்லை என்று தெரிந்த பின்னர் 3 வாரங்கள் கழித்து , புற நோயாளர் பிரிவுக்கு அனுப்பப்படுகிறார்.

மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்டவர் தொடர்ந்து, உரிய மருந்துகள் சாப்பிட்டு வர வேண்டும். மருந்துச்செலவு மாதத்திற்குக் குறைந்தது ரூ.300 ஆகும். இந்த மருந்துகள் நமது நாட்டில் தயாரிக்கப்படுவதில்லை. ஸ்விட்ஜர்லாந்தில்தான் தயாரிக்கப்படுகின்றது. நாம் ஸ்விட்ஜர்லாந்தி லிருந்து இறக்குமதி செய்கிறோம்.

*சிறுநீரக நோய்கள் வராமல் பாதுகாத்துக் கொள்வ தற்கு வழிமுறைகள் உண்டா?*

அதற்குப் பல வழிமுறைகள் உள்ளன. அவற்றை ஒவ்வொருவரும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

ஒவ்வொரு மனிதரு ஒருநாளைக்கு - அதிலும் குறிப்பாக வெயில்காலத்தில் 2 லிட்டர் தண்ணீ ராவது உட்கொள்ள வேண்டும்.

நாட்டு மருந்துகள் சாப்பிடுவோர், தங்கம், வெள்ளி, மெர்க்குரி போன்ற கடினமான உலோ

கப் பொருள்கள் கலந்திருக்கும் மருந்துகளைத் தவிர்க்க வேண்டும்.

ஏதாவது நோய் கண்டால் நமக்கே எல்லாம் தெரிந்ததாக எண்ணிக்கொண்டு, தனக்குத்தானே டாக்டர் ஆக மாறி, மருந்துகளைத் தாங்களே தேர்ந்தெடுத்து உட்கொள்ளுதல் கூடாது. (மருத்துவரின் அறிவுரைப்படிதான் நடந்து கொள்ள வேண்டும்).

சாதாரணமாக சளி போன்றவை இருந்து, தொண்டை அடைப்பு ஏற்பட்டால் அதை மெத்தனமாக எண்ணக்கூடாது. உடனே மருத்துவரிடம் சென்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

இரத்தக் கொதிப்பு நோய் ஏற்பட்டால் அதனை அசட்டை செய்யக்கூடாது. சிறுநீர், இரத்தம் ஆகியவற்றை உடனடியாகச் சோதித்துக் கொள்ள வேண்டும்.

கை, கால்களில் புண் ஏற்பட்டால் அதை எளிதாக எண்ணி ஏனோ தானோ என்று இருந்து விடக் கூடாது. உடனே டாக்டரிடம் காண்பிக்க வேண்டும்.

கணுக்கால், பாதம் ஆகியவற்றில் வீக்கம் ஏற்பட்டால் அதனை அசட்டை செய்யாமல் டாக்டர்களிடம் காண்பித்துச் சிகிச்சை பெறவேண்டும்.

நீரிழிவு நோய் உள்ளவர்களுக்குச் சிறுநீரகம் பாதிப்பதற்கு வாய்ப்பு உள்ளதால் அவர்களும் அடிக்கடி மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

இரத்தத்திலிருந்து வெளியேறும் புரதப் பொருளின் (Albumin) அளவு அதிகம் ஆகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

*நமது பொது மருத்துவமனையில், சிறுநீரக இயல் பிரிவில் அளிக்கப்பட்டுவரும் சிகிச்சை குறித்துச் சொல்லுங்கள்*

நமது பொது மருத்துவமனையில் சிறுநீரக இயல் பிரிவில் வாரத்திற்கு 4 நாட்கள் (திங்கள், புதன், வியாழன், வெள்ளி) புறநோயாளிகளைப் பரிசோதித்து வருகிறோம். புதன்கிழமை ஒருநாள் மட்டும் மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்டவர்கள் உடல் நலனைப் பரிசோதனை செய்கிறோம்.

நமது பொது மருத்துவமனையில் ஹேமோ டயாலசிஸ் எந்திரங்கள் 8 உள்ளன. ஒரு இயந்திரத்திற்கு 4 பேர் வீதம் ஒருநாளைக்கு 18-24 பேருக்கு டயாலசிஸ் சிகிச்சை செய்ய முடியும். ஒரு வாரத்திற்கு 5புதிய நோயாளிகள் வீதம் சிகிச்சைக்கு வருகிறார்கள். மொத்தத்தில் ஓர் ஆண்டிற்கு 300 பேர் டயாலசிஸ் சிகிச்சைக்காகப் பொது மருத்துவமனையை நாடி வருகிறார்கள்.

சென்ற 1989-ஆம் ஆண்டில் புறநோயாளர் பிரிவில் 9157 பேர்களும், தங்கிச் சிகிச்சை பெறும்பிரிவில் 2407 பேர்களும் சிகிச்சையளிக்கப்பட்டிருக்கிறார்கள். பெரிடோனியல் டயாலசிஸ் மூலம் 818 பேர்களும், ஹேமோ டயாலசிஸ்



மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் திரு. அதியமான்.

சென்னை பொது மருத்துவ மனையில் சேர்ந்து, மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் திரு. அதியமான் தனது அனுபவத்தைக் கூறுகிறார்:

''திடீரென மிகவும் மோசமான உடல் நிலையில் நான் சென்னை பொது மருத்துவ மனையில் சேர்ந்தேன். எனது சிறுநீரகங்கள் இரண்டும் செயலிழந்து விட்டன என்று டாக்டர்கள் தெரிவித்தபோது நான் பெரும் அதிர்ச்சிக்கு ஆளானேன்.

சிறுநீரக நோய்ப் பிரிவு தலைமை டாக்டர் முத்து சேதுபதி அவர்கள் அளித்த தைரியத்தினாலும், சிகிச்சையினாலும் நான் மறுவாழ்வு பெற்றேன். மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்டது. நல்ல முறையில் இந்த மருத்துவ மனையிலிருந்து வீட்டுக்கு அனுப்பப்பட்டேன்.

நமது தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், எனக்குத் தேவையான உதவிகளை எல்லாம் செய்தார்கள், செய்து வருகிறார்கள். அவர்களது தாய் உள்ளம், எண்ணி எண்ணிப் போற்றத்தக்கது.

சிறுநீரகத்தில் ஏற்படும் கல், கட்டி போன்றவற்றை நீக்குவதற்காக அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் நபர்களுக்கு ரூ.5,000 வரை நிதி உதவி அளித்து வருகிறார்கள். இதுவரை 27 பேருக்கு இந்த நிதி உதவி கிடைத்திருக்கிறது. இது போன்ற அரச் செயலில் வேறு எந்த மாநிலத்து முதல்வரும் ஈடுபட்டதாகத் தெரியவில்லை.

இந்த நிதி உதவி குறித்து ஒரு கருத்து எனக்குத் தோன்றுகிறது. நிதி உதவித் தொகை நோயாளிகளுக்கு நேரடியாகக் கொடுக்கப்படுவதால், அந்தத் தொகையை கையில் வைத்துக் கொண்டு, அவர்கள் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெறுவதில் ஈடுபடுகிறார்கள். அரசு அளிக்கும் 5 ஆயிரம் ரூபாயை அங்கு செலவு செய்து விட்டு, மேற்கொண்டு சிகிச்சைக்குப் பணமில்லாமல், பின்னர் அரசு மருத்துவ மனையையே நாடி வருகிறார்கள்.

அதனால் அரசு, நிதி உதவித் தொகையை அரசாங்க மருத்துவ மனைக்கு வழங்கி, அங்கே சென்று சிகிச்சை பெறும்படி நோயாளிக்குத் தகவல் தரலாம். இப்படிச் செய்தால் அரசு வழங்கும் நிதி அரசு மருத்துவமனைக்கே போய்ச் சேர்வதுடன், நோயாளிகள் முதலிலிருந்தே அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் வாய்ப்பும் ஏற்படும்.''

மூலம் 3502 பேர்களும் டயாலசிஸ் செய்யப் பட்டுள்ளனர். 41 பேர்களுக்கு மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்டுள்ளது. 1987-90 முதல் 125 பேர்களுக்குப் பொருத்தப்பட்டுள்ளது.

நமது அரசு மருத்துவமனையைப் பொறுத்த அளவில் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு, நோய்க் கண்டுபிடிப்பு, டயாலசிஸ் சிகிச்சை, மாற்றுச் சிறுநீரகம் பொருத்தும் சிகிச்சை - அதன் பின்னர் வழங்கப்படும் மருந்து அனைத்தும் இலவசம் என்பது குறிப்பிடத்தக்கது. மருத்துவ மனைகளில் மாற்றுச் சிறுநீரகம் பொருத்தும் சிகிச்சைக்காக ரூ.80,000-லிருந்து 1 இலட்சம் வரை வசூல் செய்கிறார்கள். அவ்வளவு விலை உயர்ந்த சிகிச்சையும் நமது பொது மருத்துவமனை யில் இலவசமாகவே அளிக்கப்படுகிறது. இந்தியா விலேயே மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சை நமது தமிழக அரசு மருத்துவமனைகளில் தான் இலவசமாகச் செய்யப்படுகிறது.

மாற்றுச் சிறுநீரகம் பொருத்தும் சிகிச்சையில், உறவுமுறை அல்லாத தனிப்பட்டவர்களிடமிருந்து சிறுநீரக தானம் பெறுவதை நமது பொது மருத்துவ மனையில் ஆதரிப்பதில்லை. தனியார் மருத்துவ மனைகள் அதை ஏற்றுக் கொள்கின்றன. அதில் வியாபார நோக்கங்கள் சில சமயத்தில் தலை காட்டுகின்றன.

பொது மருத்துவமனையில் சிறுநீரக அறுவைச் சிகிச்சையை நல்லமுறையில் மேற்கொள்வதற்காக உரிய கருவிகள் வாங்குவதற்கு நமது தமிழக முதல்வர் அவர்கள் சென்ற ஆண்டு (1989) தமது பிறந்த நாளையொட்டி ரூ.1 கோடி நிதி அளித்தார்.

அத்துடன், சிறுநீரக அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதற்காக நபர் ஒருவருக்கு ரூ.5,000 நிதியுதவி செய்து வருகிறார். இதனால் ஏழை-எளிய மக்கள் பலன் பெறுகிறார்கள்.

நமது பொது மருத்துவமனையில் இரத்தம் முதலியவற்றைச் சோதித்துப் பார்ப்பதற்கு ஆய்வுக் கூடங்கள் உள்ளன. என்றாலும், சிறுநீரக நோய் இயல் பகுதியில் அடிக்கடி நோயாளிகளின் இரத்தத்தைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படுவதால், சிறுநீரக நோயியல் பகுதிக்கென்றே தனியாக ஆய்வுக்கூடம் செயல்பட்டு வருகிறது.

நமது அரசினர் பொது மருத்துவமனையில் சிறுநீரக இயல் பிரிவில் உள்ள மருத்துவர்களும், செவிலியர்களும் மிகுந்த கடமையுணர்வுடனும் ஈடுபாட்டுடனும் பணியாற்றி வருகிறார்கள். என்றாலும் வேலைப்பளு அதிகரிப்பதால், அதற்கு ஏற்றவகையிலே ஊழியர்களும் அதிக எண்ணிக்கை யில் தேவைப்படுகிறார்கள். தற்போது இந்த வகையில், சிறுநீரக இயல் பிரிவில் பற்றாக்குறை உள்ளது. இந்தக் குறையை நீக்குவதற்கு அரசு ஆவன செய்தால் பேருதவியாக இருக்கும் என்பதை இந்தச் சமயத்தில் குறிப்பிடுவது பொருத்தம் என எண்ணுகிறேன்.

—பேட்டி: தமிழ்ப்பித்தன்



## எழுத்தறிவு

எழுத்தறிவு இல்லாமலே, எல்லாச் செயல் களையும் சாதிப்பது என்பது முடியாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். கல்வி ஒருவனு டைய அறிவைப் பெருக்கும். கூர்மையாக்கும், நற் செயல்களைச் செய்ய அவனைத் தூண்டும்.

கல்வியறிவு இல்லாவிடில் கோடிக்கணக்கான மக்களுக்குத் தம்மை அறியும் சக்தியே இல்லாது போய்விடும். தீங்கிழைக்காது இன்பம் பயக்கும் நூல்கள் பல உள்ளன. கல்வியறிவில்லாதவனுக்கும் விலங்கிற்கும் அதிக வேறுபாடு இல்லை எனக் கூறுவது மிகைப்படுத்திக் கூறுவதல்ல; உண்மையே.

## எழுத்தாளர்களுக்கு...

நமது இலக்கியங்களில் பெண்களை அளவுக்கு மீறி மேன்மைப்படுத்திப் பேசுகின்ற பகுதிகளும் உண்டென்று நான் கேள்விப்படுகிறேன். இப்படிப் போலி மேன்மை அளிப்பது தவறான போக்காகும். எளிய கேள்வியொன்றை உங்களைக் கேட்கிறேன். பெண்களைப் பற்றி எழுத முயலும்போது எந்த நோக்கத்துடன் நீங்கள் அவர்களை எண்ணிப் பார்க்கிறீர்கள்? காகிதத்தில் பேனாவைக் கொண்டு எழுதத் தொடங்கும் முன் பெண்ணை உங்களு டைய பெற்ற தாயைப் போல எண்ணிக் கொள் ளுங்கள். அப்படி எண்ணினால், தாகத்தினால் தவிக்கும் பூமிக்கு எங்ஙனம் வானத்திலிருந்து மழை கிடைக்கின்றதோ, அதைப்போல உங்கள் எழுது கோலிலிருந்தும் மிகத் தூய இலக்கியம் பிறக்கும்.

## சத்தியம்

''சத்தியம்'' (உண்மை) என்னும் வார்த்தை ''சத்'' என்பதிலிருந்து வந்தது. 'சத்' என்னும் பதத்திற்கு 'இருத்தல்' என்பது பொருள். எனவே, சத்தியத்தைத் தவிர உண்மையில் வேறொன்றும் இல்லை என்பதும் புலப்படும்.

சத்தியமிருக்கும் இடத்தில் களங்கமற்ற அறிவும் இருக்கிறது. சத்தியமில்லாவிடத்து சுத்த ஞானம் கிடையாது.

### ஒரு குயிலின் கதை

**ஆசிரியர்:**
**பின்னலூர் மு. விவேகானந்தன்**
**வெளியீடு:**

பத்மா பதிப்பகம்
39, கே.ஆர். கோயில் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை 600 033

பக்கம்:108 விலை:ரூ.14

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் வாழ்க்கை வரலாறு பிஞ்சுக் குழந்தைகளும் புரிந்து கொள்ளும் வகையில் இந்நூலில் எழுதப்பட்டுள்ளது.

கட்டுரை வடிவிலோ, திறனாய்வு முறையிலோ இந்நூலைத் தீட்டாமல் தந்தை-மகன் உரையாடலின் வாயிலாக வடித்துத் தந்திருப்பது பாராட்டுக்குரியது. அரிய செய்திகள், பெரிய செய்திகள் அனைத்தும் மிக எளிய முறையில் இந்நூலில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. நூலின் நடை நம்மைக் கவர்கிறது. இடையிடையே பாவேந்தரின் புகைப்படங்களும் இடம் பெற்று நூலுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன.

— தமிழ்ப்பித்தன்

### மனக் குயிலின் மௌன கீதங்கள்

**ஆசிரியர்: தென்னம்பட்டு ஏகாம்பரம்**
**வெளியீடு:**

செல்வன் பதிப்பகம்,
19, முண்டகக் கண்ணியம்மன் கோயில்
4-வது தெரு, மயிலாப்பூர்,
சென்னை-600 004.

விலை:ரூ.14 பக்கம்:136

இனிக்கும் தேனடையில் 136 அறைகள் மட்டுமே இருந்தால் எப்படியிருக்கும்? அப்படியிருக்கிறது ஐந்து தொகுப்புகளின் கீழே 136 கவிதைகளைக் கொண்டதாகத் தொகுக்கப்பட்டுள்ள இந்த நூல். அழகு, அட்டையிலே மட்டுமல்ல- அச்சில் கவிதைகள் அமைக்கப்பட்டிருக்கும் பக்கங்களிலும் தலைப்புகளிலும்கூடப் பளிச்சிடுகிறது.

இனிய- இயல்பான நடையில் மரபுக் கவிதைகள்... அங்கொன்று இங்கொன்றாய்ப் புதுக்கவிதைகள்... இடையிடையே சந்தப் பாடல்கள் எல்லாம் உடைய இந்நூலுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அளித்துள்ள அணிந்துரையில், நூலாசிரியரைப் பற்றிக் குறிப்பிடுகையில்- 'தன் பாட்டுத் திறத்தால் நாட்டுக்குத் தன்னை அடையாளப்படுத்தி வருகிறார்' என்று குறிப்பிட்டிருக்கிறார். புலவர் கா.கோவிந்தன் அவர்கள் தனது அணிந்துரையில்- 'இவை தெவிட்டாத தேன் பா' என்கிறார்.

இந்த நூலின் நயம் தெரிவிக்க அவை போதாதோ! —'முடிகொண்டான்'




### பல்துறை அறிவியல் (4)

**ஆசிரியர்: ஆனைவாரி ஆனந்தன்**
**வெளியீடு:**

மணியம் பதிப்பகம்,
39, இரத்தின முதலித் தெரு,
குறிஞ்சிப்பாடி-607 302 (தெ.ஆ.மா.)

பக்கம்: 319 விலை ரூ.38

அறிவு வளர்ச்சிக்கு அறிவியலும் ஒரு பெரும் துணையாக விளங்குகின்றது. அறிவியல் பல அற்புதங்களைச் செய்து வரும் கால கட்டத்தில் நாம் இருக்கிறோம். அந்த அற்புதங்களைத் தெரிந்து கொள்ள இந்த நூல் வரிசை உதவுகிறது.

பல வண்ண விளக்கப் படங்களுடன், விலங்கியலைப் பற்றிக் கூறுகிறது இந்நூல். விலங்கினத்தின் தோற்றமும் வளர்ச்சியும் முதல், வன விலங்குகள் பாதுகாப்பு முடிய பலப்பல அறிவியல் செய்திகளைத் தெரிந்து கொள்கிறோம்.

'பூமியில் உயிரினத் தோற்றமும் வளர்ச்சியும்' — விளக்க வண்ணப் படங்கள், இந்நூலுக்குச் சிறப்பைத் தருகின்றன. மாணவர்க்கும் பயன்படும் மிகச் சிறந்த நூல்.

— பி.வி. கிரி

### அறிஞர்கள் கண்ட கற்பனை உலகம்

**ஆசிரியர்: மனோஸ்**
**வெளியீடு:**

சந்துரு பதிப்பகம்,
4, டாக்டர் நியமதுல்லா சாகிப்பு தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

விலை:ரூ.10.00 பக்கம்:95

இது ஒரு அற்புதமான நூல். அமர இலக்கியங்கள் படைத்த அறிஞர்கள் ஒவ்வொருவரும் ஒரு நாடு அல்லது உலகம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று தத்தமது காலநிலை, சூழ்நிலைகளுக்கு ஏற்ப தமது இலக்கியங்களில் கற்பனை உலகங்களைப் படைத்து அதில் சஞ்சரித்து மகிழ்ந்திருக்கிறார்கள்.

அந்தக் கற்பனை உலகங்களை இச்சிறு நூல் மிக அழகாக விவரித்து இருக்கிறது.

— என். குமாரசாமி

### சங்கே முழங்கு

**ஆசிரியர்: கடவூர் மணிமாறன்**
**வெளியீடு:**

விடியல் வெளியீட்டகம்
109, மேலைத் தெரு,
கிருட்டிணராயபுரம்-639 102.

விலை:ரூ.10 பக்கம்:104

நெஞ்சைத் தொடும் கவிதைத் தொகுப்பு.

தமிழ், தமிழ்நாடு, ஆசிரியர், மாணாக்கர், புலவர், எழுத்தாளர், பொழிவாளர், இதழாளர் என்று பல்வேறு தலைப்புகளில் கவிதைகள் இதயத்தைத் தொடுகின்றன.

### ஒரு வாத்தியாரின் டைரி

**ஆசிரியர்: ஆர்.எஸ். ஜேக்கப்**
**வெளியீடு:**

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
த.பெ.எண்: 501, பூங்கா நகர்,
சென்னை-600 003.

விலை:ரூ.9.00 பக்கம்:48

ஆசிரியர் தனது வகுப்பில் மாணவர்களுக்குப் பாடம் போதிக்கும்போது நிகழும் அனுபவங்களை எளிமையாய் நகைச்சுவையோடு எழுதி இருக்கிறார். சம்பவங்களுக்கு ஏற்ப, வேதாகமத்திலும், திருக்குறள், பாரதியின் கவிதைகளிலிருந்தும் தக்க மேற்கோள்கள் சொல்லப்பட்டிருப்பது மேலும் சுவை கூட்டுகிறது.

### நீரிழிவுக்குத் தமிழ் மருந்துகள்

**ஆசிரியர்: டாக்டர் திருமலை நடராசன்**
**வெளியீடு:**

தமிழ்ச் செல்வி நிலையம்,
43, சித்திரைக்குளம் வடக்குத் தெரு,
மயிலாப்பூர், சென்னை-600 004.

விலை:ரூ.9.00 பக்கம்:96

மிகக் கொடிய நோயான நீரிழிவு எப்படி உண்டாகிறது? யார்யாருக்கு உண்டாகிறது? அதன் தன்மை என்ன? பாதிப்பு என்ன? இதன் கொடுமையிலிருந்து நோயாளிகள் எப்படி, என்னென்ன மருந்துகள் உண்டு தங்களைக் காத்துக் கொள்ளலாம், தங்கள் குழந்தைகளுக்கு இந்நோய் வராமல் இருக்க என்ன செய்யலாம் என்பன போன்றவற்றைச் சிறப்பாக இந்நூல் விவரிக்கிறது.

''எய்ப்பில்வைப் பாக வருவாய் ஐந்தொன்றை
மெய்ப்பிணி சேய்வரைவிற் கூட்டிடுக - கைப்பொருள்வாய்
இட்டிலுய் வாயிடுக்க வீங்க விழையற்க
வட்டல் மனைக்கிழவன் மாண்பு''

— இன்னிலை

''பொய்கையார்''



பொருளைத் திரட்டுவதே மனைக்குரிய தலைவன் செயலாகும். வருவாய் குறைந்தால் செலவைக் குறைக்க வேண்டும். தனக்கு வரும் வருவாயில் ஐந்தில் ஒரு பங்கை வயதான காலத்தில் நுகர்வதற்குரிய சேமநிதியாக வைத்திருக்க வேண்டும். மேலும் அப்பொருள் உடற்பிணி போக்குவதற்கும் மக்கட்கு மணம் செய்வதற்கும் பயன்படும்.

இன்றே சிறுசேமிப்பில் முதலீடு செய்து உங்கள் வருங்கால வாழ்க்கையை ஒளிமயமாக்குங்கள். உங்கள் வாழ்வில் வளம் பெறப் பல நல்ல திட்டங்கள் சிறுசேமிப்பில் உள்ளன.

- ★ தேசிய சேமிப்புப் பத்திரம் 8 ஆம் வெளியீடு
- ★ தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு 1987
- ★ பொது சேமநலநிதி
- ★ மாதாந்திர வருமானத் திட்டம்
- ★ விவசாயிகள் சேமிப்புப் பத்திரம் இந்திரா சேமிப்புப் பத்திரம்
- ★ அஞ்சலகக் குறித்தகால வெளியீடு அஞ்சலகத் தொடர்வைப்புத்திட்டம்/ வளரும் மாத சேமிப்புத் திட்டம்

## மாவட்ட சிறுசேமிப்பு பரிசுக்கூப்பன் திட்டம் — 90

- — ரூ. 500/- முதலீட்டிற்கு ஒரு பரிசுக்கூப்பன்.
- — 1.6.90 முதல் 31.12.90 வரை தனிநபர்கள் முதலீடு செய்து மாருதி கார் முதல் 262 பரிசுகளில் ஒன்றை வென்றிடுங்கள். (தமிழகத்தில் முதலீடு செய்பவர்களுக்கு மட்டுமே).
- — ஒவ்வொரு ஒரு லட்சம் பரிசுக்கூப்பன்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியாளர் முன்னிலையில் குலுக்கல் நடைபெறும்.
- — சென்னை நகரில் ஒவ்வொரு லட்சம் பரிசுக்கூப்பன்களுக்கு சிறுசேமிப்பு இயக்குநர் முன்னிலையில் குலுக்கல் நடைபெறும்.

- ● தேசிய சேமிப்புத்திட்டக் கணக்கு-87 ல் (N.S.S-87) முதலீடு செய்து 100% வருமான வரிவிலக்கு ரூ. 40,000/- வரை பெற்றிடுங்கள்.
- ● தேசிய சேமிப்புப்பத்திரம் 8 ஆம் வெளியீடு/15 ஆண்டு பொதுசேமநல நிதியில் முதலீடு செய்து வருமானவரிச்சட்டம் 88 பிரிவின்படி ரூ. 50.000/வரை 20% வரிச்சலுகை பெறுங்கள்.
- ● மத்திய அரசுக்கு இணையாகச் சிறுசேமிப்பு முகவர்களுக்கு ஊக்கததொகை.
- ● ரூ. 1,000/-ம் அதற்குமேலும் முதலீடு செய்யும் முதலீடுதாரர்களுக்கு ★ இக்குறியிட்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் 1% ஊக்கத்தொகை வழங்கப்படும்.

சேமிப்புப் பத்திரம் அனைத்து அஞ்சல் நிலையங்களிலும் கிடைக்கும்.

பரிசுக்கூப்பன்கள் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் கிடைக்கும்.

இயக்குநர்
**சிறுசேமிப்புத்துறை,**
143, அண்ணா சாலை, சென்னை-600002.
தொலைபேசி: 840223/846209

# மின்சக்தி - தேவை - நிருவாகம்

## சில கருத்துரைகள்

எம். சிவஞானம், இ.ஆ.ப.
(ஓய்வு),
உறுப்பினர்,
மாநிலத்திட்டக்குழு,
தமிழ்நாடு அரசு,
சென்னை-600 005.

**பொ**துமக்கட்குப் பெரிதும் பயன்படும் மின்சக்தித் துறை மின் உற்பத்தி - அதன் பகிர்வு (வழங்கல்) ஆகிய இருபெரும் தனித்த சில இயல்புகளைக் கொண்டுள்ளது. குடிநீர் வழங்கல் தொலைபேசி, போக்குவரத்து போன்ற ஏனைய பொதுமக்கள் பயன்பாட்டுப் பணிகளைப் போலன்றி மின் உற்பத்தி நிறுவனம் ஆண்டு முழுவதும் 24 மணி நேரமும் (தடையின்றி) தொடர்ந்து நுகர்வோருக்கு மின்சக்தி கிடைக்கச் செய்கின்றது. ஆனால் நுகர்வோரின் மின் தேவை முன் கூட்டியே கணித்துக் கூற முடியாத படி மின் தேவையின் அளவு '0'-லிருந்து ஒப்பந்த உயரளவு வரை வேறுபடக்கூடும்; சில சமயங்களில் ஒப்பந்த உயர் அளவைக் காட்டிலும் அதிகமாகக் கூட இருக்கலாம். இந்தத் தேவையளவு நேரத்திற்கு நேரம் வேறுபடும்; பகல் நேரத் தேவைக்கும், இரவு நேரத் தேவைக்கும் இடையேயும் கணிசமான அளவு வேறுபடும். பருவ நிலைக்கேற்பவும் அதன் தேவை வேறுபடுகிறது. இலட்சக் கணக்கான நுகர்வோர் தனித்தனியாகப் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவுக்கேற்ப நொடிக்குநொடி மின் தேவையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில் மின்சக்தி உற்பத்தி செய்யப்பட வேண்டியுள்ளது.

உற்பத்தியாகும் மின்சக்தியை மிகக் குறைந்த அளவிலன்றிச் சேமித்து வைக்க முடியாது. அதற்கும் செலவு மிக அதிகமாகும். மின்சக்தி உற்பத்தியாகின்ற காலத்திலேயே பயன்படுத்தப்பட்டு விடவேண்டும். உற்பத்திக்கும் பயன்பாட்டிற்கும் இடையே காலவேறுபாடு இருக்க முடியாது. அவ்வாறு இருப்பினும் அது மிக மிகக் குறைந்த அளவிற்கே மாறுபடும். நுகர்வோரின் சாதனம் நன்கு செயற்படவும் அவற்றுக்குச் சேதம் ஏற்படாமல் தடுக்கவும் வேண்டுமாயின், வழங்கப்படும் மின்சக்தியின் அழுத்த அளவும் சீராக வைத்துக்கொள்ள வேண்டும்.

நிலக்கரியால் இயங்கும் மின் நிலையம் (அனல் மின் நிலையம்) மின் உற்பத்தியைத் தொடங்கவும், நிறுத்தவும் பல மணி நேரங்கள் எடுத்துக்கொள்ளும். அணு மின் நிலையங்களில் ஒரு பிரிவில் மீண்டும் உற்பத்தியைத் தொடங்க பல நாட்கள் ஆகும். புனல் மின் நிலையங்களிலும், வாயு மின் நிலையங்களிலும் மட்டுமே சில நிமிடங்களுக்குள் உற்பத்தியை நிறுத்தவோ மீண்டும் தொடங்கவோ முடியும்.

புனல் மின்சக்தி வாயிலாக மின் உற்பத்தி நிறுவனங்கள் பெற்றிருக்கிற மின் வழங்குதலை எளிதில் கையாளும் ஆற்றல் குறைந்து வருகிறது. குறிப்பாக, தமிழ்நாட்டில் பெரிய அளவிலான புனல் மின் ஆதாரங்கள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டு விட்டன. ஒவ்வோர் ஆண்டும் பெய்யும் மழையின் அளவு வேறுபடுவதால் அதற்கேற்ப மின் உற்பத்தித் திறனும் வேறுபடுகிறது. இது மற்றுமொரு தடையாகும். ஒவ்வொரு ஆண்டிலும் தொடக்கத்தின் புனல் மின் நிலையத்தின் மின் உற்பத்தித்திறன் உச்ச அளவிலிருந்து நாளாவட்டத்தில் குறைந்து '0' நிலையை அடைந்து விடுகிறது. மின் உற்பத்தித் தேவை அளவும், பாசன நீர்த் தேவை அளவும் ஒத்திருப்பதில்லை. இதனால் மின் பயனீட்டாளர் நலனும், பாசன நீர் பயனீட்டாளர் நலனும் முரண்படுகின்றன. தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் மின் சக்தி அளவில் புனல் மின் நிலையங்களின் உற்பத்தி 17.8 சதவீதம் மட்டுமேயாகும். இது மொத்த நிறுவு திறனில் 35.75 சதவீதமாகும். 35.75 சதவீத நிறுவு திறனைக் கொண்டு, 17.8 சதவீதம் மட்டுமே மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. காலங்கள் மாறிச் செல்லச் செல்ல உற்பத்தித் திறன் குறைந்து கொண்டே வருகிறது என்பதையே இது காட்டுகிறது.

தமிழ்நாட்டில் வார வேலை நாட்களில் ஒரு நாளில் பகல்நேர மின் தேவையின் உச்ச அளவுக்கும் இரவு நேர குறைந்த அளவு மின் தேவைக்கும் இடையேயான வேறு

## எது பேச்சு?

பேச்சு, காதுக்கும் கண்ணுக்கும் விருந்தளிக்கலாம்; ஆனால், அது மட்டும் போதாது என்று உங்களிடம் துணிந்து சொல்லுகிறேன். பேசுகிற பேச்சு நம் இதயத்தைத் தொடவேண்டும்; நமது கைகளும் கால்களும் தொழிற்படச் செய்ய வேண்டும். அப்போதுதான் அது பேச்சாகும்.

-அண்ணல் காந்தியடிகள்

பாடு 800 மெ.வா. ஆகும். ஞாயிற்றுக்கிழமைகளிலும், பொது விடுமுறை நாட்களிலும் இந்த வேறுபாடு சுமார் 600 மெ.வா. ஆக உள்ளது. வார வேலை நாட்களில் தேவைப்படும் மின்சக்தியின் உச்ச அளவிற்கும், ஞாயிற்றுக்கிழமைகளில் தேவைப்படும் மின்சக்தியின் உச்ச அளவுக்கும் இடையேயான வேறுபாடு 500 மெ.வா. வரையில் கூட இருக்கலாம். வேறு வகையில் சொல்லப்போனால், புனல் மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் ஒரு சில மணிநேர உச்ச அளவு மின்சக்தித் தேவையை சமாளிக்க மட்டுமே போதுமானதாக உள்ளது. எனவே, உச்ச அளவு மின்சக்தித் தேவையை மட்டுமே சமாளிக்க, பெரிய அளவிலான அனல் மின் நிலையங்களை ஏற்படுத்தி, உச்ச அளவு தேவை குறையும்போது அதற்கேற்ப அவற்றில் உற்பத்தியைக் குறைத்துக் கொள்ளலாம். உச்ச அளவு மின்சக்தி தேவையில்லாத காலங்களில் பிற மாநிலங்களுக்கு மின்சக்தியை விற்பனை செய்வது எளிதான செயல் அன்று. ஏனெனில் தமிழ்நாட்டிற்கு அதிக அளவு மின்சக்தி தேவை ஏற்படும் அதே காலங்களில்தான் மற்ற மாநிலங்களுக்கும் மின் தேவை அதிகமாக வேண்டியுள்ளது.

இன்றைய நிலையில் தமிழ்நாட்டில் எரிவாயுவை ஆதாரமாகக் கொண்ட மின் உற்பத்தி நிலையம் எதுவும் குறிப்பிடத்தக்க நிலையில் இல்லை. அடுத்த ஐந்தாண்டுகளில் காவிரி வடிநிலப் பகுதியிலிருந்து கிடைக்கக்கூடிய எரிவாயுவின் அளவு நாளொன்றுக்கு 1.5 மில்லியன் கன மீட்டராக அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தென்னக எரிவாயு மையம் உருப்பெற்றால் இவ்வாறு கிடைக்கின்ற எரிவாயுவின் அளவு மேலும் அதிகரிக்கக்கூடும். ஆனால் மொத்த மின் சக்தி தேவை - நிருவாகத்தில் எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவில் இருக்காது.

மின் உற்பத்திக்கான மூலதனச் செலவும், எரிபொருள் செலவும் மிகவும் அதிகரித்து வருகின்றன. 1979-80-ஆம் ஆண்டில் எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு வரப்பெற்ற நிலக்கரியின் விலை டன் ஒன்றுக்கு 163 ரூபாயாக இருந்தது. அது தற்போது டன் ஒன்றுக்கு சுமார் 850 ரூபாயாக அதிகரித்துள்ளது. (10 ஆண்டுகளில் 500 சதவீதம் அதிகரித்துள்ளது). தூத்துக்குடிக்கு வரும் நிலக்கரியின் விலை டன் ஒன்றுக்கு ரூ.900-ம், மேட்டூருக்கு வரும் நிலக்கரியின் விலை டன் ஒன்றுக்கு ரூ.910/-ம் ஆகின்றன. நிலக்கரியின் சுரங்க வாயில் விலை டன் ஒன்றுக்கு 250 ரூபாயாக மட்டுமே இருக்க, நிலக்கரியை ஏற்றி இறக்குதல் மற்றும் எடுத்து வருதல் ஆகியவற்றுக்காக டன் ஒன்றுக்குக் கூடுதலாக 650 ரூபாய் செலவாகிறது. எனவே, தமிழ்நாடு மின்வாரியத்தின் தற்போதைய எரிபொருள் செலவு மட்டுமே கி.வா./ம ஒன்றுக்கு ரூ.67.87 ஆகிறது.

அனல் மின்நிலையங்களில் இன்றைய நிலவரப்படி மூலதனச் செலவு மெ.வா. ஒன்றுக்கு சுமார் 1.25 கோடி ரூபாயாகும். மின் அனுப்புகை மற்றும் விநியோகம் ஆகியவற்றுக்காகக் கூடுதலாகச் சுமார் 75 இலட்சம் ரூபாய் முதலீடு செய்யப்படுகிறது. எனவே, கூடுதலாக ஒரு மெ.வா. மின்சக்தி உற்பத்தி செய்ய ஏறக்குறைய 2 கோடி ரூபாய் முதலீடு தேவைப்படுகிறது. ஆண்டொன்றில் குறைந்தது 6,000 மணி நேரம் கூட இந்த அனல் மின்நிலையத்தை இயக்க முடியவில்லையானால், இந்த அனல் மின் நிலையத்தால் எந்தவிதமான பயனும் இராது.

ஆண்டொன்றுக்கு 6,000 மணி நேரமாவது மின் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதை ஒருசில அனல் மின் நிலையங்களே எய்திட முடிகிறது. பிற அனல் மின் நிலையங்கள் இவ்வாறு இயங்க இயலாமல் போனதற்குக் காரணம் யாதெனில், ஆண்டுக்கொருமுறை இந்த அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டதும், திடீரென மின் உற்பத்தி நிறுத்தப்பட்டதும் இதற்கு ஓரளவு காரணமாகும். இத்துடன் நாள்தோறும் பருவகாலங்கள்தோறும் தேவைப்படும் மின் தேவையின் அளவில் ஏற்பட்ட வேறுபாடுகளை சரிகட்டும் பொருட்டு மின் உற்பத்தி அளவைக் குறைத்துக்கொண்டதும் இதற்கு முக்கிய காரணமாகும். எனவே அதிகரிக்கும் மின்சக்தி தேவை அளவை நிறைவு செய்திடும் பொருட்டு பெரிய அனல் மின் நிலையங்களை அடிப்படை மின் வழங்கல் நிலையங்களாக இயங்கச் செய்வதிலும், எரிவாயு சுழல்தட்டு மின் உற்பத்தி நிலையங்களையும் புனல் மின் நிலையங்களையும் தேவையளவில் ஏற்படும் வேறுபாடுகளைச் சரிகட்டுவதற்கு பயன்படுத்திக் கொள்வதிலும், மின்சக்தி நிருவாகம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

மின்வெட்டு இல்லாமல் தமிழ்நாடு மின்மையத்தின் உயரளவு மின் தேவை தோராயமாக 3,954 மெ.வா. ஆகும். (மின்வெட்டின் காரணமாக குறைவுபட்ட நிலையில் தமிழ்நாட்டின் உயரளவு மின் தேவை 2,939 மெ.வா. ஆகும்). தமிழ்நாட்டின் நிறுவ நிலை மின் உற்பத்தி திறன் 5,473 மெ.வா. ஆகும். இதில் 1,957 மெ.வா. புனல் மின் நிலைய உற்பத்தியாகும். மின்சாரம் அதிகம் தேவைப்படுகிற நேரங்களில் தமிழ்நாடு மின்வாரியம் உயரளவு 3,320 மெ.வா. மட்டுமே வழங்க இயலுகிறது. மழைக்காலத்தில் மின் உற்பத்தியில் ஏற்றத்தாழ்வு பெரிய அளவில் ஏற்பட்டாலோ, அனல் மின் உற்பத்தி நிலையங்களில் திடீரென மின் உற்பத்தி நிறுத்தப்பட்டாலோ மின் நிருவாகத்தில் இடர்ப்பாடு ஏற்படுகிறது. அதன் காரண

மாக மின் வெட்டைக் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே, அன்றாடம் தேவைப்படும் மின்சாரத்தின் அளவில் காணப்படும் வேறுபாடுகள், வாராந்திர விடுமுறை நாட்களில் தேவைப்படும் மின்சாரத்தின் அளவில் காணப்படும் வேறுபாடுகள், பருவகாலங்களில் மின்சாரத் தேவையில் ஏற்படும் வேறுபாடுகள் ஆகியவற்றைச் சரிகட்டவும், மின் உற்பத்தி நிலையங்களில் திடீரென மின் உற்பத்தியை நிறுத்துவதினாலும், புனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தியில் ஏற்படும் ஏற்ற இறக்கத்தினாலும் உண்டாகும் மின் உற்பத்திக்குறைவைச் சரிகட்டவும் மின் தேவை நிருவாகம் தொடர்பாக விரிவாக திட்டங்களை நாம் வகுத்துக்கொள்வது முக்கியமானதாகும்.

மின் தேவை அளவுப்பாங்கு பற்றிய விரிவான பகுப்பாய்வு, மின்சாரத்தைப் பயன்படுத்தும் பல்வேறு வகைப் பயனீட்டாளர்களின் நோக்கில் மின்தேவை அளவுப்பாங்கின் சிறப்பியல்புகள் ஆகியவை முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். உயரழுத்த, குறைவழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் அனைத்துத் தொழில்களுக்கும் மின்வெட்டுக் கொண்டு வருவது மற்றும்/அல்லது கிராமப்புறங்களில் ஒரு குறிப்பிட்ட மணி நேரம் மின் வழங்கலை நிறுத்துவது ஆகியவை வழக்கமாக மின்வாரியங்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளாகும். நகரங்களில் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு மணி நேரங்களில் மின்வாரியம் மின் வெட்டைக் கொண்டு வருகிறது. இவை உகந்த நடவடிக்கைகள் அல்ல. இவற்றால், குறிப்பாக தொழிற்சாலைகளில் உற்பத்தி இழப்பும், ஊதிய இழப்பும் ஏற்படுகிறது.

வேளாண்மைக்கான மின்தேவை தனித்தன்மை வாய்ந்ததாகும். நல்ல மழை பெய்தால் வேளாண்மைக்கான மின்தேவை பெரிதும் குறையும். மழைக்காலத்தில், மழை பெய்வது ஒரு வாரம் அல்லது அதற்கு அதிகமாகத் தாமதப்படுமானால், விவசாயிகள் தங்களுடைய பயிர்களைக் காப்பாற்ற வேண்டும், என்கிற அக்கறையில் தடையின்றி மின்சாரம் வழங்குமாறு வேண்டுவார்கள். ஒரு நாளில் ஒரு சில மணி நேரமே கிராமப் புறங்களில் மின் சக்தி வழங்குவது என்று கட்டுப்படுத்தும்போது, கிராமப்புற மின் வழங்கு ஏற்பாட்டின் கீழ் வருகின்ற ஏனைய மின் பயனீட்டாளர்களுக்கு, அதாவது தொடக்கச் சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகள், குடிநீர் வழங்கு பணிகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றிற்கு மிகுந்த இடர்ப்பாட்டை ஏற்படுத்துகிறது. இவற்றுக்கு ஒரு முறை மாற்றுப் பணிநேரத்திற்குக் கூட தொடர்ந்து மின்சாரம் பெற இயலாத நிலை ஏற்பட்டு விடுகிறது.

எனவே, ஒவ்வொரு வகைப் பயனீட்டாளர்கள் தொடர்பாகவும், மின்தேவை பற்றிய விரிவான பகுப்பாய்வை மேற்கொள்வது, மின்தேவை நிருவாகத்தில் முதல் கட்ட நடவடிக்கையாகும். தொழிற்துறை போன்ற ஒரு குறிப்பிட்ட துறைக்குள்ளேயே கூட மின்தேவை என்பது ஒரே சீராக இருப்பதில்லை. ஒவ்வொரு வகைத் தொழிலுக்கும் மின் தேவையின் அளவுப்பாங்கு வேறுவிதமாக அமைந்துள்ளது. குறிப்பாக, உயரழுத்த மின்சாரப் பயனீட்டாளர்களுக்குத் தேவைப்படும் மின்சாரத்தின் அளவு வேறுவிதமாக உள்ளது. எடுத்துக்காட்டாக, சிமிட்டி தயாரிப்புத் தொழிற்சாலையில் உலைக்கு 24 மணி நேரமும் தொடர்ந்து மின்சாரம் தேவைப்படுகிறது. ஆனால், அத்தொழிற்சாலையின் மொத்த மின்சக்தி தேவையில் கணிசமான பகுதியைப் பயன்படுத்துகிற சிமிட்டி அரைவை ஏற்றுகைப் பணி ஆகியவை தொடர்ந்து நடைபெறும் பணிகளல்ல. வழக்கமாக இப்பணிக்கு 12 மணி நேரம் மட்டுமே மின்சாரம் தேவைப்படுகிறது. விரிவான பேச்சு வார்த்தை நடத்தி இதுகுறித்து ஒரு முடிவுக்கு வந்த பின்னர் இத்தொழிற்சாலையில் மேற்குறிப்பிட்ட தொடர்ந்து நடைபெறாவகைப் பணிகளுக்குத் தேவைப்படும் மின்சாரத்தை, மின்சாரத்தின் உயரளவுத்தேவை குறைவாக உள்ள இரவு நேரத்தில் வழங்கலாம்.

எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள், இரசாயன உரத் தொழிற்சாலைகள், பெட்ரோலிய இரசாயனப் பொருட்கள் தயாரிப்பு ஆலைகள் ஆகியவற்றிற்குத் தங்குதடை ஏதுமின்றி தொடர்ந்து மின்சக்தி வழங்குவது அவசியமாகும். உரிய திட்டமிடலின்றி மின் வழங்கல் நிறுத்தப்பட்டால், அதனால் தொழிலக உற்பத்திச் செயல் முறையில் உள்ள மூலப் பொருள்கள் முழுவதையும் இழக்க நேரிடலாம். மேலும், செயல் முறையில் பயன்படுத்தப்படும் கிரியா ஊக்கிகளுக்குக் (Catalysts) கடும் சேதம் விளையும். இத்தகைய தருணங்களிலும்கூட இன்றியமையாத முதன்மை உற்பத்திப் பணிகளைப் பாதிக்காமலேயே, மின் சக்தி அதிகம் பயன்படுத்தப்படும் உயரளவுத் தேவை நேரங்களில் ஏற்படும் பிரச்சினையைத் தவிர்க்கும் வகையில் பயன்படுத்தும் மொத்த மின்சுமையில் 20 சதவீதம் வரையில் திறமையாகக் கையாளுவதன் வழி சமாளிக்கலாம்.

சில சமயங்களில் இத்தகைய ஆலைகள் ஆண்டுப் பராமரிப்புக்காக மூடப்படும் காலமும், மின் உற்பத்தி நிலைமை சாதகமாக இருக்கும் காலமும் ஒன்றாக அமைந்து விடுகிறது. அல்லது இதற்கு மாறாக, மின் உற்பத்தி குறைவாக இருக்கும்

**உண்மையான வளர்ச்சி**

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய புலன்களை நல்லமுறையில் தொழிற்படச் செய்வதே அறிவுக்கு உண்மையான வளர்ச்சி என்பது என் கருத்து. அறிவும், உடலும் ஒன்றாக வளர்ச்சியடையும்போது, இதயத் தத்துவமும் விழிப்படைய வேண்டுவது அவசியமாகும். அவ்விதமின்றி, உள்ளமும் உடலும் வளர்ச்சி பெற்று, உணர்ச்சித் தத்துவம் விழிப்பு அடையாவிட்டால், அது கிரமமான வளர்ச்சியாகாது; வெறுங்கோணலாகவே போய்விடும்.

-அண்ணல் காந்தியடிகள்

சமயத்தில் இந்த ஆலைகள் அங்காடித் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு உற்பத்தியை அதிகரிக்க விரும்புகின்றன. மின்சக்தித் தேவை-வழங்கல் குறித்த குறுகிய கால ஏற்ற இறக்கங்கள் இடம் பெறும் அவசர காலத் திட்டங்களுடன் மின்தேவை வழங்கல் குறித்து ஆண்டு அடிப்படையில் அமைந்த விரிவான செயல் திட்டம் ஒன்று, இத்தொழிற்சாலைகளுக்காக உருவாக்கப்படலாம்; இது, மின்சக்தித் தேவை மின் உற்பத்தி ஆகியவற்றில் விரிவான அளவில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளைக் குறிப்பிடத்தக்க அளவிற்குக் குறைக்கும்.

அத்தகைய உதாரணங்கள் பலவற்றைக் குறிப்பிட இயலும். எடுத்துக்காட்டாக, மின்பொறி உலைகள் (Arc furnaces). மின்வாரியம் மின்வெட்டைக் கொண்டுவரும் நேரங்களில் அதனை எதிர்கொள்ளும் வகையில் தங்களது உயரளவு மின் தேவையை உடனடியாகக் குறைத்துக் கொள்ள இயலாது.

மின்பொறி உலைகளைப் பயன்படுத்துவோருடன் (முக்கியமாக எஃகு தொழிற்துறையினருடன்) பேச்சு வார்த்தை நடத்துவது பயனுள்ளதாக இருக்கும். பயன்படுத்துவோரின் ஒரு தொகுதியினர், இரண்டு வாரங்களுக்கு அல்லது மூன்று வாரங்களுக்கு ஒருமுறை 3-4- நாட்களுக்காகிலும், சுழற்சி முறையில் பணியை நிறுத்தி வைப்பது (தொழிலகத்தை மூடி வைப்பது) பயனீட்டாளர்களின் மின் தேவை அளவைக் குறைக்கும். அதுமட்டுமின்றி டீசல் மின் உற்பத்தியைப் பயன்படுத்துவதை அல்லது உலையின் உள்வரிப் பூச்சுக்கள் சேதமுறும் ஆபத்துக்குட்படுவதைக் குறைக்கும்; தமிழ்நாட்டில் உயரமுத்த மின் தேவை பற்றிய பகுப்பாய்வு, மின்பொறி உலைத் தொழில், உயரமுத்த மின்சக்தியை அதிக அளவில் பயன்படுத்துகிறது என்பதைக் காட்டுகிறது.

மின்பொறி உலையானது, மின் விசை அனுப்புகை ஏற்பாட்டில் கடுமையான சுமையை ஏற்றி விடுகிறது. இத்தகைய கடும் சுமையால் ஏற்படும் பாதிப்புகள் இயன்ற அளவிற்குக் குறைக்கப்பட வேண்டுமானால், மின்பொறி உலைகள் அமைந்துள்ள இடங்களைச் சேர்ந்த மின் கம்பி வழிகளில் ஏற்படும் பாதிப்பு அளவைக் கருத்திற்கொண்டு, அவற்றின் (மின்பொறி உலைகள்) அமைவிடத்தைக் குறித்துப் பரிசீலனை செய்வது மிக முக்கியமானதாகும்.

அடுத்து, பெருமளவில் மின்சாரத்தைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளில். காஸ்டிக் சோடா - குளோரின் தயாரிப்புத் தொழிற்சாலைகள் குறிப்பிடத்தக்கனவாகும். உண்மையில், உலகம் முழுவதிலும் பாதரச மின்கலத்தைப் பயன்படுத்தும் முறை குறைந்து வருகிறது. இதற்குப் பதிலாக, மென்தோல் உறை மின்கலங்களைப் (Membarance cell) பயன்படுத்தும் முறை பெருகி வருகிறது. மென்தோல் உறை மின்கலத்தில் பயன்படுத்தும் காஸ்டிக் சோடாவுக்கு டன் ஒன்றுக்குப் பயன்படுத்தப்படும் மின்சக்தியின் அளவு, பாதரச மின்கலத்தில் பயன்படுத்தப்படும் காஸ்டிக் சோடாவிற்கு டன் ஒன்றிற்குப் பயன்படுத்தப்படும் மின்சக்தியை விட கணிசமான அளவு குறைவாகும். தமிழ்நாடு மின்வாரியமும், தமிழக அரசும் இங்குள்ள ஆலைகள் பாதரச மின்கலத்திற்குப் பயன்படுத்தும் காஸ்டிக் சோடா கொள்ளளவை இனிமேல் உயர்த்துவதற்கு அனுமதிப்பதில்லை என்ற கொள்கையைப் பின்பற்ற வேண்டும். அன்றியும், இன்னும் நான்கிலிருந்து ஐந்தாண்டுக் காலத்திற்குள், தற்போதுள்ள மின்கலத் தொழில் பிரிவுகள் மென்தோல் உறை மின்கலத் தயாரிப்பிற்கு மாறுவதற்குத் தூண்டுகோலாக இருக்கும் வகையில், சலுகையும் கண்டிப்பும் காட்டுகின்ற கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

மின்சக்தியை முனைப்பாக பயன்படுத்தும் அலுமினிய உறைகள் (Aluminium Shelters), கால்சியம் கார்பைட், கிராபைட் ஆகியன போன்றவற்றைத் தயாரிக்கும் தொழில்களுக்கு மின்சக்தி விற்பனை செய்வதைக் கட்டுப்படுத்துவது விரும்பத்தக்கதாகும். மின்சக்தியை முனைப்பாக பயன்படுத்தும் தொழில் என்பது, பெருமளவில் மின்சாரத்தைப் பயன்படுத்தும் தொழில் அன்று. ஆனால், அது மின்சக்தியையே மிக முக்கிய மூலப்பொருளாகக் கொண்டுள்ள தொழில் பிரிவாகும். பொதுவாக, 2500 KVA-ம் அதற்கும் மேற்பட்டும் மின்சுமை பெறும் மின்இரசாயனம், மின் வெப்ப ஆற்றல், மின்உலோகத் தொழில், மின்னாற்பகுப்பு ஆகிய செயல்முறைகள் நடைபெறும் தொழில்கள் இந்த வகையின் கீழ் வருகின்றன. இத்தகைய தொழில் பிரிவுகளுக்கு மின்சாரம் வழங்கப்படுவதையும் விற்கப்படுவதையும் முறைப் படுத்த சட்டப்படிக்கான வரையறைகளை விதிக்க இயலும். மின்பொறி உலை மூலம் உற்பத்தி செய்யப்படும் மென்னிரும்பு அல்லது கார்பன் உருக்கு ஆகியவற்றைவிட, கலப்பின உருக்கை மட்டும் உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பது பயனுடையதாக இருக்கும்.

மொத்த மின் பயனீட்டாளர்களின் எண்ணிக்கையில் உயரமுத்த மின் பயனீட்டாளர்களின் எண்ணிக்கை குறைவானதாகும். அவர்களின் மின்தேவை அளவுப்பாங்கு குறித்து விரிவான பகுப்பாய்வு செய்ய இயலும். அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியபின் அவர்கள் குறித்த ஆண்டு திட்டங்களை வகுத்துக் கொள்ள இயலும். எதிர்பாரா மாற்றங்களைச் சமாளிப்பதற்கேற்ப, இத்திட்டத்தில் தக்க மாறுதல்களைச் செய்துகொள்ள வகை செய்யலாம். மாற்றியமைத்தற்குரிய குறைவழுத்த மின்சக்தித் தொழில்பிரிவுகள் எங்கு தொடங்கப்பட்டிருந்தாலும், காலையில் சுமார் 7.30 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரையில் சாதாரண

### உழைப்பு

உழைப்பதற்கு யாருமே தயங்கலாகாது. தனது சொந்த சமாசாரங்களில் மட்டும் மிக்க சிரத்தை காட்ட வேண்டுமென்றும் மக்கள் தொண்டை எப்போது வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் செய்யலாமென்றும் நினைப்பவன், 'தியாகம்' என்ற படிப்பில் முதற் பாடத்தைக் கூட அறியாதவனென்ற அர்த்தம்.

-அண்ணல் காந்தியடிகள்

மாக ஒரு நேரம் மட்டும் (One Shift) இயங்கி வருகின்றன. உணவு இடை வேளை மதியம் 12.00 மணிக்கும், பிற்பகல் 1.00 மணிக்கும் இடை பட்ட நேரமாகும். நாள் முழுவதும் உயரழுத்த மின்சக்தி தொடர்ந்து தேவைப்படாத மின்பயனீட்டாளர் களுக்கும் மேற்குறிப்பிட்டதைப் போன்றே மின்தேவை உள்ளது. இது குறித்து பொறியியல் தொழில் கூட்டமைப்புடனும், ஏனைய வணிக-தொழில் கழகங்களுடனும் கலந்தா லோசித்து மின் தேவையில் நெருக் கடி ஏற்படும் இத்தகைய தொழிற் சாலைகளின் பணி நேரங்களை மாற்றி அமைத்துக் கொள்ளவும் உற் றுழி திட்டங்களை வகுத்துக் கொள் ளவும் முடியும், உதாரணமாக ஒரு நேரப்பணியாக மட்டும் இயங்கும், தொழில் பிரிவுகள், காலையில் 6.30 மணி அல்லது 7.00 மணிக்கு முன்னதாக பணியைத் தொடங்கி பிற்பகல் 2.30 மணிக்கு அல்லது 3.00 மணிக்கு முடித்துக்கொள்ள லாம். ஏனைய குறைவழுத்த மின் சக்தியைப் பயன்படுத்துகிற தொழில் பிரிவைச் சேர்ந்த மின்பயனீட் டாளர்களும், நாள் முழுவதும் உயர முத்த மின்சக்தி தொடர்ந்து தேவைப் படாத மின் பயனீட்டாளர்களும் பிற்பகல் 2.30 மணிக்கு பணியைத் தொடங்கி இரவு 10.30 மணிக்கு முடித்துக்கொள்ளலாம். இத்தகைய நடைமுறையில் மொத்த மின்தேவை யில் சுமார் 50 சதவீத மின்தேவையை இரு கூறுகளாக நிறைவு செய்ய இயலும். பெரிய சிறிய வகைகளைச் சேர்ந்த அனைத்து பொறியியல் தொழில்களும் பெருமளவில் அவற் றின் பணி நேரத்தை மாற்றிக் கொள்ளக் கூடியவையாக இருக் கின்றன. இதனை எளிது படுத்தும் வகையில், ஒரு நேரத் தொழிற் பிரிவின் பணி நேரத்தை 7 மணி நேரமாகக் குறைக்க இயலும் என்று தெரியவந்துள்ளது. வாரத்திற்கு 5½ நாட்கள் வேலை செய்வதற்குப் பதி லாக, 6 நாட்கள் வேலை செய்வதன் மூலம், நடைமுறையில் வாரத்தின் மொத்த வேலை நேரம் மாறுவ தில்லை.

> ## ஒரே நெருப்பின் சுடர்கள்
>
> உலகத்தில் 'தீண்டத்தகாதவர்' என்று எவருமே இல்லை. ஏனெனில், ஒரே நெருப்பின் சுடர்கள் தான் ஒவ்வொருவரும். ஆகவே, மனிதப் பிறவி எடுத்தோர் எவரையும் தீண்டாதவர் என்று ஒதுக்கி வைப்பது தவறு. -அண்ணல் காந்தியடிகள்

மின் வெட்டிற்கு ஆட்படுகின்ற தொழிற்சாலைகளுக்கும் அல்லது எட்டு மணி நேர முறைமாற்றுப் பணியில் மின்தடைகளை எதிர் கொள்ளும் தொழிற்சாலைகளுக்கும் அல்லது இரண்டிற்கும் ஆட்படும் தொழிற்சாலைகளுக்கும் இது ஒரு சிறந்த ஏற்பாடாகும். இத்தகைய ஏற்பாட்டிற்கு தொழிலாளர் சங்கங் களுடன் உடன்பாடு செய்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

இம்முறையானது விடுமுறை நாட்களை மாற்றியமைப்பதற்கு வழி வகுக்கிறது. இவ்வாறு செய்வது தொழிலாளர்களுக்கு வசதியாக அமையும். அதாவது, வாரத்திற்கு ஒரு நாள், ஞாயிற்றுக்கிழமை விடு முறை நாளாகும்.

தொழில் சங்கங்கள், தொழிற் சாலையின் ஒத்துழைப்புடன் விடு முறை நாட்களை மாற்றுவது சாத்திய மானதும் விரும்பத்தக்கதும் ஆகும். இதனால் தொழிற்சாலைகளின் மின்தேவை 1/6 பங்கு குறையும். பகல் வேலை நேரத்தையும் மாலை ஓய்வு நேரத்தையும் மாற்றியமைப் பதனால், மின் நெருக்கடி மிகுந்த நேரத்தில் தேவைப்படும் மின்சாரம் குறைந்தபட்சம் இருபது சதவீதம் குறையும். பண்டிகை நாட்களிலும் இயந்திரத்தைச் செயல்படுத்த முடியும். மாநகரங்களிலுள்ள பெரிய கடைத் தெருக்களுக்கு வாரவிடுமுறை நாட் களையும் மாற்றலாம். ஆனால் இவையனைத்தையும் திட்டமிட்டு செயல்படுத்த இவை குறித்து தொழி லதிபர்களுடனும், தொழிலாளர் களுடனும், மின்சார வாரியத்துடனும் கலந்து ஆலோசிப்பதும் அது அனை வராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதும் அவசியமானதாகும்.

தொழிற்சாலைகளின் மின் னோட்ட அளவை இரவு நேரங் களுக்கு மாற்றுவதற்கு சலுகை அளிப்பதற்கு இது வழிவகுக்கிறது. இரவு நேரங்களில் உற்பத்தித்திறன் குறைவாகவும், மேற்பார்வையிடு வதில் கவனக் குறைவும் இருக்கும் என்று வழக்கமாக எதிர்கருத்து எழுதுவதுண்டு. பொதுவான நட வடிக்கையாக இதனைப் பின்பற்றா மல் இருந்தால் கூட மின்பற்றாக் குறைக் காலங்களில் பல தொழிற் பிரிவுத் தொகுதிகள் சுழற்சி அடிப்படையில் இரவு நேரத்தில் இயங்குமாறு மாற்றிக் கொள்ளத் தூண்டப்படலாம். தொழிற்சாலைகள் பகல் நேரத்தில் செயற்படும்போது, மின் வெட்டுக்கு ஆட்படுவதைக் காட்டிலும், இரவு நேரங்களில் செயல்படுவதை ஒப்புக் கொள்ளும். மின் வெட்டு காரணமாக கூடுதல் விடுமுறை நாட்கள் அளிக்கப்படு வதால் ஏற்படும் இழப்பை, இரவு நேர முறைமாற்றப் பணியை மேற் கொள்ளுவதன் மூலம் ஈடுசெய்ய லாம். தமிழ்நாட்டிலுள்ள முக்கிய தொழிலான துணித் தொழில் இச் செயல்திட்ட நடவடிக்கையைப் பின் பற்ற முடியும்.

வேளாண்மை விளைபொரு ளைப் பதப்படுத்தும் தொழிற் சாலைகள், மற்றொரு வகையான கட்டுப்பாட்டைச் சுமத்துகின்றன ஆண்டில் சுமார் 180 நாட்களி லிருந்து 210 நாட்கள் வரையிலான வேளாண்மை விளைபொருள் காலத்தில் அவ்விளைபொருளைப் பதப்படுத்த வேண்டியுள்ளது; எஞ் சிய காலத்தில் இத்தேவை இருப்ப தில்லை; இந்த குறிப்பிட்ட விளை பொருள் காலத்திற்குத் தேவையான மின்சாரத்தைப் பெற மின்சார வாரியம் கூடுதல் மின் உற்பத்தித் திறனைக் கொண்டிருக்க வேண்டும். அவற்றில் சில தொழிற் பிரிவுகள் தாங்களே மின் சக்தி உற்பத்தியைச் செய்து கொள்ளலாம். மின் இணைப் பில் மின் சுமையைக் குறைப்பதற்கு, தாங்களே மின் உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பது விரும்பத்தக்கதாகும். சர்க்கரை ஆலைத்தொழில் இவ் வகையில் ஊக்கப்படுத்துவதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

வேளாண்மைத் துறையில் ஒவ் வொரு பயிருக்கும் நாள்தோறும் பாசனம் தேவைப்படுவதில்லை; பெரும்பாலான பயிர்களுக்குப் பொதுவாக வாரத்தில் இரண்டி

லிருந்து மூன்று முறை தண்ணீர் பாய்ச்சுவதே அதிகமானதாகும். வெவ்வேறு பகுதிகளை/கிராமங்களை ஒன்றாகத் தொகுத்து மாற்றி மாற்றி மின்சாரம் வழங்க இது வாய்ப்பளிக்கிறது. இவ்வாறு திட்டமிடுவதில், ஒரு பயிரின் வளர்ச்சி நிலையில் சில இன்றியமையாத காலங்களிலும் இக்கட்டான கட்டங்களிலும் அதிகமான தண்ணீர் பாய்ச்ச வேண்டியிருக்கும் என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும். எனவே வேளாண்மைத் துறையுடன் கலந்து ஆலோசித்து, ஒவ்வொரு கிராமப் பகுதியிலுள்ள கிளை மின் இணைப்பிலிருந்து வேளாண்மைத் தேவையின் அளவுப்பாங்கை கணக்கிட்டு பருவகால வேறுபாடுகளுக்கான திட்டத்தை வகுத்து, அவற்றை வார அடிப்படையில் மாற்றியமைத்து முன்னதாகவே தெரிவிக்க முடியும்.

நாம் கருத்திற்கொள்ளவேண்டிய மற்றொரு முக்கியமான அம்சம், மின் இணைப்பு பயனீட்டாளரின் ஏற்படும் ஏற்ற இறக்கத்தை சரி செய்வதாகும்: (power factor correction) குறிப்பாக நாள் முழுவதும் தொடர்ந்து உயரழுத்த மின்சக்தி தேவைப்படாத தொழிற்சாலைகளில் மின் இணைப்பு பயனீட்டு அளவில் ஏற்படும் ஏற்ற இறக்கத்தைச்சரிசெய்வதாகும். அது, மின்சார வாரியத்தின் பணி மட்டுமல்லாது, ஒவ்வொரு தனிப்பட்ட பயனீட்டாளர்களின் கடமையுமாகும். இந்த வகையில் மின் இணைப்பு பயனீட்டு அளவில் ஏற்றத் தாழ்வுகளை அதிகம் ஏற்படுத்துபவர்கள் தொழில் துறை, மற்றும் வேளாண்மைத் துறைப் பயனீட்டாளர்களாவார்கள். தனிப்பட்ட மின் பயனீட்டாளரால் பின்பற்றக்கூடிய மின் இணைப்பு பயனீட்டளவு குறைவரம்பு 0.8 ஆகும் என்று சட்ட விதித்துறை விதிக்கிறது. நடைமுறையில் இது ஒருபோதும் பின்பற்றப்படுவதில்லை. இரண்டாவதாக, மின்னியல் உறைகலன்களை (capositors) வாங்கி பயன்படுத்துவதன் மூலம் தனிப்பட்ட மின் பயனீட்டாளர் வழி ஏற்படும். ஏற்றதாழ்வுகளைச் சரிசெய்யும் தூண்டுகோல் எதுவுமில்லை.

விரிவான ஆய்விற்குப் பின்னர், மின் இணைப்பு பயனீட்டளவை 0.9 என்ற குறைந்த அளவு மின் பயனீட்டு அளவைக்குக் குறிப்பிட்ட மின் கட்டணமும் 0.9-க்கும் குறைவான அளவில் பயன்படுத்தும் போது கூடுதல் கட்டணமும் (சர்சார்ஜ்) விதிக்கப்படும் என்ற நிபந்தனையை விதிப்பதும் சாத்தியமாகவே இருக்கும், 0.8 என்ற சட்டப்படிக்கான குறைந்த அளவு மின் அளவை முறைக்கு இது எந்த வகையிலும் முரண்பட்டதாக இராது.

இந்நாட்டிலுள்ள வேளாண் விசைப் பம்புகளின் திறன் மிகவும் குறைவானதே என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். மோட்டார்களின் விலையும் அதிகமாகும். பரித்திறன் அடிப்படையில் மின் கட்டண வீதத்தை அறிமுகப்படுத்தியிருந்தும் உழவர்கள் தங்களுடைய மோட்டார்கள், விசைப் பம்புகள் ஆகியவற்றின் திறனைப் பெருக்குவதில் அக்கறை கொள்ளவில்லை. இந்த மேம்பாடுகளைச் செய்பவர்களுக்கு மேலும் ஊக்கமளிக்கக்கூடிய மின் கட்டண வீதத்தை உருவாக்கிட வேண்டியுள்ளது. இந்த மேம்பாடுகளைச் செய்ய விரும்பும் உழவர்களுக்குத்தொழில் நுட்ப ஆலோசனை தேவைப்படுகிறது. இந்நோக்கத்திற்காக மின் கட்டண வீதத்தில் சில சலுகைகளுடன், இதுபோன்ற தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவதற்கு மின் வாரியம் பணிக்குழு ஒன்றை அமைக்கலாம்.

> **பெண்கள்**
>
> அகிம்சைத் துறையில் துணிந்து ஈடுபடவும், ஆராய்ச்சிகள் செய்யவும், ஆண்களைக் காட்டிலும் பெண்களே மிகவும் தகுதியுடையவர்கள். முரட்டுத்தனமான காரியங்களைச் செய்வதில் ஆண்களுக்கு அதிகத் துணிவு உண்டு என்று நான் நம்புகிறேன். அதைப் போலவே 'தியாகம்' செய்வதற்கான துணிவு பெண்களிடம் எப்போதும் ஆடவர்களைக் காட்டிலும் அதிகமுண்டு.
>
> -அண்ணல் காந்தியடிகள்

குறிப்பாக, வேளாண்மைக்கு எங்கு மின் தேவை அதிகமாக இருக்கிறதோ, அங்கு ஒவ்வொரு கிளை மின் இணைப்பு வாரியாக விரிவாக ஆய்வு செய்ய வேண்டியதும் அவசியமாகும்; இத்தகைய ஏற்பாட்டினால், வழக்கமாக வாரத்தில், குறைந்தது மூன்று நாட்களாவது பகல் நேரத்தில் தொடர்ந்து எட்டு மணி நேரம் மின்சாரம் வழங்க முடியும்.

இந்தக் கட்டுரையில், இதுவரை மின் தேவை நிருவாகத்திற்குரிய விரிவான திட்டமொன்றை வகுப்பதற்கான சில அணுகுமுறைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தைத் தயாரிக்க பல மாதங்கள் ஆகலாம்; அவ்வாறு தயாரிக்கப்பட்ட திட்டத்தில், உண்மையான அனுபவத்தின் அடிப்படையில் மாற்றம் செய்ய வேண்டிய தேவை ஏற்படலாம். இத்திட்டத்தை ஆண்டுக்காண்டு மாற்றியமைத்து மேம்படுத்தலாம்.

*1974*-ஆம் ஆண்டிலிருந்து பெட்ரோலிய எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டதையடுத்து மேற்கத்திய நாடுகள் உற்பத்தி செய்யும் ஒவ்வொரு யூனிட் மின்சக்தியின் பயன்பாட்டுத்திறனையும் தொடர்ந்து மேம்படுத்தி வருகின்றன. பெரும்பாலான தயாரிப்பு நிறுவனங்களில் மின் சக்தி தணிக்கை மிக முக்கிய துறையாக இருந்து வருகிறது. ஏனோ, இந்த முறை இந்தியாவில் இன்னும் பரவவில்லை. இந்நாட்டில் தொடர்ந்து உயரழுத்த மின் சக்தி தேவைப்படும் பெருந்தொழிற்சாலைகளை ஐரோப்பா, அமெரிக்கா அல்லது ஜப்பான் ஆகிய நாடுகளில் உள்ள இத்தகைய தொழிற்சாலைகளுடன் ஒப்பிடும்போது அவை அதிக அளவில் மின் சக்தியைப்பயன்படுத்துகின்றன. இதற்கு இந்த நாட்டில் மின் சக்திக்குக் குறைவான கட்டணம் இருப்பது ஒரு காரணமாகும்; விற்போர் கை ஓங்கிநிற்கும் அங்காடி நிலவரமும் போட்டிக்கு இடமில்லாததும் மற்ற காரணங்களாகும்.

அயல் நாடுகளின் விற்பனைப் போட்டியிலிருந்து பாதிக்கப்படா வண்ணம் இந்திய விற்பனைக் களத்திற்குப்பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. இவையாவும் மின் விசைப் பயனீட்டுப் பிரச்சினையைக் காட்டிலும் பெரிய பிரச்சினைகளாகும். மின் பயனீட்டாளர்களில் இத்தகைய தொழிற்துறை பயனீட்டாளர்களும்



# பொம்மை தந்த பாடம்

காந்தியடிகளின் மேசைமேல் மூன்று குரங்குப் பொம்மைகள் வைக்கப்பட்டிருந்தன. ஒருநாள் ஒருவர், இப்பொம்மைகள் ஏன் இங்கு வைக்கப்பட்டுள்ளன? என்று கேட்டார்.

'இவை மூன்றும் என் குரு' என்று பதிலளித்தார் காந்தியடிகள். பின் சொன்னார், ''எனக்குச் சரியாக நினைவில்லை. பல ஆண்டுகளுக்குமுன் சீன நண்பர் ஒருவர் இதை மகாதேவ் தேசாயிடம் கொடுத்திருந்தார். பின் இது அவரிடமிருந்து என்னிடம் வந்தது. மேலான, உயர்ந்த, நீதிகள் சீனப் பண்பாட்டில் இன்றும் அழியாது இருக்கின்றன. உயர்ந்த தத்துவத்தைக் கூறுகின்றன இந்தப் பொம்மைகள்.

'ஒரு பொழுதும் பொய் பேசாதே, எவரையும் பழிக்காதே என்ற நீதியைச் சொல்லும் வகையில் முதல் குரங்கு வாயை மூடிக் கொண்டுள்ளது.

இரண்டாவது குரங்கு தன் கண்ணைப் பொத்திக் கொண்டுள்ளது. இது கண்களால் 'தீயதைப் பாராதே' என்று அறிவுறுத்துகிறது''.

''நான் உலாவச் செல்கையில் பிறர் தோளில் கை வைத்துக் கொண்டு செல்கையில் கண்களை மூடிக் கொள்வதும் உண்டு. என்னைக் கவனமாக அழைத்துச் செல்கிறார்கள். இதனால் எனக்கு அமைதியும் ஆற்றலும் கிட்டுகிறது'' என்று காந்தியடிகள் கூறினார்.

''மூன்றாவது குரங்கு என்ன சொல்லுகிறது தெரியுமா?' என்று மறுபடியும் பேச்சைத் தொடர்ந்தார்.

'தீய செயலையும் தீய சொற்களையும் கேளாதே' என்கிறது அக் குரங்கு. எத்துணை உயர்ந்த கோட்பாடு இது! செவியைத் தீயவழிக்குத் திருப்புவது மனிதனின் அமைதியைக் குலைக்கிறது. மேலும், உள்ளத்தை மன்னிக்க இயலாத குற்றத்திற்கு இழுத்துச் செல்கிறது. நம் எல்லோருக்கும் இந்த அனுபவம் ஏற்பட்டிருக்கிறது.

காந்தியடிகள் அப்பொழுது உணவருந்திக் கொண்டிருந்தார். பின், கைகளைக் கழுவியபின் மீண்டும் தொடர்ந்தார்:

''நான் இவ்விளையாட்டுப் பொம்மையைக்கலையோடு கூடியது என்று கருதுகிறேன். இதன் புற வடிவம் மட்டும் அழகானதல்ல; மறைந்திருக்கும் தத்துவமும் மனித இனத்திற்குப் பயனளிக்கும் மனித சமூகத்தை முன்னேற்றாத கலையையும், மனிதனுக்கு நன்மை தராத கலையையும், கலையென்று சொல்ல முடியாது. கலை மனத்தைத் தூய்மைப்படுத்தி, ஆன்மாவையும் தூய்மையாக்குகிறது. நான் இந்தக் குரங்குகளை அறிவுப் பூர்வமாகவே குரு என்று கருதுகிறேன். அவைகளை நான் செல்லும் இடங்களுக்கெல்லாம் எடுத்துச் செல்லுகிறேன். அடிக்கடி இவை எனக்குப் பாடம் கற்பிக்கின்றன''.

**—ஆதாரம்:'காந்திஜி வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள்'.**

உள்ளனர். ஆனால் மின் வெட்டு விதிக்கையில், குறைந்த அளவில் மின் சக்திப் பயன்பாட்டுக் கோட்பாடுகளைப் பின்பற்றும் தொழிற்சாலைகளுக்கு சலுகை காட்டலாம். இந்நாளில், வாரியம் பின் பற்றும் மின் வெட்டு வரையறையின்படி சம்பந்தப்பட்ட தொழில் பிரிவிற்கு இனி ஒதுக்கப்படும் மின் உற்பத்தி அளவானது, அத்தொழிற்பிரிவு இதற்கு முன்னர் பயன்படுத்திய குறைவான பயனீட்டு அடிப்படையில் இருக்குமென்பதால், அவ்வாறு குறைந்த அளவு மின் பயனீட்டுக் கணக்குக் காட்டுவது ஒரு தொழிற்சாலை நலனுக்கு உகந்ததாக இராது. இதன் காரணமாக 1-MUA-க்கும் அதிகமாக உயரழுத்த மின் சக்தியை பெருமளவில் பயன்படுத்துவோர்களுக்கேனும் விரிவாகத் திட்டமிடுவது அவசியமாகிறது.

மின்வாரியம் மின்பற்றாக் குறையை சமாளிக்க வகுத்துக்கொள்ள விழையும் மின்தேவை நிருவாகம் பற்றிய திட்டங்களில் இவை சிலவாகும். மேற்கத்திய நாடுகளில் தொழில்துறை மின் பயனீட்டாளர்கள் ஏற்கத்தக்க வகையில் மின் கட்டண விகிதங்கள் நடைமுறையில் உள்ளன. இவை மின்தடைகள், மின் வெட்டுகள் ஆகியவற்றின் அளவு வேறுபாடுகளுக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்ளும் அட்டவணைகளை உடையன. தொழிற்பயன்பாட்டிற்கான உயர் மின்னழுத்தம், குறைந்த அளவு மின்னழுத்தம் ஆகியவற்றிற்கு ஒரே சீரான அளவில் மின் கட்டணம் விதிப்பதற்குப் பதிலாக, புதிய கட்டண முறையை வகுக்கும் போது இக்கட்டண முறைகளில் சில வற்றை ஆராய்ந்து பார்க்கலாம்.

**(இக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை இதை எழுதியவரின் சொந்தக் கருத்துக்களாகும். இவை திட்டக் குழுவின் கருத்துக்கள் அல்ல.)**

# தமிழ்நாடு மின்சார வாரியம்
## மேட்டூர் அனல்மின்திட்டம், மேட்டூர் அணை-1.

1.0) கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப் படுகின்றன.

| வரிசை எண் | வேலையின் பெயர் | ஒப்பந்த எண் | ஒப்பந்த பிரதியின் விலை. | வைப்புத்தொகை | ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதியும் நேரமும் | ஒப்பந்தத்தின் உத்தேச மதிப்புத் தொகை | ஒப்பந்த புள்ளிகள் பெறுவதற்கு கடைசி தேதியும் நேரமும். |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | மேட்டூர் அனல் மின் திட்ட கட்டுமானப் பிரிவின் மத்திய கிடங்கு வளாகத்தில் மேலும் புதியதாக இரண்டு கிடங்கு சாலை 32 × 12 m அளவுள்ளது கட்டுவது. | SEC.2/MTPP/2259/90-91 | தமிழ்நாட்டிற்குள் மட்டும் நூறு மட்டும். வெளிமாநிலங்களுக்கு வரி ரூ.10/- மொத்தம் ரூ.110/- | ரூபாய் எட்டாயிரத்து முன்னூறு மட்டும். ரூ.8,300/- | 10.10.90 பிற்பகல் 3.30 மணி. | ரூ.8,30,000/- | 10.10.90 புதன்கிழமை நண்பகல் 12.00 மணி. |

2.0) ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் மேலே குறிப்பிட்ட தொகையினை பதிவு அஞ்சல் மூல மாகவோ அல்லது பணமாகவோ ஒப்பந்த எண்ணை குறிப்பிட்டு கணக்கு அதிகாரி (Accounts Officer) மேட்டூர் அனல்மின் திட்டம், மேட்டூர் மின் அமைப்பு வளாகம், மேட்டூர் அணை-1 அவர்களுக்கு செலுத்தி பெறப்பட்ட வாரிய இரசீதை அல்லது பண அஞ்சல் இரசீதை இணைத்து கீழே குறிப்பிட்டுள்ளவரின் அலுவலகத்திற்கு விண்ணப்பித்துக்கொள்வதின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். தாமதமாக பெறப்படும் ஒப்பந்தங்களும், வைப்புத்தொகையின்றி பெறப்படும் ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் நுண்கலை உதவியாளர் (Executive Assistant to Superintending Engineer/C.II/M.T.P.P. அவர்களால் பெறப்படும், ஒப்பந்தங்கள் Russian Erectors' Qrs.-ல் திறக்கப்படும்.

3.0) அஞ்சல் மூலம் அனுப்பும் ஒப்பந்த பிரதிகள் காணாமல் போனாலோ அல்லது கால தாமத மானாலோ அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

4.0) ஒப்பந்த பிரதிகள் மாற்றத்தக்கதல்ல.

